# இந்திய வரிப்பணமும் ஆங்கிலேய அரசாட்சியும்

ஆசிரியர் :
ஜே. ஸி. குமரப்பா

மொழி பெயர்ப்பாளர் :
மீ. விநாயகம்

சுதந்திர பாரத் வெளியீடு
நுங்கம்பாக்கம், சென்னை 6
1947

முதற்பதிப்பு ஆகஸ்ட், 1947


THE MADUR

[ விலை ரூ. 1-8-0 ]

Printed at Kabeer Printing Works, Madras MS. 524.
Published by Swathanthra Bharat Publications, MS. T. P. 470.

# பொருளடக்கம்


| அத்தியாயம் | | பக்கம் |
|---|---|---|
| | மொழிபெயர்ப்பாளரின் முன்னுரை ... | v |
| | முன்னுரை ... | ix |
| 1. | பூர்வ பீடிகை ... | 1 |
| 2. | கிழக்கு இந்தியக் கம்பெனி ... | 12 |
| 3. | விக்டோரியா ராணியின் அரசாட்சிக் காலம் ... | 17 |
| 4. | சமீப காலம் ... | 51 |
| 5. | அடகு பிடிக்கும் முறை ... | 59 |
| 6. | முடிவுரை ... | 77 |



ஜே. ஸி. குமரப்பா

# முன்னுரை

தனக்கு உரிமை இல்லாத பிறரின் பொருள்களைக் கண்டு பேராசை கொள்ளுகின்ற ஒருவன் அப்பொருள் களை அபகரித்துக் கொள்ளப் பல்வேறு தந்திரங்களைக் கைக்கொள்ளுகிறன். இவைகளில் சர்வ சாதாரண மாகக் கருதப்படுவது வழிமறித்தல். அதாவது பொருள் உள்ளவன் தனிவழியே போக நேரிடுங்கால் அவனை வழி மறித்துப் பயமுறுத்துவதால் அவன் தன்உயிருக்கு அஞ்சிப் பொருள்களை எறிந்துவிட்டு ஓட்டமெடுக்கிறன். இதற்கு அடுத்தபடியாகச் சொல்லக்கூடியது, வஞ்சகன் பொருளுள்ளவனை அண்டிச்சென்று தன்னை அவனுடைய நம்பிக்கைக்கு உரியவனுக முதலில் செய்து கொள்ளுதல்; இக் கபட நாடகத்திற்குப் பிறகு, தன் கைவரும் தொகை களைத் தன் சொந்தத்திற்கு உபயோகித்தல். மூன்ருவது தந்திரம் சாதாரணமாக வரவுசெலவுக் கணக்கு எழுது வோருக்குத் தெரிந்திருக்கக் கூடியதே. அதாவது பொய்க் கணக்கு எழுதுவது. வாங்காத சாமான்களை வாங்கிய தாகச் செலவு எழுதவும், விற்று வந்த தொகையைச் சரி யானபடி வரவு வைக்காமலும், சேமிப்புத் தொகையைச் சிறுகச் சிறுகச் சுரண்டுவதும், இன்னும் இதுபோன்ற பல்வேறு தந்திரங்களையும் பற்றிக் கேள்விப்பட்டிருக் கிறேம். நான்காவதாக: முதலாளியின் விலையுயர்ந்த பொருள்களை அற்பத் தொகைக்கு அடகுவைத்து உப யோகித்துக் கொள்ளுதல். கடைசியாக ஒரு சொத்திற்குத் தருமகர்த்தாவாக நியமிக்கப்பட்ட பிறகு, அச்சொத்துக் களை சுயநலத்திற்கு உபயோகித்தல். சொத்தின் உடை மைக்காரர்களுக்குக் காலணவும் கண்ணில் காட்டுவதில்லை.

இவை போன்று இன்னும் அநேக சூழ்ச்சிகளைப் பற்றி அடிக்கடி நாம் கண்டும் கேட்டும் வருகிறோம். மேலே சொன்னவை யாவும் ஒரு தனி நபரின் சொத்தை அபகரிப்பதற்கான தந்திரங்கள்.

பிரிட்டிஷார் நம் நாட்டுடன் கொண்டுள்ள தொடர்பைப்பற்றிச் சரித்திர பூர்வமாக ஆராயுமிடத்தே மேலே சொல்லப்பட்ட விபரீதச் சூழ்ச்சிகள் யாவற்றையும் தவறாது கையாண்டுள்ளதை நன்கு அறியலாம். இத்தந்திரங்கள் மட்டுமின்றி இன்னும் நவீனமான கொள்ளை முறைகளையும் இவர்கள் கண்டுபிடித்து அனுசரித்தும் வந்திருக்கிறார்கள் என்பது தெரியவரும்.

பிரிட்டிஷ் கஜானாவின் இரண்டாம் காரியதரிசியாகிய ஸர் வில்லியம் ஈடி, இங்கிலாந்து பாங்கியின் டிபுடி கவர்னர் மிஸ்டர் ஸி. எப். கோபால்ட், இங்கிலாந்திலுள்ள இந்தியா ஆபீஸின் பொருளாதார இலாகாத் தலைவர் மிஸ்டர் கே. ஆண்டர்ஸன், இங்கிலாந்து பாங்கின் நாணயமாற்று இலாகாவைச் சேர்ந்த மிஸ்டர் பி. எஸ். பேல் ஆகியவர்கள் சமீபத்தில் இந்தியாவுக்கு வந்துள்ள விஷயம் பற்றி நாம் அறிந்திருப்போம். இவர்கள் இந்தியாவுக்குத் திருப்பிச் கொடுக்கப்பட வேண்டிய 'ஸ்டர்லிங் பாக்கியை'ப்பற்றி இந்திய அரசாங்க அதிகாரிகளுடனும், ரிஸர்வ் பாங்கு அதிகாரிகளுடனும் கலந்து பேசப் போகிறார்களாம்.

இந்த 'ஸ்டர்லிங் கடன்' என்றால் என்ன? ஆங்கிலேயர்கள் இந்தியாவில் காலடி எடுத்து வைத்த நாள் முதல் இந்நாட்டின் திரவியங்களை மனம் போனபடி அள்ளிச்செலவு செய்திருக்கிறார்கள் என்பது உலகமறியும் உண்மை. இந்த ஊதாரிச் செலவின் பெரும்பாகத்துக்கு

இந்தியாவே பொறுப்பாளி என்று அடாவடியாகப் பொய்க் கணக்கும் எழுதியுள்ளார்கள். இவ்வாறு அவர்களே தயாரித்துள்ள வரவு செலவுக் கணக்கின்படி இன்று இங்கிலாந்து இந்தியாவிற்குப் பலகோடி ரூபாய்கள் திருப்பிக் கொடுக்க வேண்டி ஏற்படுகிறது. இதையே 'ஸ்டர்லிங் கடன்' என்கிறார்கள்.

இவ்வளவு கோடிக் கணக்கான ரூபாய்களை இந்த ஏழை இந்தியா எவ்வாறு கடன் கொடுக்க முடிந்தது என்பது ஒரு ரஸமான சரித்திரமாகும். இதை நாம் ஒவ்வொருவரும் விளக்கமாகத் தெரிந்து கொள்ள வேண்டியது அவசியம். "இன்று இங்கிலாந்திலுள்ள வனப்பு மிகுந்த மாளிகைகள் யாவும் ஏழை இந்தியர்களின் எலும்புகளைக் கொண்டு கட்டப்பட்டுள்ளன" என்று சொல்வது உண்மையாகும். இதையே இங்கு விளக்குவோம்.

15, பிப்ரவரி–'47<br>
மகன்வாடி,<br>
வர்தா, ம. மா.

ஜே. ஸி. குமரப்பா

முதல் அத்தியாயம்

## பூர்வபீடிகை

ஓர் அரசாங்கத்தின் பொருளாதார விவகாரங்களிலும், தனிப்பட்ட நபர்களின் பொருளாதார விவகாரங்களிலும் ஒரு முக்கியமான வித்தியாசமுண்டு. தனிப்பட்ட நபரின் வருவாய் முதலில் தீர்மானிக்கப்பட்டு விடுகிறது. இதற்குட்பட்டே அவன் செலவு செய்யக் கடமைப் படுகிறான். இவ்வரம்பை மீறுங்கால் கடன்வாங்க நேரிடுகிறது. அளவு கடந்து கடன் வாங்குவானாயின் அவைகளைத் திருப்பிக் கொடுக்க வகையில்லாதவனாகி 'இன்ஸால்வென்ட்' எனப் பெயர் சூடிக் கொள்வான். தனது வருமானத்தை விடக் குறைவாகச் செலவு செய்பவன் கையில் சிறிது சிறிதாகப் பணம் சேர்ந்து கொண்டே வரும்; இதையே முதல் என்கிறோம். இம்முதலைச் சேமித்து வைக்கலாம். அல்லது மேற்கொண்டு இதை விருத்தி செய்யவேண்டிப் பிறருக்குக் கடனாகக் கொடுத்து உதவலாம். செலவு செய்யப்படும் தொகை வருவாய்க்குச் சமமாக இல்லாத போது கணக்கில் துண்டுவிழுகிறது. அதிகச் செலவினால் ஏற்படும் வித்தியாசத்தைக் கடன் (பற்று) என்கிறோம். மற்றதை முதல் (வரவு) என்கிறோம். ஆகவே தனிப்பட்ட ஒரு நபரின்

வருமானத்தைக் கொண்டு அவனுடைய செலவுகளை யும், பற்று, வரவையும் தீர்மானித்து விடமுடியும்.

அரசாங்கத்தின் பொருளாதார விவகாரங் களோ இதற்கு நேர் எதிரிடையானது. ஓர் அர சாங்கத்தின் செலவுகளைக் குறித்தே அதன் வருமா மானம், கடன் முதலியன தீர்மானிக்கப்படும். நாட் டின் முன்னேற்றத்திற்கான தொகைகள் முதலில் செலவு செய்யப் படுகின்றன. இச் செலவு தொகை யைச் சிறுகச் சிறுக ஜனங்களிடமிருந்து வசூலிக் கிறார்கள். இதுவே அந்நாட்டின் வருமானமாகும். நாட்டின் செலவுகள் யாவும் தக்க முறையில் ஜனங் களின் நன்மைக்காகச் செலவு செய்யப்படுதல் அவசி யம். அவ்வாறு செய்யப்படாத செலவுகளை ஜனங் களிடமிருந்து வரியென வசூலிக்கமுடியாது. செல வுக்குத் தகுந்த வருவாய் இல்லாது போகும். அந் நிலையில் அரசாங்கம் கடனாளியாக நேரிடும். நாட் டின் செலவை முதலில் தீர்மானித்துக் கொண்ட பின் அந்நாட்டின் வருவாயைப்பற்றி யோசனை செய்யவேண்டும். செலவு பூராவையும் ஜனங்களிட மிருந்து வசூலித்து விடமுடியுமா? அவ்வளவு வரி யும் ஜனங்கள் கஷ்டமில்லாது செலுத்தமுடியுமா? என்பவைகளைச் சிந்தித்து அறியவேண்டும். நாட் டின் செலவுகள் யாவும் ஜனங்களின் நன்மைக்காக இருந்தும், ஜனங்கள் வரிச்சுமையைத் தாங்கமாட் டார்கள் போலிருந்தால் தற்காலிகமாகக் கடன் வாங்குவதும் குற்றமாகாது.

தனிநபரைப்போல் அல்லாது அரசாங்கப் பொருளாதார விவகாரங்களில் செலவுகளைப்பற்றி முதலில் தீர்மானம் செய்து கொள்ளவேண்டி யிருக்கிறது. இச்செலவுகள் யாவும் ஜனங்களின் நன்மையைக் குறித்தும் நாட்டின் முன்னேற்றத்திற்கான முறைகளிலும் செய்யவேண்டும். இதற்குத் தேவையான வருமானத்தைத் தீர்மானித்து ஜனங்கள் ஒவ்வொருவரும் இவ்வளவு வரிசெலுத்த வேண்டும் என்று விதிக்கப்படுவார்கள். ஆகவே அரசாங்கப் பொருளாதார விவகாரத்தில் செலவுக்குத் தகுந்தவாறு வரி வசூலித்துக் கொள்ள முடிகிறது.

அரசாங்கம் செய்யும் செலவுகள் பூராவையும் அவ்வப்பொழுது வரியிலிருந்து ஈடு செய்துகொள்ள முடியாத சில சந்தர்ப்பங்கள் ஏற்படுவதும் உண்டு. பல வருடங்களுக்குப் பிறகு பலனளிக்கக்கூடிய செலவுகள் அடிக்கடி செய்யவும் நேரிடும். அது போன்ற செலவுகளுக்காக இப்பொழுதுள்ள ஜனங்களே வரி செலுத்திவிடவேண்டும் என்று விதிப்பது பொருத்தமாகாது. அதன் பலன்களை அனுபவிக்கவிருக்கும் வருங்காலத்து ஜனங்கள் இச் செலவை ஒத்துக்கொள்ளுவதே முறையாகும். தவிர இது போன்ற பெருஞ் செலவுகளை ஒரே தடவையில் ஜனங்களிடமிருந்து வசூலிக்கப் புகுமிடத்தே அவர்கள் பல இன்னல்களுக்கும் உள்ளாகக் கூடும். இதனால் நாடு சீர்கேடடையும். இது போன்ற சந்தர்ப்பங்களில் அரசாங்கத்திற்குக் கடன் வாங்கும்

படி நேரிடும். பின்பு இக்கடனைச் சிறுகச் சிறுக ஒவ்வொரு வருஷமும் கொடுத்து அடைக்கவேண்டும். மேலும், எதிர்பாராத சில விபத்துகளைத் தீர்க்க அரசாங்கத்தார் கடன் வாங்க வேண்டியது அவசியமாகிறது. பூகம்பம், பஞ்சம், சேதம், யுத்தம் போன்றவைகளால் ஏற்படும் கஷ்டங்களை நிவர்த்திக்க உடனே பணம் தேவைப்படுகிறது. இது போன்ற திடீர்ச் செலவுகளுக்கு வரியை நம்பமுடியாது. கடன் வாங்க வேண்டியதுதான் வழி.

முதலில் சொன்ன கடனுக்கும் பின்பு சொன்னதற்கும் வித்தியாசமிருக்கிறது. ஒன்றைப் 'பலன் அளிக்கும் கடன்' என்றும் மற்றதைப் 'பலன் அளிக்காத கடன்' என்றும் சொல்லுவார்கள். முதல் சொன்னதில் நாட்டின் முன்னேற்றத்திற்காகவும் ஜனங்களுக்கு அதிகமான சௌகரியங்களை அளிக்கவும் கடன் வாங்கப்படுகிறது. இதுகொண்டு செய்யப்பெறும் செலவுக்குப் பிரதிப் பிரயோஜனம் ஜனங்களுக்கும், நாட்டிற்கும் ஏற்பட்டு வருகிறது. உதாரணமாக அணைகட்டி விவசாய வேலைக்குத் சாதகமாகத் தண்ணீரைத் தேக்கி வைத்ததைச் சொல்லலாம்.

இரண்டாவதாகச் சொன்ன செலவின் மூலம் ஏதும் நிரந்தரமான பிரதிப் பிரயோஜனம் ஏற்படுவதற்கில்லை. அந்தச் சமயத்தில் திடீரென ஏற்பட்ட ஒரு விபத்தைப் போக்குகிறோம் என்பதே ஆறுதல். ஆகவே இதைப் பலனளிக்காத கடன் எனலாம்.

தற்கால அரசாட்சி முறையில் கணக்குத் திட்டம் செய்து கொள்ளுவது ஒரு முக்கியமான அம்சமாகிறது. ஒரு வருஷத்தில் செய்யப்பட வேண்டிய செலவுகளையும், அதற்குத் தேவையான வருமானத்தையும் முன்கூட்டியே சிந்தித்துத் தீர்மானித்துக் கொள்ளவேண்டும். ஜனங்களுக்கு அந்த வருஷத்தில் என்னென்ன நன்மைகள் செய்யப்படும் என்பது பற்றியும், அதற்காக அவர்கள் ஒவ்வொருவரும் எவ்வளவு வரி செலுத்த வேண்டும் என்பதையும் விவரமாக எடுத்துரைத்துவிட முடிகிறது. முறைப்படி அமைக்கப்பட்ட கணக்குத் திட்டத்தில் செலவுக்குத் தகுந்த வரவு காட்டப்பட்டிருக்கும். செலவு அதிகமாக இருந்து வருவாய் குறைவாக இருக்குமாயின் வித்தியாசப்படும் தொகையை வசூலிக்கக் கூடிய மற்றைய வரிகளைப் பற்றியும் விவரம் தெரியப்படுத்துதல் அவசியம். ஜனங்களிடமிருந்து கிடைக்க வேண்டிய வரித்தொகை அரசாங்க கஜானாவைச் சென்றடையத் தாமதப்படுமாயின் அதற்காகச் செலவுகளை நிறுத்திவைப்பது முடியாத காரியமாகும். ஆகவே தற்காலிகமான சில கடன்கள் வாங்க நேரிடுகிறது. இதை கஜானா 'பில்'கள் என்றும் சொல்லுவார்கள். குறிப்பிட்ட வரித்தொகை வந்து அடைந்ததும் இக்கடன்கள் தீர்க்கப்படும். ஆனாலும் இந்த கஜானா 'பில்' என்னும் குட்டிக் கடன்களுக்கும் வட்டி செலுத்த வேண்டும்.

உள்நாட்டிலுள்ள பணக்காரர்களிடமிருந்து கடன் வாங்கி, அவர்களுக்கு வட்டியும் கொடுத்து வருவார்களாயின் நாட்டின் பொருள் நிலையில் அதிக வித்தியாச மேற்படுவதற்கில்லை. நாட்டின் பணம் நாட்டினுள்ளேயே தங்கி இருக்கும். ஆனால் ஒரு சிறு கெடுதல் இதில் ஏற்படுவதற்கிருக்கிறது. அதாவது ஏற்கெனவே பணக்காரர்களாக உள்ளவர்கள்தான் அரசாங்கத்திற்குக் கடன் கொடுத்திருப்பார்கள். அவர்கள் கையில் அம்முதலுடன் வட்டியும் சென்று சேர்ந்தால் மேலும் அதிகப் பணக்காரர்களாக ஆகி விடுவார்கள். வரியோ ஏழை ஜனங்களிடமிருந்தும் வசூலிக்கப்படுகிறது. ஆகவே பல ஏழை மக்களின் பணம் இப்பணக்காரர்கள் கையில் சென்றடைவதால் ஜனங்களிடையே பொருளாதார ஏற்றத்தாழ்வு உண்டாகிறது. இது நிற்க; வெளி நாட்டினரிடமிருந்து கடன் வாங்கப்பட்டிருக்குமாயின் கடன்பட்ட தேசத்திற்கு நல்ல கதியே கிடையாது. கடன் கொடுத்தவர்கள் பல சலுகைகளையும் கோருவது இயற்கை.

"அடிக்கடி வெளிநாட்டாருக்குப் பணம் அனுப்பி வரும் அரசாங்கத்தார் அக்கடனையும் வட்டியையும் மட்டும் திருப்பிக் கொடுத்து வருகிறார்கள் என்பதற்கில்லை. அத்துடன் சில சலுகைகள் மூலம் இன்னும் பலவற்றையும் இழக்க நேரிடுகிறது. கடன் கொடுத்துள்ள நாட்டாரின் சட்ட திட்டங்கள் கடன் வாங்கியுள்ள நாட்டாருக்கு அனுகூலமாக இருக்கப்போவ

தில்லை. கடன்பட்ட நாட்டாரின் சாமான்களைக் குறைந்த விலையில் கொள்ளை கொள்வதிலேயே குறியாக இருப்பார்கள். மேலும் தம் நாட்டுச் சரக்குகளை அதிக விலைக்கு விற்கத் தலைப்படுவார்கள்" என்கிறார் ஜான் ஸ்டுவர்ட் மில்.

கடன் கொடுத்த நாட்டார் கடன்பட்ட அரசாங்கத்தின் பொருளாதார விவகாரங்களின் மீது அதிகாரம்பெற்று விடுவார்களாயின் பின்பு இந்நாட்டிற்கு ஏற்படப்போகும் கஷ்டநஷ்டங்களைச் சொல்லிடக்க முடியாது. நாணய மாற்றுதல், சரக்குகளை இறக்குமதிசெய்தல் முதலியவற்றில் பலவிதமான சூதுகளைச் செய்தே வருவார்கள்.

எப்பொழுதாவது அரசாங்கத்திற்கு ஏராளமான தொகைக்குத் தேவை ஏற்படுவது உண்டு. இதைக் கடனாக வாங்கினால் திருப்பிக்கொடுக்க முடியாமலும் போய்விடலாம். மேற்கொண்டு இதற்காகப் பல வருஷங்கள் வரை அநாவசியமாக வட்டி கொடுக்கவும் அரசாங்கம் விரும்பாமலிருக்கலாம். அதுபோன்ற சந்தர்ப்பத்தில் அரசாங்கத்துக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரம் காரணமாகப் பல பணக்காரர்களின் பொருள்களை ஆக்ரமித்துக் கொள்ளவும் உரிமையுண்டு; அல்லது பல பணக்காரர்களிடமிருந்து வசூலித்துக் கொள்ளக் கூடும். இது போன்ற வருவாய்கள் வழக்கப்படியுள்ள வரித் தொகையைவிட அதிகமாக இருந்தபோதிலும் அவைகளைக் கடன் என்று சொல்லமுடியாது.

ஆனல் சர்க்காரின் வருமானம் குறைந்து சாதாரணச் செலவு அதிகமாகித் துண்டு விழுந்தால் அதை வட்டிக் கடனுக்கக் கூடாது.

அரசாங்கத்தார் கடன் வாங்குவது என்பது சமீப காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட வழக்கமாகும். வியாபாரப் பெருக்கம் அதிகமாகி வியாபார நாணயக் கடன்கள் மிகுதியாகப் பழக்கத்திற்கு வந்தது முதல் அரசாங்கக் கடன்களும் முளைத்திருக்கவேண்டும். இதற்கு முன்பு அரசர்களுக்குப் பணத் தேவை ஏற்படுமாகில் அவர்கள் கோயில்களிலோ, இதர பொதுஸ்தாபனங்களிலோ உள்ள மூலதனத்தை எடுத்து உபயோகித்துக் கொண்டார்கள்.

பொது ஜனங்களின் விருப்பத்திற்கிணங்க அமைக்கப்பட்டுள்ள அரசாங்கத்தார் நாட்டின் நலனைக் குறித்து வாங்கியுள்ள கடனை 'தேசியக் கடன்' என்று சொல்லுவது மரபு. இதில் கடன் கொடுத்துள்ளோர் பெரும்பாலும் அந்நாட்டு மக்களாகவே இருப்பார்கள். அரசாங்கத்திற்கும், பொது ஜனங்களினிடையேயும் இந்த நெருங்கிய தொடர்பு இல்லாத பக்ஷத்தில் அரசாங்கத்தார் வாங்கிய கடன்களைத் 'தேசியக் கடன்' என்று சொல்லுவதில்லை. அதைப் 'பொதுக் கடன்' என்று மட்டுமே வழங்குவார்கள்.

இந்தியாவில் வெகு சமீப காலம் வரை பொதுக் கடன் என்ருல் என்ன என்றே தெரியாது. இதற்கு

மூந்திய காலத்தில் அரசர்கள் தனியான முறையில் கடன் வாங்கினார்களானால் அது அவர்களுடைய சொந்தப் பற்று வரவாகவே கருதப்பட்டு வந்தது. அக்கடன் தொகை பூராவையும் அவர்களே அடைக்க வேண்டும். அரசனின் கடனிற்காக பிரஜைகள் பொறுப்பாளி யாகமாட்டார்கள்.

கிளைவின் காலத்தில் இந்திய அரசாட்சி கம்பெனியார்களின் கையில் இருந்துவந்தது. இது பெரும்பாலும் ஒரு வியாபார ஸ்தாபனம். அவ்வமயம் சிற்சில இடங்களை ஆளவும், வரிவசூல் செய்யவும் இவர்கள் உரிமை பெற்றிருந்தார்கள். வியாபாரிகளுக்கு லாபத்தில்தான் கண்ணிருக்கும். அது போல் இக் கம்பெனியார்களும் இந்தியாவில் கிடைத்துள்ள அதிகாரத்தைக் கொண்டு சுயநலத்திற்காக எவ்வளவு லாபம் சம்பாதிக்கமுடியுமோ அவ்வளவையும் தேடிக் கொண்டார்கள். இவ்வாறு திரட்டிய லாபங்களை இந்தியாவைவிட்டு வெளியேற்றி இங்கிலாந்து கொண்டுசேர்த்தார்கள். அவ்வமயம் இந்திய அரசாங்கச் செலவுக்காகக் கடன் வாங்க ஏதும் சந்தர்ப்பமேகிடையாது. இந்நாட்டில் பணம்படைத்த பெரிய பெரிய ஜமீன்தார்கள், நவாபுகள் ஏராளமாக இருந்து வந்தனர். நாட்டின் செலவுக்காகப் பொருள் தேவைப்பட்டிருந்தால் அவர்களின் பணத்தைப் பிடுங்கி உபயோகித்துக் கொண்டிருக்கலாம். இந்தியாவின் நிலைமை இவ்வாறிருக்க இங்கிலாந்தின் நிலைமையும் தெரிந்துகொள்ள வேண்டுமல்லவா?

இங்கிலாந்தின் பொருளாதாரநிலை மிகவும் கேவலமாக இருந்து வந்தது. புருக் ஆதம் என்னும் ஆங்கிலேயரின் அபிப்பிராயத்தையே கவனிப்போம் * "சுமார் 1750-ம் வருஷத்தில் இங்கிலாந்தின் இரும்புத் தொழில்கள் யாவும் தலை கவிழ்ந்திருந்தன. அங்கிருந்த காடுகள் யாவும் விறகுக்காக வெட்டி அழிக்கப்பட்டிருந்ததே இந்நிலைமைக்குக் காரணமாகும். அவ்வமயம் இங்கிலாந்துக்குத் தேவையான இரும்பில் ஐந்தில் நாலுபாகம் ஸ்வீடனிலிருந்து இறக்குமதியாகிக் கொண்டிருந்தது. சுமார் 1760க்கு முன்பு லங்காஷயரிலிருந்த நெசவுக் கருவிகள் யாவும் தற்போது இந்தியாவில் காணப்படுவன போன்று இருந்து வந்தன." ஆராய்ச்சி செய்து புதியபுதிய மெஷின்களைக் கண்டுபிடிக்கக்கூடிய திறமை வாய்ந்தவர்கள் பலர் அவ்வமயம் வாழ்ந்து வந்தனர். ஆனால் என்ன பிரயோஜனம்? அவர்கள் கண்டுபிடிப்பதைக் காரியாம்சத்தில் செய்துகாட்டத் தேவையான பணம் அந்நாட்டில் கிடையாது. புதிய விஷயங்களைப் பற்றி மனது நினைக்கக்கூடும்; மூளை யோசனை செய்து வழிதேடக்கூடும். ஆனால் அந்த வழியை முறைப்படி கிரியாம்சையில் அமைக்கக் கைகளில்லாவிடில் எல்லாம் வீணே.

ஆராய்ச்சியாளர்களின் பிரயாசையாவும் வீணாகிக்கொண்டு வந்தன. பிளாஸி யுத்தத்திற்குப் பிறகு

* Law of Civilization and Decay, பக்கம்—313.

ஏராளமான பணம் இங்கிலாந்துக்கு வந்துசேர வழி ஏற்பட்டது. அதன் பின்னரே இவ்வாராய்ச்சிக ளுக்குக் கதி மோக்ஷம் கிடைத்தது. கம்பெனி அர சாங்கத்திற்குப் பிறகு ஆங்கிலேயர்கள் பொறுப்பு ஏற்றுக் கொண்டார்கள். ஆனல் பொது ஜனங் களின் நம்பிக்கையைப் பெறவில்லை. ஆகவே இதை முறையான அரசாங்கம் என்று சொல்லமுடியாது. இவர்கள் தற்காலிகமான பொறுப்பாளிகளே. ஆனு லும் தங்களின் கடமைகளை உணர்ந்துகொள்ளாது கம்பெனியாரின் நடவடிக்கைகளையே மேற்கொண் டார்கள். இத்துடன் மட்டும் நில்லாது அவ்வப் பொழுது ஏற்படும் தேவைக்குத் தகுந்தாற்போல் தங்களின் விவகாரங்களையும் மாற்றி அமைத்துக் கொண்டே போனர்கள். நாட்டின் வரவு செலவு கள் பற்றிச் சரியான கட்டுப்பாடுகள் ஏதும் செய்யப் படவில்லை. 1861-ம் வருஷம் முதல் சில உபயோக மற்ற கமிட்டிகளைத் தொடங்கி வைத்தார்கள். இவை களைக்கொண்டு ஜனநாயக முறைப்படி ஆட்சி செய் வதாக ஜாலம் செய்தார்கள். 1909-ம் வருஷம் வரை நாட்டின் வரவு செலவு திட்டக் கணக்குகளை இவர் களால் நியமிக்கப்பட்ட இந்தக் கமிட்டிகளுக்கும் காட்ட வில்லை. அதற்குப் பிறகு சிற்சில கணக்கு களைப்பற்றி மட்டும் விவாதிக்க அனுமதி தரப்பட் டது. 1920 முதல் நாட்டின் மொத்தச் செலவின் கால்பாகத்தை மட்டும் ஜனங்களின் அனுமதியின் மேல் செலவு செய்வதாக ஒப்புக் கொண்டார்கள்.

அன்றுமுதல் இன்றுவரை நாட்டின் பொருளாதார விவகாரங்கள் யாவும் பொறுப்பற்ற சில அதிகாரிகளின் கையில் ஒப்படைக்கப் பட்டிருக்கிறது. சென்ற வருஷம் இடைக்கால சர்க்கார் அமைக்கப் பட்டதும் ஜனங்கள் பல்வேறு சீர்திருத்தங்களை எதிர்பார்த்தார்கள். ஆனால் ஒன்றும் நடத்த முடியவில்லை. இப்பொழுது அரசாங்கம் அமைக்கப்பட்டுள்ள நிலைமையில் இப்பிரதிநிதிகளின் வலதுகை செய்வதை இடதுகையும் அறிய முடிவதில்லை.

## இரண்டாவது அத்தியாயம்

# கிழக்கு இந்தியக் கம்பெனி

### வழிமறித்தல்

இக் கம்பெனியார் இங்கு வந்த காலத்தில் கையில் கிடைத்ததை எல்லாம் பிடுங்கி வெளியேற்றி வந்தார்கள். கபடமான முறையில் திருட வேண்டுமென்று ஏற்படவில்லை. வெட்ட வெளிச்சமாகவே கொள்ளையடித்து வந்தார்கள். பிளாஸி யுத்தத்திற்குப் பிறகு இருந்துவந்த நிலைமையை மெகாலே கீழே கூறியுள்ளவாறு வர்ணிக்கிறார் :—*

" இக்கம்பெனியின் மீதும், அதன் அதிகாரிகள் மீதும் தனமானது மழையைப் போல் கொட்டிக் கொண்டே இருந்தது. எட்டு லக்ஷம் பவுன்கள்

* Essay on Lord Clive Vol. iii, பக்கம் 240

பெறுமானமுள்ள வெள்ளி ரூபாய்கள் மூர்ஷிதா பாத்தினின்று கல்கத்தாவிலுள்ள வில்லியம் கோட்டைக்கு நதிமார்க்கமாக அனுப்பப்பட்டது. அது வரை காய்ந்து கிடந்த கல்கத்தா இப்பணம் கிடைத்தவுடன் ஒளிபெற்று, ஆடம்பரமடைந்து விட்டது. உடனே இங்கிலாந்திலும் சுருசுருப்பு உண்டாயிற்று. தலைகீழாகப் படுத்திருந்த வியாபாரங்கள் மறுபடியும் ஆரம்பிக்கப்பட்டன. ஆங்கில ஜனங்களுக்கு மீண்டும் மூச்சு வந்து விட்டதாகவே காணப்பட்டது. எங்கும் பண நடமாட்டம் அதிகமாயிற்று. தன் மனம் திருப்தி அடையும்வரை கிளைவும் திரவியம் சேகரித்துக் கொண்டார். இவரைத் தடுக்கவோ, எதிர்க்கவோ அங்கு யாரும் கிடையாது."

ஆங்கில சாம்ராஜ்யத்திற்கு இந்தியாவில் அடி கோலிய இக் கிளைவ் இங்குக் கொள்ளை அடிக்கும் முறையை முதலில் ஆரம்பித்து நடத்திவைத்தான். இவ்விடம் கொள்ளைகொண்ட திரவியம் முழுவதும் இங்கிலாந்து சென்று அடைந்தது. அந்நாட்டிற்கும் போதுமான மூலதனம் கிடைத்தது. மூன்றே வருஷத்திற்குள் சீர்திருத்தப்பட்ட தறி (Fly Shuttle) வெளிக் கொண்டுவரப்பட்டது. அடுத்த நான்கு வருஷங்களுக்குள் புதிய நூல் நூற்கும் இயந்திரம் (Hargreaves Spinning Jenny) வெளிவந்தது. 1768ல் வாட் என்பவர் நீராவி என்ஜினை நிர்மாணித்தார். 1778ல் கிராம்டன் என்பவர் கண்டு பிடித்த "மியூல்" என்ற நெசவு இயந்திரம் வெளிவந்தது.

விசையினல் இயக்கப்படக்கூடிய தரி 1785-ல் 'பேடன்ட்' செய்து கொள்ளப்பட்டது. இதுவே இங்கிலாந்தில் கைத்தொழில் முன்னேற்றத்திற்கும் இந்தியாவின் கைத்தொழில் பிற்போக்கிற்கும் அடிப்படையான இதிகாசச் சுருக்கமாகும். ஆராய்ச்சியாளர்களின் யுக்திகளைக் காரியாம்சத்தில் செய்து பரீக்ஷிக்கத் தேவையான மூலதனம் இவ்வாறு இந்தியாவினின்றே கொள்ளையிட்டுக் கொண்டு போகப்பட்டது.

* "உலகம் தோன்றிய நாள்முதல் எத்தகைய தொழிலும் பிரிட்டிஷார் இந்தியாவில் நடத்திய கொள்ளையைப்போல் இவ்வளவு அளவற்ற லாபத்தை அளித்ததே கிடையாது; சுமார் ஐம்பது வருஷங்கள் வரை இவர்களுக்கு ஒருவிதமான போட்டியும் இல்லாது ஏகபோகமாக அனுபவிக்க முடிந்தது."

1750-ல் இங்கிலாந்தில் ஒரு வட்டிக்கடையும் இருக்கவில்லை. ஆனல் 1790-லோ ஒவ்வொரு வியாபாரஸ்தலத்திலும் ஏராளமான வட்டிக் கடைகள் ஏற்பட்டு விட்டன. [1]"வங்காளத்திலிருந்து வந்த ஏராளமான வெள்ளியின் மூலம் இங்கிலாந்தின் தனம் அதிகரித்ததோடு அல்லாமல் பணத்தின் நடமாட்டமும் பெருகிற்று. 1759-ல் 10, 15 பவுன்

* Brook Adam's Law of Civilization and Decay, Page 317

[1] Law of civilization & Decay, Page 319.

களுக்கு நோட்டுகள் அச்சடித்து வெளியிடப்பட்டன. கிராமாந்தரங்களிலும் இந்த நோட்டுகள் ஏராளமாகப் புழக்கத்திற்கு வந்தன."

[2] ஏறக்குறைய பிளாஸி யுத்தம் ஆரம்பித்தது முதல் வாடர்லூ யுத்தம் முடியும் வரை சுமார் பத்தாயிரம் லக்ஷம் பவுன்கள் மதிப்புள்ள இந்திய திரவியம் இங்கிலாந்து பாங்குகளுக்குச் சென்றிருக்கின்றது. அந்தச் சமயத்து ரூபாய்களுக்குத் தற்கால ரூபாய்களை விடப் பல மடங்கு அதிகமான மதிப்பு இருந்து வந்தது. ஆகவே இவர்கள் கொண்டு சென்ற இந்தக் கணக்கற்ற தொகையின் மதிப்பை ஊகித்துப் பாருங்கள். இவ்வளவு தொகையையும் கொண்டு போனார்களே, அவைகளைத் திருப்பிக் கொடுக்கும் எண்ணத்துடன் எடுத்துச் சென்றார்களா? அதுதான் இல்லை. ஏனெனில் இவ்வளவு தொகையையும் அவர்களின் நாட்டுக்கு வேண்டிய 'கடனாக' எடுத்துச் சென்றிருந்தால் இவர்களின் தேசியக்கடன் ஏராளமாக இருக்க வேண்டாமா? 1815-ம் வருஷத்துப் புள்ளிவிவரப்படி இந்நாட்டாரின் தேசியக்கடன் சுமார் 8610 லக்ஷம் பவுன்கள் என்று கணக்குக் காட்டுகிறார்கள். அதற்கு முன் 50 வருஷமாக இந்தியாவிலிருந்து எடுத்துச் சென்ற தொகையில் இது மிகச்சிறு அளவே யாகும்.

---

[2] William Digby's 'Prospectus' British India - Page 33.

முதல் விழுங்குதல்

மேலே சொன்னவை எல்லாம் வெட்டவெளிச்சமாக, சற்றும் கூச்சமின்றிக் கொள்ளை கொண்ட காலம். இவ்வளவு கொள்ளை அடித்துப் பணக்காரர்கள் என்ற கௌரவமான பட்டம் கிடைத்திருக்கிறது. முன்போல தங்கள் வேலையை வெளிப்படையாகச் செய்துவர சங்கோசப் பட்டார்கள். ஆகவே இந்த இரண்டாவது முறையைக் கையாளத் தொடங்கினார்கள். இந்தியாவில் கிடைத்த வரிவகைகளைக் கொண்டு வியாபாரச் சரக்குகளை வாங்கி இங்கிலாந்துக்கு ஏற்றுமதி செய்து வந்தார்கள். இந்த வியாபாரச் சரக்குகள் முழுதும் கம்பெனியார்களின் சொந்தப் பொருள்களாகக் கருதப்பட்டன. முதலில் சொன்ன முறைக்கும், இந்தப் புதிய முறைக்கும் வித்தியாசம் என்ன என்றால், முன்பு பணமாகக் கொண்டுபோனார்கள் என்பதே. இரண்டும் சந்தேகமில்லாமல் கொள்ளைதான்.

கம்பெனியார்கள் இவ்வளவு ஏராளமான திரவியங்களை இங்கிருந்து அள்ளிச்செல்ல முடிந்ததால் இந்தியாவுக்குப் பொதுக்கடன் உண்டாகி இருக்கக் காரணமே இல்லை. சற்று கௌரவமான முறையில் இந்திய திரவியங்கள் யாவற்றையும் இங்கிலாந்து பாங்குக்குக் கொண்டு சேர்த்தார்கள். கம்பெனியார் இந்தியாவின் அரசாங்கம் நடத்தும் பொறுப்பு ஏற்றிருந்தார்கள். குடிபடைகளிட மிருந்து வசூலிக்கப்படும் வரியானது திரும்ப அவர்களின் நலனிற்

காகவும் தேச முன்னேற்றத்திற்காகவும் செலவு செய்யப்படவேண்டும். நாட்டின் வரியை மனம் போனபடி செலவு செய்தல் நீதியான அரசுமுறை ஆகாது. அப்படி இருக்க கிடைத்த வரி யாவற்றை யும் வியாபாரச் சரக்குகளாக மாற்றி வெளிநாடு அனுப்பிவைப்பது என்பது மிக்க கொடுமையான தேசத் துரோகமாகும். இதனல் குடிபடைகள் மிகவும் அல்லலுற்ருர்கள். ஒவ்வொரு தடவையும் வரி செலுத்திஞர்களே ஒழிய அதற்குப் பிரதி உப காரமாக அரசாங்கத்தாரிடமிருந்து யாதொரு நலனை யும் பெற்ருர்களில்லை. *1793 முதல் 1812 வரை யில் வருஷம் ஒன்றுக்குச் சராசரி 130 லக்ஷம் பவுன் கள் வீதம் இவ்வரிப்பணம் நாடுகடத்தப் பட்டிருக்கி றது.

மூன்றும் அத்தியாயம்

## விக்டோரியா ராணியின் அரசாட்சிக் காலம்

### பொய்க்கணக்கு

பணம் எவ்வாறு சேர்க்கப்பட்டிருந்தால் என்ன? இங்கிலாந்து ஒரு பெரிய சம்பத்தைச் சேர்த்து விட்டது. சாம்ராஜ்ய நாடாகி விட்டது. கௌரவம் அதிகரித்துக்கொண்டே வந்தது. நாகரிக மடைந்த இந்த விக்டோரியா மகாராணியின் காலத்

* Minutes of Evidence on the affairs of the East India Company 1813.

திலும், கிளைவும், கிழக்கு இந்தியக் கம்பெனியார்களும் வெளிப்படையாகக் கையாண்டுவந்த படுகொள்ளைகளைச் செய்ய முடியுமா? ஆகவே இன்னும் சற்று கௌரவமுள்ளவர்களாகக் காட்டிக் கொள்ள விரும்பினார்கள். யோக்யர்களாகி அதிகமான கௌரவம் சம்பாதித்துக் கொள்ளலாம் என்றால் பின்பு சாப்பாட்டுக்கு என்ன செய்வது? இந்தியாவின் தனம் திருட்டுத்தனமாக வராவிட்டால் இங்கிலாந்து உயிர்வாழ முடியாது. ஆதலால் புதிய முறை ஒன்றைக் கண்டுபிடித்தார்கள். அதுதான் பொய்க் கணக்கு எழுதும் முறை.

இதன் மூலம் பணத்தையோ, வியாபாரச் சரக்குகளையோ நாடுகடத்தவேண்டிய அவசியம் கிடையாது. நியாயமாக இங்கிலாந்து சர்க்கார் செய்ய வேண்டிய செலவுகளில் பெரும்பாகத்தை இந்தியாவின் கணக்கில் எழுதி வந்தார்கள். அனுசரிக்கும் முறை எதுவாக இருந்தாலும் அதன்பலன் ஒன்றுதான். இப்பொய்க் கணக்கு மூலம் இந்தியாவுக்குக் கடன் ஏற்பட்டுவிட்டதைத் தெரிவித்தார்கள். இக் கடனைத் தீர்க்க இந்தியாவின் வரிப்பணங்களை உபயோகித்துக் கொண்டார்கள். வரி கொடுத்த குடிபடைகள் ஏங்கி நின்றார்கள். இதன் மூலம் இங்கிலாந்துக்குப் பணச்செலவு குறைந்தது. அந்த ஜனங்கள் நலமடைந்தனர். இது மாதிரி எழுதப்பட்ட பொய்க்கணக்கே இன்று "பொதுக்கடன்" என்று வழங்கப்படுகிறது.

இங்கிருந்த அரசாங்கம் ஜனநாயகமான முறையில் அமைக்கப்படவில்லை; ஆகையால் இது "தேசியக் கடன்" ஆகாது. இங்குக் காட்டப்பட்ட கடன் பூராவும் "பொதுக் கடன்". சர்க்காரின் புள்ளிவிவரப்படி 1926-ம் வருஷ மார்ச்சு மாதக் கடைசி வரையில் ஆயிரம் கோடி ரூபாய் பொதுக் கடன் என்று காண்பிக்கப்படுகிறது. அதன் விவரமானது:—

இந்தியாவில்:

| | கோடி | லக்ஷம் |
|---|---|---|
| கடன் வகையரு | 368 | 29 |
| கஜானு பில் | 49 | 65 |
| பிற்காலத்திற்கான சேமிப்பு போஸ்ட் ஆபீஸ் சேவிங்ஸ் பாங்குகளிலிருந்து | 94 | 55 |
| இங்கிலாந்தில் | 513 | 29 |
| 1025 கோடியே 78 லக்ஷம். | 1025 | 78 |

பில்கள், தற்காலிகக் கடன் வகைகளை விட்டுவிட்டு பாக்கிக் கடன்களை மட்டும் கவனிக்குமிடத்தே:—

| | கோடி | லக்ஷம் |
|---|---|---|
| 'பலனளிக்கும் கடன்' | 737 | 18 |
| 'பலனளிக்காத கடன்' | 221 | 88 |
| 959 கோடியே 6 லக்ஷம். | 959 | 06 |

மேலே சொன்ன 'பலனளிக்கும் கடன்' களின் விவரம்:—

| | கோடி | லக்ஷம் |
|---|---|---|
| ரயில்வேக்களுக்காக | 626 | 06 |
| பாசன வசதிகளுக்காக | 86 | 04 |
| தந்தி, தபால் வகைகளுக்கு | 13 | 00 |
| காடுகள், உப்பு முதலியவற்றிற்கு | 2 | 08 |
| 737 கோடியே 18 லக்ஷம். | 737 | 18 |

மேலே கொடுக்கப்பட்டுள்ள புள்ளி விவரங்களின் அர்த்தமென்னவென்றால்:—அந்தத் தேதி வரையிலும் வசூலிக்கப்பட்ட வரித் தொகைகளைவிட ஒரு ஆயிரம் கோடிரூபாய் மேற்கொண்டு செலவு செய்யப்பட்டுள்ளது என்பதே. இப்புள்ளி விவரங்களை மேற்கொண்டு பரிசோதிக்கப் புகுமிடத்தே சில வற்றிற்கு ஆதாரம் கிடைப்பதில்லை. இன்னும் பல செலவுத் தொகைகளை நம்ப முடிவதில்லை. முன் சொன்னது போல் இவை யாவும் பொய்க் கணக்கினால் நிர்மாணிக்கப்பட்டவை அல்லவா? வரிவசூல் எவ்வளவு ஆயிற்று? செலவு என்ன? பாக்கி வாங்கப்பட்ட கடன் என்ன? என்ற விவரங்கள் காணப்படுவதில்லை. எங்கேயோ செலவான தொகையை இங்கிருந்து எடுத்து ஈடு செய்யப்பட்டது என்று இருக்கிறது. வரிவசூலானதில் ஏராளமான பாக்கி நின்றிருக்கிறது. இவை யாவற்றையும் கடன் கொடுக்கப்பட்டது என்று எழுதி இவர்கள் விழுங்கி இருக்கிறார்கள். 'பலன் அளிக்காத கடன்' என்று

காட்டப்பட்டிருக்கும் தொகை பெரும்பாலும் இது போல் விழுங்கப்பட்ட முதலாகும். இக் கணக்குகள் யாவற்றையும் பரிசீலனை செய்து புதிதாகப் புள்ளிவிவரம் தயாரிப்போமாயின் இந்தியாவில் வசூலிக்கப்பட்ட வரிகளில் மிச்சப்பட்ட தொகை யாவும் ஒன்று சேர்ந்து இந்த ஆயிரம் கோடிரூபாய் கடனை விடப் பல மடங்கு அதிகமாகிவிடும். இந்தத் தொகையை இப்பொழுது தீர்மானிக்க முடியாது என்றே விட்டு விடுவோம். ஆனால் செலவு எழுதி இருக்கிற கணக்குகளைப் பெயர்த்து அவையவைகளுக்கு நியாயமாக உரியவர்களின் கணக்கில் எழுதுவது அவசியமாகும்.

இது போல் இந்தியாவின் கணக்கில் எழுதப்பட்ட சில செலவுகளைப்பற்றிய விவரத்தைக் கவனியுங்கள் :—

| | | |
|---|---|---|
| 1. முதலாவது ஆப்கானிய யுத்தம் | 120 | லக்ஷம் பவு. |
| 2. இரண்டாவது பர்மாயுத்தம் | 140 | ,, |
| 3. சீனா, பர்ஸியா முதலிய இடங்களில் படையெடுத்துச் செல்ல | 60 | ,, |
| 4. சிப்பாய்க் கலகச் செலவு | 400 | ,, |
| 5. கம்பெனியாரின் முதல், லாபம் முதலியவற்றைத் திரும்பப் பெற்ற வகையில் | 370 | ,, |
| | 1,090 | ,, |

## ஆப்கானிய யுத்தம்

இது இங்கிலாந்து சர்க்காரால் ஆரம்பிக்கப்பட்டது. கிழக்கு இந்தியக் கம்பெனியார்கள் இந்த யுத்தத்திற்குச் சம்மதிக்கவில்லை. அப்படி இருந்தும் இந்த யுத்தத்திற்காகச் செலவான முழுத்தொகையும் இந்தியாவின் கணக்கில் எழுதப்பட்டிருக்கிறது. இது சம்பந்தமாக ஸர் ஜார்ஜ் விங்கேட் என்பவர் எழுதுவதாவது :—"இந்த ஆப்கானிய யுத்தம் குறிப்பிடக் கூடிய சம்பவமாகும். கம்பெனியின் டைரக்டர்களைக் கேட்காமல், அவர்களின் விருப்பத்திற்கு விரோதமாக இது இங்கிலாந்து சர்க்காரால் தொடங்கப்பட்டது. நியாயமாகக் கவனிக்குமிடத்தே இந்த யுத்தத்திற்கும் இந்தியர்களுக்கும் யாதொரு சம்பந்தமும் கிடையாது. இது முற்றிலும் இங்கிலாந்தின் விவகாரமாகும். கம்பெனியின் டைரக்டர்கள் ஒருமுகமாக இந்த யுத்தத்தை எதிர்த்தார்கள். இன்னும் கம்பெனியின் சொந்தக்காரர்கள் ஒன்றுகூடி இச் செலவுகளை இந்தியாவின்மீது சுமத்தக் கூடாது என்ற ஒரு தீர்மானத்தையும் நிறைவேற்றினார்கள். ஆனால் இவை யாவும் செவிடன் காதில் ஊதிய சங்கு ஆயின. இங்கிலாந்தின் மந்திரிகள் இந்தியப் பணத்தை அபகரிக்க வேண்டும் என்று நினைத்தார்கள். அதை நிறைவேற்றியும் கொண்டார்கள்."

1842ம் வருஷம் ஏப்ரல் மாதம் 6ம்தேதி கிழக்கு இந்தியக் கம்பெனியின் தலைவரும், உபதலைவரும் இக் கொடுமையை ஆட்சேபித்து லார்ட் பிட்ஸ்

கிரால்ட் என்பவருக்கு எழுதிய கடிதம் பின் வருமாறு உள்ளது :—

" விளக்கப்பட்ட காரணங்களைக் கொண்டு அனுமானிக்குமிடத்தே இந்திய தேசத்தின் சார்பாக இந்த ஆட்சேபத்தைத் தெரிவித்துக்கொள்ளுதல் எங்களின் கடமையாகிறது. இந்தியாவுக்கு நியாயமான முறையில் எந்த விதமான சம்பந்தமுமில்லாத இந்தச் செலவு முழுவதும் கணக்கினின்று அகற்றப்பட வேண்டும். ஸிந்து நதியின் அக்கரையில் செய்யப்படும் எந்த விதமான படையெடுப்பும் இந்நாட்டிற்குத் தேவையானதல்ல. ஆகவே அது போன்ற யுத்தங்கள் எதற்காக நடத்தப்பட வேண்டும் என்று ஆங்கில அரசாங்கத்துக்கு நாங்கள் சவால் விடுவதாக எண்ணக் கூடாது. இருந்தும் இதுபோன்ற அநாவசியமான செலவுகளை இந்நாட்டின்மீது சுமத்துவது நியாயமாகாது. யுத்தச் செலவுடன் மட்டுமல்லாது அங்கு நிறுத்தப்படவிருக்கும் பட்டாளத்தின் செலவுகளையும் இந்தியாவின் கணக்கில் எழுதிவிட எண்ணுவதை நாங்கள் முற்றிலும் ஆட்சேபிக்கிறோம்."

1842ம் வருஷம் ஜூன் மாதம் 27ம் தேதி கிழக்கு இந்தியக் கம்பெனியின் பொது சபையில் கீழ்க்கண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது :—

" ஆப்கானிய யுத்தத்தில் ஆங்கிலேயர்கள் இறங்க நேரிட்ட காரணங்களைப் பற்றிய விவரங்கள் யாவும் பார்லிமென்ட் சபையில் தெரிவிக்கப்

பட்டன. அக் காரணங்கள் யாவையும் நன்று ஆராய்ந்து இச் சபையோர் தீர்மானிப்பது யாதெனில்: இந்த யுத்தத்திற்காகச் செய்யப்பட்ட செலவுகள் முழுவதையும் இந்தியாவின் வரிப்பணத்தினின்று கொடுக்கவேண்டுமென்பது நியாயமாகாது. அதன் ஒரு பாகத்தையாவது இங்கிலாந்து அரசாங்கம் ஏற்றுக்கொள்ள வேண்டும்."

ஆசியா கண்டத்தில் நடத்தப்பட்ட மற்றைய யுத்தங்களைப் பற்றி ஸர் ஜார்ஜ் விங்கேட் எழுதுவதாவது:—

"ஆங்கிலேய சாம்ராஜ்யத்தின் எல்லைகளுக்கு வெளியே ஆசியா கண்டத்தில் நடத்தப்பட்ட யுத்தம் யாவும் இந்திய அரசாங்கத்தின் ராணுவங்களைக் கொண்டும், இந்தியாவின் வரிப்பணத்தைக் கொண்டும் நடத்தப்பட்டிருக்கின்றன. ஆங்கிலேயர்களின் நன்மையைக் குறித்தே இதில் பெரும்பாலான யுத்தங்கள் தொடரப்பட்டுள்ளன. இந்தியாவுக்கும் இந்த யுத்தங்களுக்கும் யாதொரு சம்பந்தமும் கிடையாது. இவைகளால் இந்தியாவுக்கு ஏதும் நன்மை கிடையாது. இவைகளை நடத்த மூலகாரணம் இங்கிலாந்து. இங்கிலாந்திலேயே இந்தியா அரசாளப்பட்டு வந்திருக்கிறது. இந்திய அரசாங்கத் தலைவர் இங்கிலாந்தின் மந்திரிகளுக்கு உட்பட்டவர். அம் மந்திரிகள் சொல்வதை இவரால் நிராகரிக்க முடியாது. ஆகவே இங்கிலாந்து சர்க்கார் மேற்படி யுத்தங்கள் நடத்தப்பட வேண்டுமென்று உத்திரவிட்

டதும் இந்திய அரசாங்கம் மறுமொழி சொல்ல வழி இல்லாது இவைகளை நடத்த நேரிட்டது."

பாரஸீக தேசத்தில் நடத்தப்பட்ட யுத்தத்தைப் பற்றி அவர் சொல்லுவதாவது :—

"இங்கிலாந்தின் அரசாங்கத்தார் பின் பற்றி வந்த ராஜதந்திரம் காரணமாக இப்பாரஸீக யுத்தம் தொடரப்பட்டது. இந்தியநாட்டுக்கு இதில் சம்பந்தமே கிடையாது. இப்படி இருந்தும் இந்தியாவின் படைகளையும் பணத்தையும் கொண்டே இந்த யுத்தம் நடத்தப்பட்டது. இவ்வாறு ஆள் உதவியும், பண உதவியும் செய்து யுத்தத்தை நடத்திக் கொடுத்த இந்தியாவுக்கு இதனால் ஏற்பட்ட சேதங்களுக்குத் தகுந்த ஈடு அளிக்கப்பட வேண்டியது அவசியம். அதற்குப் பதில் இந்த யுத்தத்தின் சரி பாதிச் செலவை இந்திய அரசாங்கத்தினிடமிருந்து வசூலித்துக் கொண்டனர். இப்பாரஸீக யுத்த விஷயமாக மட்டும் இங்கிலாந்து இவ்வளவு நன்றியற்று நடந்து கொண்டது என்பதற்கில்லை. ஆசியா கண்டத்தில் புரியப்பட்ட ஒவ்வொரு யுத்தத்திற்கும் இந்தியாதான் ஆட்கள் உதவ வேண்டும். பண உதவியும் செய்ய வேண்டும். இது போதாததற்கு யுத்தச் செலவையும் ஒத்துக் கொள்ள வேண்டும் என்ற வழக்கத்தை ஏற்படுத்தி இருந்தார்கள். இது போன்ற ஈனத்தையும், அற்ப புத்தியையும் கொண்டே இங்கிலாந்து எவ்வளவு சுயநலம் கருதி இந்தியாவை ஆண்டு வந்தது என்பது தெற்றென விளங்குகிறது."*

*Our Financial relations with India. Page 17-19

## சிப்பாய்க் கலகம்

1859-ம் வருஷம் மார்ச்சு மாதம் ஜான் ப்ரயிட் என்பவர் இந்தியக் கடனைப் பற்றிப் பேசுகையில் கூறினர்:

"சிப்பாய்க் கலகத்தில் ஏற்பட்ட நானூறு லக்ஷம் பவுன் செலவையும் இந்திய ஜனங்களின் மீது சுமத்துவது அபாண்டமானது என எண்ணுகிறேன். இங்கிலாந்திலுள்ள பார்லிமெண்ட் செய்த அக்கிரமங்களினலேயே இக்கலகம் ஏற்பட்டது. நியாயத்தை நிதானித்து ஏற்றுக் கொள்ளக் கூடிய யாவரும் இந்த நானூறு லக்ஷம் பவுன் செலவையும் இந்தியாவின்மீது சுமத்தச் சம்மதிக்க மாட்டார்கள். இங்கிலாந்திலுள்ள ஜனங்களிடமிருந்து வரி வசூலித்தே இக்கடன் தீர்க்கப்பட வேண்டும்."

ஆங்கிலேயரின் ஒப்பிட முடியாத கேவலமான மனே விருத்தியையும், அரசாட்சியை மேற்கொண்ட நாள் முதல் சுயநலத்தையே அடிப்படையாகக் கொண்டுள்ள ராஜ்யப் பரிபாலனம் பற்றியும் ஸர் ஜார்ஜ் விங்கேட் என்பவர் விவரிப்பதைக் கவனியுங்கள் :—

"இக்கலகத்தினல் இந்தியாவின் பொருள்நிலை மிகவும் க்ஷீணித்திருந்தது. அதே சமயத்தில் இக்கலகத்தை அடக்குவதற்காக அனுப்பப்பட்ட ராணுவத்திற்கான முழுச்செலவையும் இந்தியா கொடுத்து விட வேண்டும் என்று விதிப்பது தகாது. அவர்களின் ராணுவம் இந்தியாவிற்குப் போகப் புறப்

பட்ட தினம் முதற் கொண்டு செய்யப்பட்ட செலவை மட்டுமா வசூலித்தார்கள்? அநியாயத்திற்கு ஒரு எல்லேயே இல்லாது, மனம் போனபடி, கப்பலேறிய தேதிக்கு முந்திய ஆறு மாதங்களில் நடந்துள்ள ராணுவச் செலவு முழுவதையும் வசூலித்து விட்டார்கள். இவ்வாறு அடாவடியாக வசூலிக்கப்பட்டதற்குக் காரணம் ஏதும் உண்டா என்று யோசனை செய்யுமிடத்தே முன்னொரு காலத்துக் கதை ஒன்று ஞாபகத்திற்கு வருகிறது. பிரனஸ் என்பவன் சுமார் 4-வது நூற்றாண்டில் ரோம் ராஜ்யத்தை ஜயித்து ஜனங்களை வதைத்துக் கொன்று பல அக்ரமங்களையும் செய்தான். இம்மூர்க்கனிடமிருந்து விடுபடுவதற்காக ஜனங்கள் அந்நாட்டிலுள்ள பொன்னில் ஓர் அளவு கொடுப்பதாக ஒப்புக் கொண்டார்கள். பொன் நிறுக்கப்படுகையில் அதில் ஏதோ சூது இருப்பதாக ஒருவன் கத்தினன். மூர்க்க பிரனஸ் இதைச் சகியாது, ரோமர்களைக் கொன்று பழிவாங்கிய தன் கனமான கத்தியையும் தராசில் எறிந்து அதற்குத் தகுந்த பொன்னும் வேண்டும் என்றனம். இந்த ஆங்கில சர்க்காரின் நியாயமும் இதே போல் இருக்கிறது. கலகம் ஆரம்பிக்குமுன் இந்த ராணுவம் பூராவும் இங்கிலாந்தில் இருந்தன; இங்கிலாந்தில் ஆலைத் தொழில்களைப் பாதுகாத்து வந்தன. இந்தச் சமயத்தில் இவைகளால் இந்தியாவுக்கு எள்ளளவு நலனும் ஏற்பட்டிருக்க முடியாது. அப்படி இருக்க இந்த ஆறு மாதத்

துச் செலவு தொகையையும் இந்தியாவிலிருந்து ஏன் வசூலிக்கப்பட்டது? இதில் உள்ள நியாயத்தை இவர்கள் விளக்க வேண்டுவது அவசியமாகிறது. இந்தியா தன் கைக்குள் அகப்பட்டுக் கொண்டது என்று அதன் பொருள்களைக் கொள்ளை கொள்வதில் என்ன நியாயமும் நேர்மையும் இருக்கக் கூடும்? கலகத்தினால் இந்தியாவுக்கு ஏற்பட்டுள்ள செலவு தாங்க முடியாமல் இருக்கிறது. அப்படி இருக்க இந்த அநாவசியச் செலவை இப்பொழுது இந்தியாவின் தலையில் சுமத்துவது முற்றிலும் அநியாயமான முறையாகும்.''*

இந்த அபாண்டமான கொள்ளையைக் குறித்து 1872-ம் வருஷம் ஏப்ரல் மாதம் 14உ ராணுவ காரியாலயம் எழுதிய ஒரு பிரத்யேகமான கடிதத்திற்கு அதே வருஷம் ஆகஸ்ட் மாதம் 8-ம் தேதி இந்திய மந்திரி எழுதிய பதிலாவது :—

"இந்த சாம்ராஜ்யத்தின் மற்றைய பாகங்களில் ஏற்பட்ட தேவைகளுக்கும் இது போல் பட்டாளம் உதவப்பட்டிருக்கிறது. இப்பட்டாளம் அந்தந்த இடங்களில் சென்று யுத்தம் செய்திருக்கின்றது. தற்பொழுது இந்தியாவில் ஏற்பட்ட கஷ்ட நஷ்டங்களைப் போலவே அங்கும் ஏற்பட்டிருக்கின்றன. அப்படி இருந்தும் அப்பட்டாளச் செலவுகள் யாவற்றையும் இங்கிலாந்து அரசாங்கம் ஒத்துக் கொண்டிருக்கிறது என்பதை நாம் நினைவிலிருத்திக் கொள்ள

*Our Financial relations with India. Page 15-16

வேண்டும். ஆனால் இந்தியக் கலகத்தில் ஏற்பட்ட செலவில் ஒரு தம்பிடியும் இச் சர்க்காரால் ஒத்துக் கொள்ளபடவில்லை. அவ்வளவு செலவையும் இந்தியக் குடிபடைகளிடமிருந்து வசூலித்திருக்கிறார்கள்."

## கிழக்கு இந்தியக் கம்பெனியும் அதன் முதல் வட்டியும்

பக்கம்21-ல் கொடுக்கப்பட்ட ஜாப்தாவில் கடைசியாக உள்ள செலவு விவரத்தைக் கவனியுங்கள். கிழக்கு இந்தியக் கம்பெனி என்பது மூடப்பட்டது. அதன் மூலதனம், தொழில் முதலியவை யாவும் விற்கப்பட்டன. ஆனால் இது ஒரு விசித்திரமான முறையில் விற்கப்பட்டது. கம்பெனியின் சாமான்களை வாங்குகிறவர்கள் அல்லவா பணம் கொடுக்க வேண்டும்? இம்முறையைத்தான் நாம் எங்கும் கண்டும் கேட்டும் வருகிறோம். ஆனால் இங்கு என்ன செய்தார்கள் தெரியுமா? இக்கம்பெனியே இதன் கிரயத்தைக் கொடுத்துவிட வேண்டும் என்று தீர்மானித்து வசூலித்தும் கொண்டார்கள். இதன் மூலம் இந்தியப் பொதுப் பணத்திற்குத்தான் நஷ்டமேற்பட்டது. இது போன்ற முழு மோசமான வியாபார நடவடிக்கையையும், சூது வாதையும் பற்றி நாம் எந்தச் சரித்திரத்திலும் காண முடியாது.

இது போல் உண்மை, நியாயம் முதலியவற்றை அடியோடு அகற்றி, முற்றிலும் மோசமான முறையில் 1090 லக்ஷம் பவுனை இந்தியாவின் தலையில் சுமத்தினார்கள். இவை யாவும் கிழக்கு இந்தியக் கம்

பெனி வர்த்தகர்கள் என்ற முறையில். இன்னும் அரசாங்கப் பொறுப்பு ஏற்றுக் கொள்ளவில்லை. ஆகையினால் இச்செலவு முழுவதும் நியாயமாக இங்கிலாந்து சர்க்காரால் கொடுக்கப்பட வேண்டும். இச்செலவு தொகைகள் விஷயமாக இருந்து வந்த உள்நாட்டு, வெளிநாட்டு எதிர்ப்புகளைப் பற்றி மேலே கூறினோம். இவைகளை ஆங்கிலேய அரசாங்கம் பொருட்படுத்தியதாகத் தெரியவில்லை.

## ஆங்கிலேய அரசாட்சிக்குள்

சிப்பாய்க் கலகத்திற்குப் பிறகு ஆங்கிலேயர்கள் இந்திய அரசாட்சியை மேற்கொண்டார்கள். முன் நடத்திவந்த அநியாயங்கள் யாவும் இப்பொழுது எளிதிலும் எளிதாகி விட்டன. மேலும், இவைகளை நிறைவேற்றுவது முன்போல அவ்வளவு சிரமமான காரியமல்ல. கம்பெனி டைரக்டர்களும் பிறரும் முன்பு அடிக்கடி ஆட்சேபத்தைக் கிளப்பிக் கொண்டிருந்தார்கள். இந்தியாவில் ஏதேனும் செய்யப் புறப்படுமுன் அவர்களின் சம்மதம் கேட்பது அவசியமாக இருந்தது. இப்பொழுது இத்தகைய தொல்லை ஏதும் இல்லை. இங்கிலாந்து சர்க்காரின் செலவு அதிகமாகிவிட்டால் அதைப் பேனாவின் முனையினாலேயே நிவர்த்தித்துக் கொண்டார்கள். இவ்வளவு லக்ஷம் பவுன்கள் இந்திய வரித் தொகையினின்று இங்கிலாந்து சர்க்கார் கணக்கிற்கு மாற்றப்பட வேண்டும் என்ற ஓர் உத்தரவு போட்

டால் போதுமானது. இதுபோன்ற உத்தரவுகளைச் சிரத்தையுடன், ஆட்சேபிக்காது நிறைவேற்றிக் கொடுப்பதிலேயே ஆனந்தமடைந்து வந்தார்கள் இந்திய சர்க்கார். ஆங்கிலேய சர்க்காரின் இது போன்ற உத்தரவுகளைச் சிரமேற்கொண்டு நிறைவேற்றித்தரத் தெரியாத ஒன்றிரண்டு ஆபீஸர்கள் அவ்வப்பொழுது இருந்ததும் உண்டு. இத்தகையோரில் ஒருவர் நார்த்புருக் பிரபு. இந்தியாவுக்குப் பரிந்து பேசிய சில ஆங்கில மந்திரிகளின் வார்த்தைகளை இவர் நம்பிவிட்டார். இதுதான் இவருடைய அசட்டுத்தனம். இந்தியப் பொருளாதார விஷயமாக ஆங்கில சர்க்கார் நியாயமாகவும், முறைமையுடனும் நடந்துகொள்ளவேண்டுமென்ற 'அனுவசிய' விருப்பம் கொண்டார். இதற்கு நேர் விரோதமான நடவடிக்கைகளைக் கண்ணுற்ற இவருக்குத் தம் வேலையை ராஜிநாமாச் செய்துவிட்டுப் போக நேர்ந்தது. இது போன்ற சிற்சில தடங்கல்களைத் தவிர ஆங்கிலேயர்கள் இந்தியக் கொள்ளையைத் தயை, தாட்சணியம் இல்லாது மனோபீஷ்டம் போல் நடத்திக் களித்து வந்தார்கள்.

## வெளிநாட்டு யுத்தங்கள்

இந்தக் காலத்திலும் வெளிநாடுகளுடன் யுத்தம் தொடர நேர்ந்திருக்கிறது. மறுபடியும் முன் போலவே அடாவடியாக இந்தியப்பொதுப் பணத்தி

னின்று ஏராளமான தொகைகளை எடுத்துச் செலவு செய்திருக்கிறார்கள். அவையாவன :—

| | செலவுதொகை : | |
|---|---|---|
| 1867-ல் அபிஸீனிய யுத்தம் | 6,00,000 | பவுன்கள் |
| 1875-ல் பீராக் படையெடுப்பு | 41,000 | ,, |
| 1878-ல் இரண்டாவது ஆப்கானிய யுத்தம் | 1,75,00,000 | ,, |
| 1882-ல் எகிப்து யுத்தம் | 12,00,000 | ,, |
| 1882-ல் வடமேற்குஎல்லைப் புற யுத்தங்கள் | 1,30,00,000 | ,, |
| 1886-ல் பர்மா யுத்தம் | 47,00,000 | ,, |
| 1896-ல் சீக்கிம் யுத்தம் | 2,00,000 | ,, |
| | 3,72,41,000 | ,, |

சுமார் 38 கோடி ரூபாய் எனலாம்.

| | |
|---|---|
| 1914-19-ல் ஐரோப்பிய யுத்தச் செலவுகள் | 39 கோடி ரூபாய் |
| ஷை யுத்தத்திற்காககொடுக்கப்பட்ட வெகுமதி | 150 கோடி ,, |
| இந்தியாவைக் காப்பாற்றுவதற்கான முயற்சியில் அதிகச் செலவு | 170.7 கோடி ரூ. |
| | 397.7 கோடி ரூ. |

அபிஸீனிய யுத்தத்தைப்பற்றி பாசெட்கமிட்டியின் முன்பு 1876-ல் கொடுக்கப்பட்ட சாட்சி வாக்குமூலத்தில் ஸர் சார்லஸ் ட்ரிவில்யன் என்பவர் சொன்னது கவனிக்கத் தக்கது :—

"ஆங்கிலேயரின் சாம்ராஜ்ய மோகம், அரசாட்சி மோகம் ஆகியவை பற்றியே இந்த யுத்தம் தொடங்கப்பட்டது. இதற்கு முக்கிய காரணமாக இருந்த விஷயமாவது இங்கிலாந்துக்கும் ஐரோப்பா அமெரிக்கா நாடுகளுக்குமிடையே இருந்து வந்த சம்பந்தமாகும். இந்தியாவுக்கும் இந்த யுத்தத்திற்கும் யாதொரு தொடர்பும் கிடையாது...........

உண்மையைக் கூறுமிடத்து இந்தியர்களுக்கு அபிஸீனியா என்றால் என்ன என்றே தெரியாது."

மேற்கொண்டு அதே விசாரணையின் 1600 வது கேள்விக்குப் பதில் சொல்லுகையில் அவர் கூறியதாவது :

"இந்த அபிஸீனிய யுத்தத்தில் ஆஸ்திரேலியாவுக்கும், கனடாவுக்கும் எவ்வளவு சம்பந்தமுண்டோ அதைவிட இந்தியாவுக்கு அதிக சம்பந்தம் கிடையாது. ஆனால் இந்தியாவினின்று மட்டும் இச் செலவு தொகை வசூலிக்கப்படுவதேன்? இதற்கு ஒரே காரணம்தான் கூற முடியும். இது போல் ஆஸ்திரேலியாவையும், கனடாவையும் செலவுதொகை கொடுக்கும்படி கேட்டால் அவர்கள் மிகவும் சினங்கொள்வார்கள். இவ்வுத்தரவை உடனே நிராகரித்தும் தள்ளி விடுவார்கள். இது போன்ற அர்த்தமற்ற உத்தரவைக் கேட்டுக் கொண்டு அவர்கள் சும்மா இருக்கமாட்டார்கள். பக்ஷபாதமற்று, உண்மையை மதித்துக் கூறுமிடத்தே மேற்படி நாடுகளுக்கும், இந்தியாவிற்கும்

இந்த யுத்தவிஷயத்தில் கொஞ்சங்கூட வித்தியாஸம் கிடையாது. இந்தியாவுக்குச் சம்பந்தப்பட்ட எந்த விதமான காரணத்தினலும் இந்த யுத்தம் தொடரப் படவில்லை. இதனல் இந்தியாவுக்கு ஏற்பட்ட லாபமும் ஏதும் இல்லை "*

1897-ல் வெல்பி கமிஷனிற்கு முன்பு நார்த் புரூக் பிரபு சொன்னதாவது—" அபிஸீனிய யுத்தச் செலவு என்று எழுதப்பட்டுள்ள தொகை முழுவதையும் திருப்பி ஆங்கிலேயர்களிடமிருந்து வசூலிக்க இந்தியாவுக்குப் போதுமான ஆதாரமும், சாட்சியங்களுமிருக்கின்றன."[1]

பீராக் படையெடுப்பிற்காக என்று எழுதப் பட்டுள்ள கணக்கும் சுத்த மோசடியானது. இதை விளக்கி நார்த்புரூக் பிரபு கொடுத்துள்ள வாக்கு மூலத்தில் :—

" இந்தப் படையெடுப்பு ஆரம்பிக்கப்பட்ட சமயத்தில் நான்தான் இந்தியாவின் கவர்னர் ஜெனரலாக அதிகாரம் செலுத்தி வந்தேன். இச் செலவுகள் இந்தியாவின்மீது சுமத்தப்படவேண்டுமென்று அவர்கள் சொன்னதை நான் ஆட்சேபித்தேன். இந்திய அரசாங்கத்தின் மறுப்பை அவர்கள் பொருட்படுத்தியதாகத் தெரியவில்லை. இது விஷயமாகப் பார்லிமெண்டின் இரண்டு சபைகளிலும்

*Parliamentary Committee on East India Expenditures, 1876, Vol. III Page 151.

[1]Indian Expenditure Commission Vol. III-Page 23.

மசோதாவே கொண்டுவரப் படவில்லை. இவ்வாறு சட்டத்தை மீறி, இந்தியாவினின்று பணம் வசூலித்துக் கொண்டார்கள். இதைத் திருப்பியும் கொடுக்கவில்லை. சட்டத்தையும் மீறி, இந்தியஅரசாங்கத்தின் ஆட்சேபத்தையும் பொருட்படுத்தாது செய்யப்பட்ட இந்த அக்கிரமம் இன்றுவரை அப்படியே இருக்கிறது."*

இரண்டாவது ஆப்கானிய யுத்தத்தில் ஏற்பட்ட செலவுகளை இந்தியாவின் மீது சுமத்தியதை மிஸ்டர் பாசெட் என்பவர் ஆட்சேபித்து, பார்லிமெண்ட் சபையில் அவர் செய்த சொற்பொழிவானது:

"இந்த யுத்தத்திற்கு இந்திய ஜனங்கள் பொறுப்பாளிகளாக மாட்டார்கள்........ இந்த யுத்தம் தொடரக் காரணமாக இருந்தது நமது சாம்ராஜ்ய நடவடிக்கைகளே. நமது நடவடிக்கைக்காக இந்திய ஜனங்களைச் செலவு செய்யச் சொல்லுவது அக்கிரமமாகும். இந்தியா தனி அரசாங்கமாக இருந்தாலோ அல்லது அங்கிருக்கும் சர்க்கார் ஜனநாயக சர்க்காராக இருந்தாலோ நமது இவ்வுத்தரவைப் பற்றி அவர்கள் ஆலோசிக்கவாவது கூடும். அப்படி இல்லாது நமது கையில் சிக்கிக் கொண்ட இவர்களின் மூக்கைப்பிழிந்து ஒவ்வொரு சல்லியையும் வசூலிக்கப் போகிறோம்"[1]

---

* Indian Expenditure Commission 1895 Vol. III, Page 20.

[1] Hansard Vol. 251 Page 926.

இந்த யுத்தத்திற்குப் பிறகு ஆப்கானிய அமீருக்கு வருஷம் ஒன்றுக்கு 6 லக்ஷம் ரூபாய் வீதம் 1894 வரை கொடுக்கப்பட்டிருக்கிறது. அதற்குப் பிறகு இது 12 லக்ஷமாக்கப்பட்டது. யுத்தச் செலவு கொடுத்தது மட்டுமல்லாது இந்தப் படிகளைக் கூட இந்திய வரியினின்றே கொடுத்திருக்கிறார்கள்.

இந்திய அரசாங்கத்தின் ராணுவக் காரியதரிசியான மேஜர் ஜனரெல் கோலன் என்பவர் 1882-ல் நடத்தப்பட்ட எகிப்து யுத்தத்தைப்பற்றி வெல்பி கமிஷனின் முன்பு கொடுத்த சாட்சியத்தில் அவருடைய சொந்த அபிப்பிராயமாகக் கூறியதாவது:— " இந்தியா இது போன்ற படையெடுப்புக்காகக் காலணாவும் கொடுத்திருக்கக் கூடாது."

வடமேற்கு எல்லைப்புறப் படை யெடுப்புக்களைக் குறித்து இந்தியச்செலவு விசாரணைக் கமிட்டியார் (Indian Expenditure Commission) கூறியதாவது:— " பெரிய சாம்ராஜ்யத்தைக் கட்டி ஆளுவதனால் ஏற்படும் பிரச்னைகளே இது போன்ற யுத்தத்தின் காரணங்களாகும், ஆகவே ஆங்கிலேய கஜானாவே இச்செலவு முழுவதையும் ஒத்துக்கொண்டிருக்க வேண்டும் "*

பர்மிய யுத்தச் செலவுகளை இந்தியக்கணக்கில் எழுதியது பற்றி வெல்பி கமிஷன் முன்பு மிஸ்டர் டி. ஈ. வாச்சா (பின்பு ஸர் தின்ஷா என்று பிரபலமடைந்தவர்) சொன்னதாவது :

* Indian Expenditure Commission Vol. IV, பக்கம் 187.

"வட பர்மாவில் ஏற்பட்ட மிலிடரி செலவு தொகை முழுவதையும், அத்துடன் அந்நாட்டின் மேல் ஆட்சிசெலுத்த இதுவரை செலவான தொகையையும் இங்கிலாந்து இந்தியாவிற்குத் திருப்பிக் கொடுக்கவேண்டும். காங்கிரஸ் கோரியுள்ள அப்பிர தேசத்தைத் தனிசெய்து பிட்ரிடிஷ் அரசாங்கத்துடன் நேர் தொடர்புள்ள ஒரு தனி நாடாகச் (Crown Colony) செய்ய வேண்டும்.

"பர்மா யுத்தத்தைத் தொடர்ந்து நடத்தி அந்நாட்டை ஆக்ரமித்துக் கொள்ள முக்கிய காரணம் ரங்கூன், மாண்டலே போன்ற இடங்களிலிருந்த ஆங்கில வியாபாரிகளின் பேராசை என்று சொல்லலாம். வடபர்மா இது போல் துண்டிக்கப் படவேண்டும் என்று இந்தியா விரும்பவில்லை. ஆகவே அச்செலவு யாவும் இந்தியாவினின்று வசூலிக்கப்படுவது நியாயமும் அல்ல. இந்த யுத்தத்தின் நியாயமான காரண புருஷர்கள் ஆங்கிலேய வியாபாரிகள். யுத்தத்தின் பிறகு ஆங்கில சாம்ராஜ்யம் விஸ்தரிக்கப்பட்டது. ஆதலால் இச்செலவு முழுவதும் அவர்களின் கணக்கில் எழுதப்படவேண்டியதுதான் முறையாகும்."*

மேற்படி கமிஷன் முன்பு மிஸ்டர் கோகலே அவர்கள் கொடுத்த சாட்சியமாவது :—

"ஆங்கில அரசாங்கத்தின் நலனை உத்தேசித்தும், ஆங்கிலேய வியாபார ஸ்தாபனங்களின் நன்மையைக் குறித்துமே இப்போர் செய்யப்பட்டது.

* Indian Expenditure Commission Vol. III, page 204.

இந்தியா சம்மந்தப்பட்ட யாதொரு காரணம் கொண்டும் இப்போர் தொடரப்படவில்லை என்பது உண்மை."*

சீக்கிம் படை யெடுப்பின் செலவு தொகை முழுவதும் இந்தியாவினின்று எடுத்துக் கொள்ளப் பட்டிருக்கிறது. இது விஷயமாக இந்திய அரசாங்கமே தனது ஆட்சேபத்தைத் தெரிவித்துக் கொண்டுள்ளது :—

"சீக்கிமில் இருந்து வந்த எகிப்திய மிலிடரியை நைல் நதிப் பிரதேசத்திற்கு அனுப்பும்படி ஏற்பட்டது. ஆகவே சீக்கிமைப் பாதுகாக்கப் போதுமான ஒரு இந்தியப்படையை அனுப்ப வேண்டுமென்று இந்திய அரசாங்கத்தைக் கேட்டுக் கொண்டார்கள். மேலே சொல்லப்பட்ட ஆங்கில சர்க்காரின் ராஜ தந்திர சூழ்ச்சியில் இத்தியாவிற்கு லவலேசமும் சம்பந்த மிருப்பதாக எங்களுக்குப் புலப்படவில்லை. சூயஸ் கால்வாயைக் காப்பாற்றுவதனல் இந்தியப் பொதுஜனங்களுக்கு ஏதும் நன்மை ஏற்படப் போவதில்லை. அப்படி இருக்க அதைக் காப்பாற்றுவதற்காகச் செல்லும் படைக்குப் பதிலாக சீக்கிமிற்கு இந்திய ராணுவத்தை ஏன் அனுப்பவேண்டும்? இந்தியாவில் வேலை பார்த்து வரும் ராணுவத்திற்கான செலவு தொகையைப் பொதுப் பணத்தினின்று எடுத்துக் கொள்வது நியாயம். அப்படி இல்லாது எகிப்து தேசத்தில் எழும் பூசல்களை அடக்கவோ,

* Indian Expenditure Commission Vol., III., page 243.

அந்நாட்டைக் கைப்பற்றவோ, அல்லது இத்தாலிய ராணுவத்திற்கு உதவிசெய்யவோ, இதுபோன்ற மற்றைய அநாவசிய காரியங்களிற்காக ஏற்படும் ராணுவச் செலவை இந்தியா ஏன் ஏற்றுக் கொள்ள வேண்டும்? இந்நாட்டைச் சரியான முறையில் அரசாட்சி செலுத்தவேண்டிய பொறுப்பு தற்பொழுது எங்களைச் சார்ந்துள்ளது. ஆகவே மேலே சொன்னது போன்ற அக்கிரமங்களை நடத்த நாங்கள் சற்றும் இடங்கொடுக்க மாட்டோம். இது விஷயமாக எங்களின் ஆட்சேபத்தை அழுத்தமான முறையில் தெரிவித்துக் கொள்கிறோம். முற்றிலும் சம்பந்தமற்ற செலவுகளுக்காகப் பொது ஜனங்களின் வரிப்பணத்தை அதிகரிப்பதை எதிர்க்கிறோம். இது கலப்பற்ற அநியாயமாகும். இந்திய ராணுவம் இங்கிலாந்துக்கு அனுப்பப்பட்டால் அதன் செலவு தொகையை இந்தியா பொறுத்துக் கொள்ள வேண்டி நேருகிறது. இங்கிலாந்து ராணுவம் இந்தியாவிற்கு வந்தாலோ இச்சட்டம் தலைகீழாக மாற்றப் படுகிறது. அச்செலவு தொகையை இங்கிலாந்து பொறுத்துக் கொள்வதில்லை. இந்தியாவின் தலையிலேயே சுமத்துகிறார்கள். இதுபோல் ஒன்றுக்கொன்று நேர் விரோதமான நடவடிக்கை ஏன் மேற்கொள்ளப்படுகிறது என்று எழும் கூச்சலுக்கு இன்றுவரை சரியான பதில் அளிக்கப் படவில்லை.''*

* Financial Developments in Modern India-Page 131

## மற்ற சில்லரைச் செலவுகள்

மேலே சொல்லப்பட்ட யுத்தச் செலவுகள் ஒரு புற மிருக்க, நமது கணக்கில் பல சில்லரைச் செலவுகளையும் சுமத்தி இருக்கிறார்கள். உதாரணமாக பாரசீக தூது கோஷ்டிக்கான செலவு; சீனாவுடன் ஏற்படுத்தப்பட்ட அரசியல் தொடர்பு சபை முதலியன. இது போன்ற செலவுகள் விஷயமாகவும் மிஸ்டர் ராம்ஸே மேக்டோனால்ட் சொல்லியுள்ளது கவனிக்கத் தக்கது :—

"மிலிடரி அல்லாத மற்றைய செலவு விவரங்களிலும் சில ஆட்சேபிக்கக் கூடியனவாக இருக்கின்றன. இத்தொகை அற்பமாக இருக்கலாம். ஆனால் அதையும் இந்தியாவினின்று வசூலிக்க வேண்டும் என்ற அற்ப மனோபாவத்தை எதிர்த்தேயாகவேண்டும். இங்கிலாந்திலுள்ள இந்திய மந்திரியின் ஆபீஸ் சம்பந்தப்பட்ட செலவு முழுவதும் இந்தியாவின் வரிப்பணத்தினின்று ஈடுசெய்து கொள்ளப்படுகிறது. ஆனால் ஆங்கிலேயர்கள் மற்றைய காலனிகளுக்காக அமைக்கப்பட்டிருக்கும் ஆபீஸ் செலவுகளை அக்காலனிகளிடமிருந்து வசூலிப்பதில்லையே. அரசரோ அல்லது இந்திய மந்திரியோ இந்தியாவுக்குச் சென்று வருவதனால், அச் செலவு யாவும் இந்தியப் பொதுப்பணத்தினின்று கொடுக்கப்படுகிறது. இது போன்ற சில்லரைச் செலவுகள் இன்றுவரை 4 லக்ஷம் பவுன்களாகின்

றன. நாளாக ஆக இது அதிகரித்துக் கொண்டே போகிறது. இச்செலவு யாவும் நமது சாம்ராஜ்யத்தின் செலவு ஆகவேண்டும். இதுபோன்ற செலவுகளுக்கும் இந்தியப் பொதுப்பணத்திற்கும் யாதொரு சம்பந்தமும் இருக்கக்கூடாது. அப்படி இருந்தும் அநியாயமான முறையில் இந்திய வரவு செலவுக் கணக்கில் இதைச் சேர்த்து விடுவது மிகக் கேவலமானது. அத்துடன் இது நம் கௌரவத்திற்குத் தகுந்த நடவடிக்கை அல்ல.''*

மேலே சொல்லப்பட்ட ஈவிரக்கமற்ற அட்டூழியங்கள் கம்பெனியாரால் செய்யப்பட்டன. இதே போல இங்கிலாந்து சர்க்காரும் நம் விஷயத்தில் சற்றும் தயையற்று நடந்துகொண்டிருக்கிறது. இதற்கு ஒரு உதாரணமாக செங்கடல் இந்தியன் தந்திக் கம்பெனி (Red Sea and Indian Telegraph Company) என்ற ஸ்தாபனத்தைப்பற்றிக் கூறலாம். இது 1858 ம் வருஷம் தொடங்கப்பட்டது. இங்கிலாந்து சர்க்கார் இக்கம்பெனிக்கு $4\frac{1}{2}$ சத விகிதம் வட்டி ஐம்பது வருஷங்களுக்குக் கொடுப்பதாக ஒப்புக் கொண்டார்கள். இக்கம்பெனி தந்தி போக்குவரத்துத் தொடங்கிய மறுதினமே அக்கம்பங்கள் தந்திகள் யாவும் அறுந்து கீழே விழுந்து விட்டன. கம்பெனி வேலை செய்யாது போனாலும் வட்டி கொடுத்துத்தானே ஆகவேண்டும். ஆனால் ஆங்கில சர்க்கார் முழுத் தொகையையும் கொடுக்கத் தயாராயில்லை.

*Government of India, Page—155.

இந்தியா அவர்களின் கையிலிருக்கும்போது அவர்கள் ஏன் பயப்பட வேண்டும்? ஆகவே இந்த வட்டித் தொகையில் பாதியை இந்தியாவின் தலையில் கட்டிவிட்டார்கள். இந்த அபாண்டக் கணக்கு விஷயமாக வெல்பி கமிஷன் செய்துள்ள ஆட்சேபணையைக் கவனியுங்கள்:—

"$4\frac{1}{2}$ சதவிகிதம் வட்டி கொடுப்பதாக உடன்பட்டதை 1861-ல் ஒரு ஷரத்துக்கு உட்பட்டுத்தான் கொடுக்க முடியும் என்று ஆங்கில பார்லிமெண்டில் தீர்மானித்தார்கள். அதாவது அக்கம்பெனி தந்திப் போக்குவரத்து செய்து தந்தால்தான் கொடுப்பது. அக் கம்பெனியோ இருபத்து நான்கு மணி நேரங்கூட வேலை செய்ய முடியவில்லை. மறுநாளே எல்லாம் அறுந்து கீழே விழுந்து விட்டன. ஆகவே 1862-ல் அத் தீர்மானத்தை மாற்றவேண்டி ஏற்பட்டது. இதன் மூலம் கம்பெனியின் சொத்துக்கள் முழுவதையும் மற்றொரு புதுக் கம்பெனிக்கு ஒப்படைத்து விடுவது என்றும் இப்புதுக் கம்பெனிக்கு வட்டி கொடுப்பதற்குப் பதிலாக வருஷம் ஒன்றுக்கு 36 ஆயிரம் பவுன் மொத்தமாகக் கொடுத்துவிடுவது என்றும் அவ்வாறு 46 வருஷங்களுக்குக் கொடுத்து வரவேண்டும் என்றும் திருத்தினார்கள். இதில் இந்தியா பாதி தொகையை—அதாவது 18,027 பவுன்கள் வருஷாவருஷம் ஆங்கில அரசாங்க கஜானாவில் செலுத்திவிட வேண்டும் என்றும் 1908-ம் வருஷம் ஆகஸ்ட் மாதம் 4 தேதிவரை ஒவ்வொரு வருஷமும்

இவ்வளவு தொகையைச் செலுத்திவர வேண்டு மென்றும் விதித்திருக்கிறார்கள்.''*

மேலே சொன்ன இந்தக் கணக்கு விஷயமாக அடாவடியாக இந்தியாவினின்று பறிக்கப்பட்டிருக் கும் தொகையை 4 சதவிகிதம் வட்டியுடன் திருப்பிக் கேட்கப்போனால் சுமார் 20 லக்ஷம் பவுன் நமக்கு இங்கிலாந்து கொடுக்க வேண்டியிருக்கும்.

## வருஷாந்தர ராணுவச் செலவுகள்

பொதுஜன நன்மைக்கு அல்லாத பல்வேறு சில்லரைச் செலவுகளிலேயே இந்நாட்டின் வரித் தொகையின் பெரும் பாகம் செலவழிக்கப்பட்டு வரு கிறது என்பது நாம் யாவரும் நன்கு அறிந்த விஷய மாகும். நாட்டின் அபிவிருத்திக்கான முறைகளில் செலவு செய்யாது, உபயோகமற்ற ராணுவச் செலவு செய்து வந்ததால் நம் நாட்டிற்கு ஏற்பட்ட தீமை களைப்பற்றி ஆராய இங்கு இடமில்லை. ஆனால் ஒரு விஷயத்தை இங்கு விளக்கலாம். 1857-ம் வருஷம் முதல் அடக்குமுறைக்காகவே படைகள் இங்கு வைக்கப்பட்டு வந்துள்ளன. அன்று முதல் பட்டா ளங்களில் உள்ள ஐரோப்பியத் துருப்புகளின் எண் ணிக்கையை அதிகரித்துக் கொண்டே வந்தார்கள். முன்பு ஐரோப்பியத் துருப்புகள் மொத்த ராணு வத்தில் ஆறில் ஒரு பாகமாக இருந்தன. சிறுகச்

*Indian Expenditure Commission 1895. Vol. II. Page 370.

சிறுக இவை அதிகரிக்கப்பட்டு இன்று மூன்றில் ஒரு பாகம் ஆகிவிட்டன. மறுபடியும் ஏதும் கலகங்கள் ஏற்பட்டு அரசாங்கம் நிலையற்றுப் போகக்கூடாது என்ற பீதியே இதற்குக் காரணமாகும். ஆங்கில சாம்ராஜ்யத்திற்குத் தேவைப் படும் காலங்களிலெல்லாம் இந்தியாவில் நிறுத்தப் பட்டுள்ள ராணுவம் தாராளமாக வெளியே அனுப் பப்பட்டது.

இந்தப் பட்டாளங்களை வெளியே அனுப்புவதனால் இந்தியாவின் பாதுகாப்பிற்கு ஏதும் பங்கம் விளையக்கூடும் என்ற கவலை இவர்களுக்கு இருக்கவில்லை. மேலும், வெளியே அனுப்பப்பட்ட பட்டாளங்கள் வெகு நீண்ட காலம் வரை ஆங்காங்கு போர் செய்து திரும்புவதும் உண்டு. இவைகளினால் விளங்குவது யாதெனில் இந்தியாவில் நிறுத்தப்பட்ட பட்டாளங்கள் இந்நாட்டின் பாதுகாப்பிற்குத் தேவையானதைப் போல பலமடங்கு அதிகமாக இருந்து வந்தன என்பதே. இவ்வளவு அநாவசியமான பட்டாளங்களையும் காப்பாற்றுவது இந்தியப் பொதுஜனங்களின் பொறுப்பாயிற்று. இது விஷயத்தில் இந்தியாவானது ஆங்கில சாம்ராஜ்யத்தின் சைன்யங்களை நிறுத்துவதற்கான ஒரு பாசறை போல் உபயோகிக்கப்பட்டு வந்தது. ஒரு ஐரோப்பிய ராணுவ வீரனின் சம்பளம், போக்குவரத்து செலவு முதலியன சேர்ந்து மூன்று அல்லது நான்கு இந்திய சிப்பாயின் செலவுக்குச் சமமாகும். ஐரோப்பிய

சிப்பாய்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்திய தன் மூலம் ராணுவச் செலவுகள் எல்லை இல்லாது போய்விட்டன. இந்தியப் பாதுகாப்பிற்காகவும் உள் நாட்டில் அமைதியை ஏற்படுத்தவும் இந்திய சிப்பாய்களை மட்டும் வைத்திருந்தார்களானால் இவ்வளவு செலவு ஆகி இருக்க முடியாது. ஆகவே இங்கிருந்து வந்த சிப்பாய்கள் இந்தியாவின் பாதுகாப்பிற்காக மட்டும் அல்ல. ஆங்கில சாம்ராஜ்யப் பாதுகாப்பிற்காகவும் தான் என்பது தெற்றென விளங்கும். நியாயமான கணக்குப்படி நம் நாட்டின் தேவைக்கான பட்டாளச் செலவுகளைத் தவிர அதிகமான யாவற்றையும் இங்கிலாந்து அரசாங்கம் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

இந்நாட்டில் இருந்துவந்த பட்டாளம் ஆங்கிலேய சாம்ராஜ்யத்தின் தேவைக்கானவை. இதனுல் சாதாரணமான தளவாட சாமான்கள் அவர்களுக்குப் போதுமானதாக இல்லை. வெல்பி கமிஷனில் ஒரு அங்கத்தினரான மிஸ்டர் புச்சனன் என்பவர் அந்த அறிக்கையில் எழுதியுள்ளது கவனிக்கத் தக்கது:

"இந்தியாவில் நிறுத்தப்பட்டுள்ள பட்டாளத்தின் செலவு யாவும் இந்தியாவின் பொறுப்பாயிற்று. ஆங்கில சாம்ராஜ்யத்தினின்று இதற்காகக் காலணவும் செலவு செய்வதில்லை என்பதை மேலே கவனித்தோம். ஆனுல் சாம்ராஜ்யப் பாதுகாப்பு விஷயமாக அவர்கள் சிந்திக்குங் கால் இந்தி

யாவிலுள்ள பட்டாளத்தையே பிரதானயாகக் கருதி வந்தார்கள்.'' 'சாப்பாட்டிற்கு நான்; மோதிரப் பணத்திற்கு எங்கள் முத்தண்ணு' என்பது ஆங்கிலேயர்களின் திட்டமான மனேபாவமாக இருந்தது.

"கீழ் நாடுகளில் நம் சாம்ராஜ்யத்தைப் பெருக்கவேண்டு மாயின் இந்தியாவிலுள்ள பட்டாளத்தையே நம்ப வேண்டிய நிலையிலிருக்கிறோம். அப்பட்டாளத்தின் பலத்தைக்கொண்டே ஆசியாவில் இங்கிலாந்தும் ஒரு பெரிய வல்லரசு என்று மார்தட்டிக்கொள்ள முடிகிறது. நேர்முகமாகவும், மறைமுகமாகவும் தென் ஆப்பிரிக்கா யுத்தத்தில் இந்த ராணுவங்கள் நமது சாம்ராஜ்யத்திற்கு எவ்வளவு உதவியாக இருந்தன என்பதை இவர்களே நன்கு மனத்தில் பதியும்படி நிரூபித்து விட்டார்கள். ஐரோப்பியத் துருப்புகளை இந்தியாவினின்று வெகு துரிதமாக நேட்டாலுக்கு அனுப்ப முடிந்தது. அது போல் இன்னும் பல பட்டாளங்களும் பல இடங்களுக்கும் அனுப்பப்பட்டன. இன்னும் மொரிஷியஸ், சிலோன், சிங்கப்பூர் போன்ற இடங்களில் இருந்து வந்த ஐரோப்பியப் பட்டாளங்கள் வெளி நாடுகளுக்கு யுத்தத்திற்காக அனுப்பப்பட்டன. அவ்வமயம் இந்தியத் துருப்புக்களே அங்கு சென்று மேற்சொன்ன இடங்களைப் பாதுகாத்து வந்தன.

"சமீப காலத்தில் நமக்குக் கிடைத்துள்ள அனுபவங்களைக் கொண்டும், பொதுவான முறையிலும் நோக்குமிடத்தே இந்திய ராணுவத்தினல் தான்

ஆங்கில சாம்ராஜ்யம் தலைதூக்கி நிற்க முடிகிறது என்றே சொல்லிவிடலாம். இந்தியப் பட்டாளத்தின் பலம் தான் ஆங்கில சாம்ராஜ்யத்தின் பலம் என்பது ஐயமின்றி நிச்சயிக்கப்பட்டு விட்டது. சாம்ராஜ்யத்திற்காகச் செய்யப்படும் போர்களில் பெரும்பாலானவை இந்தியராணுவத்தினலேயே நடத்தப் பெறுகின்றன. ஆகவே இந்தியாவிற்கு ஏற்படும் எல்லையற்ற ராணுவச் செலவில் ஒரு நியாயமான பாகத்தை இங்கிலாந்து சர்க்கார் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்னும் கோரிக்கை நிராகரிக்கக் கூடியது அல்ல. இங்கிலாந்து இக் கணக்கை எவ்வாறு தீர்த்துக்கொள்ள வேண்டும்? எவ்வளவு தொகையை இந்தியாவிற்குத் திருப்பிக் கொடுக்க வேண்டும்? என்பது போன்ற பிரச்னைகளில் சிக்கல்கள் இருக்கலாம். ஆனல் நியாயமாக இந்த அபார இந்திய ராணுவச் செலவில் இங்கிலாந்து பங்கு எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை. * ''

1885-6 ல், அவ்வமயம் நிதி மந்திரியாக இருந்து வந்த ஸர் ஆக்லண்ட் கோல்வின் என்பவர் சமர்ப்பித்துள்ள வரவு செலவு திட்டத்தின் 136 வது பாராவில் சொல்லியிருப்பதாவது "(யுத்தச் செலவுகளைச் சேர்க்காமல்) ராணுவத்திற்காக ஏற்படும் சாதாரணச் செலவு வருஷம் ஒன்றுக்கு 15 கோடி ரூபாய் என்கிருர். இது இங்கிலாந்திலோ அல்லது இந்தியா

*Indian Expenditure Commission 1895.Vol.IV Page149

விலோ அவசியம் ஏற்படக்கூடிய செலவாகும்.” நம் நாட்டு ராணுவச் செலவிற்கு இதை அடிப்படையாகக் கொண்டு, அவ்வப் பொழுது ஏற்படும் விலைவாசிகளை அனுசரித்துக் கணக்கிடுங்கால் :

| | | | | |
|---|---|---|---|---|
| 1859-60 | முதல் | 1899-1900 | வரை | ....15 கோ. |
| 1900- 1 | ,, | 1914- 15 | ,, | ....20 ,, |
| அது முதல் | | | | ....30 ,, |

இதன் பிரகாரம் நிர்ணயிக்குமிடத்தே ஆங்கில சாம்ராஜ்யத்திற்காக இங்கு நிறுத்தப்பட்டுள்ள அதிகப் பட்டாளத்தின் செலவுகளை இங்கிலாந்திலிருந்து வசூலிக்க வேண்டுமாயின் சுமார் 600 கோடி ரூபாய் இந்தியாவிற்குக் கொடுக்கப்பட வேண்டும்.

## பொய்க்கடனுக்காக கொடுக்கப்பட்டுள்ள வட்டி :

ஒருவர் கணக்கில் எழுதப்பட வேண்டிய கடன் தொகை தவறுதலாக இன்னொருவர் கணக்கில் எழுதப்படுகிறது. இந்தப் பொய்க் கடனிற்காக அவரிடமிருந்து வட்டியும் வசூலித்து விடுகிறார்கள். கணக்கிலுள்ள இந்தத் தவறுதல் வெளிப்பட்டவுடன் அவர்களிடமிருந்து வசூலிக்கப்பட்டுள்ள வட்டித் தொகை முழுவதும் திருப்பிக் கொடுத்துவிட வேண்டியது நியாயமான முறையாகும். இதே போல இந்தியாவின் கணக்கிலே எழுதப்பட்டிருக்கும் கடன் பொய், தவறுதல் என்று நிரூபிக்கப் படுமாயின் அக்கடன் விஷயமாக இன்றுவரை செலுத்

தப்பட்டுள்ள தொகை முற்றிலும் திருப்பிக் கேட்பது நியாயமாகும்.

கடனே பொய். அதற்கு வட்டி வசூலித்துமிருக்கிறார்கள். அதுவும் இந்தியாவின் வரிப்பணத்தினின்று எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். வரிப்பணத்தை இது விஷயமாகச் செலவு செய்ததின் மூலம் நாட்டிற்கு என்னன்ன கஷ்டநஷ்டங்கள் ஏற்பட்டன என்பதை ஆராய்ந்து, அக்கிரமமாக் எடுத்துக்கொள்ளப் பட்ட இந்த வட்டித் தொகைக்கு ஈடாக தேசத்திற்கு ஏற்பட்ட நஷ்டத்தைக் கொடுக்கும்படி கேட்பதும் ஒரு நியாயமான வாதமேயாகும். இருந்தாலும் நாம் அவ்வளவு தூரத்திற்குப் போகாமல் அந்த வட்டித் தொகையையும், அதன்மேல் இன்றுவரை கணக்கு ஆகக்கூடும் வட்டியையும் திருப்பிக் கொடுத்துவிடும்படி கேட்கலாம்.

கடன் கணக்கையே சரியாக எழுதி இருந்தால் இந்தியாவிற்கு இந்த நஷ்டம் ஏற்பட்டிருக்காது. இங்கிலாந்து வருஷாவருஷம் வட்டி கொடுக்கும்படி நேர்ந்திருக்கும். இந்தத் தவறுதல் மூலம் இங்கிலாந்துக்கு வருஷாவருஷம் இத்தொகை மிச்சப்பட்டுக் கொண்டே வந்திருக்கிறது. இத்தொகைக்கு இன்றுவரை வட்டியும் கிடைத்திருக்கும். ஆகவே இது பூராவையும் இந்தியாவுக்குக் கொடுத்துவிட வேண்டும் என்பது நியாயமாகிறது. சாதாரண வட்டி போதாது. வட்டிக்கு வட்டி கொடுக்க வேண்டும். நியாயமான முறையில் இவ்வளவையும் இங்கிலாந்தி

னிடமிருந்து நாம் வசூலித்துக் கொள்ளலாம். ஆனால் உதார மனப்பான்மையுடன் இவை யாவற்றையும் கேட்காது நம் நாட்டினின்று கொடுக்கப்பட்ட தொகையைமட்டுமே கொடுத்துவிடும்படி கேட்க விரும்புகிறோம்.

வட்டித் தொகை வருஷாவருஷம் கொடுபட்டிருக்கிறது. அதுவும் சுமார் 70 வருஷங்கள் கொடுத்திருக்கிறோம். நாம் கொடுத்திருக்கும் வட்டியைக் கணக்கிட்டால் முதலைவிட மூன்றுபங்கு அதிகமாகி இருக்கும். அப்படி இருந்தும் பிடிவாதமாக நம்மிடமிருந்து இத்தொகைகளை வசூலித்திருக்கிறார்கள். மூலதனம் என்று கருதப்படும் கடன் கணக்கே தவறுதலானது என்று எவ்வளவோ பேர் எடுத்துச் சொல்லியும் இருக்கிறார்கள். ஆங்கிலேயர்களே இதை ஆட்சேபித்து மிருக்கின்றனர்.

அரசாங்க வட்டி விகிதங்கள் நூற்றுக்கு $3\frac{1}{2}$ முதல் 7 வரை அவ்வப்பொழுது வித்யாஸப்பட்டிருக்கிறது. ஆகவே எவ்வளவு சதவிகிதம் வட்டி நாம் இங்கிலாந்தினிடமிருந்து திருப்பி வாங்கவேண்டுமென்று நிர்ணயிப்பது கடினமாகும். சராசரியாகக் கணக்கிடுமிடத்தே அரசாங்கக் கடன்களுக்கு 4 சதவிகிதம் வட்டி நியாயமாகும். நாமும் இதுவரை கொடுத்துள்ள தொகைகளுக்கு 4 சதவிகிதம் வட்டி வீதம் கணக்கிட்டு வாங்குவது முற்றிலும் பொருத்தமேயாகும். வெளிநாடுகளில் செய்யப்பட்ட யுத்தச் செலவு, கிழக்கு இந்தியக் கம்பெனியை மூடி

அதன் தளவாட சாமான்களை விற்று அதற்காகக் கம்பெனியே கொடுத்துக் கொண்ட கிரயத்திற்கான தொகை, யுத்தத்தின்போது கேள்விமுறையில்லாது யுத்தத்திற்காக இந்தியா கொடுத்த 'நன் கொடை' என்று தானுக எடுத்துக்கொண்ட தொகை, ஆக இவைகளின்மீது 4 சதவிகிதம் வட்டி கணக்கிடுவோமாயின் 570 கோடி ரூபாய் ஆகிறது. 1860 முதல் நாம் கொடுத்துள்ள வட்டித் தொகைகள் யாவும் ஒன்று சேர்ந்து சுமார் 1,200 கோடி ரூபாய்களாகின்றன. இதில் நாம் இப்பொழுது திருப்பிக்கேட்பது கிட்டத்தட்ட பாதி பாகம்.

நாலாவது அத்தியாயம்

## சமீப காலம்

### வெகுமதித் திந்திரம்

முன்காலத்தில் யூதர்களிடையே ஒரு விநோதமான வழக்கம் இருந்து வந்தது. மகன், தான் சம்பாதித்த பொருளைத் தாய் தந்தையர்களுக்காகச் செலவு செய்ய விரும்பாது இருப்பானுயின் அதைக் காப்பாற்றிக்கொள்ள ஒரு வழி இருந்தது. அதாவது அப்பொருளை "கோர்பன்" —நன்கொடை— என்று சொல்லிவிட்டால் போதும். இவ்வாறு சொல்லிவிட்டால் தாய் தந்தையர்களைப் போஷிக்க வேண்டிய பொறுப்பு விட்டுப்போகும். தன்னுடைய கடமைகளினின்று விடுவித்துக் கொள்ள

இந்தச் சுலபமான வழியை அவர்கள் கையாண்டு வந்தார்கள். இந்த இருபதாவது நூற்றூண்டிலும் ஆங்கிலேயர்கள் இந்தியாவில் அடிக்கும் கொள்ளையை மூடிவைக்க முடியுமா? ஆகவே அக்கொள்ளைகளை நாசூக்கான முறையில் செய்வதற்காக இந்த யூதர்களின் பழைய வழக்கங்களைத் தேடிக் கண்டுபிடித்தார்கள் போலும். முதலாவது மகாயுத்தத்தின் போது இந்தியாவில் ஏராளமான செலவு செய்யவேண்டி யிருந்தது. இங்கிலாந்து சர்க்கார் இச்செலவுகளை ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை.

இத் தொகை யாவற்றையும் நன்கொடையாக இங்கிலாந்துக்குக் கொடுத்துவிட வேண்டும் என்று டில்லியிலிருந்த ஆங்கிலேய ஏஜெண்டுகளுக்கு உத்தரவு பிறப்பித்தார்கள். "வெகுமதி" என்று சொல்லப்பட்ட இந்தப் பகற்கொள்ளையை காங்கிரஸ் எதிர்த்திருக்கிறது. பம்பாய் சர்க்காரின் அட்வகேட் ஜெனரல்களாக இருந்துவந்த இரண்டு சட்ட நிபுணர்கள் கொண்ட ஒரு கமிட்டியை நியமித்து இது விஷயத்தைப் பரிசீலனை செய்ய உத்தரவிட்டது. ஷை கமிட்டி 1931-ல் தனது அறிக்கையை வெளியிட்டுள்ளது. அதில் இந்திய அரசாட்சி சட்ட திட்டங்களின்படி இந்திய சர்க்கார் பொது ஜனங்களின் வரிகளினின்று இங்கிலாந்து சர்க்காருக்கு யாதொரு விதமான 'வெகுமதி' யும் கொடுக்க இயலாது. ஆகவே அப்படிக் கொடுக்கப்பட்ட தொகை சட்ட விரோதமானது என்று எடுத்துச் சொல்லப்

பட்டிருக்கிறது. ஆனால் பிறர் பொருளைத் துணிவுடன் அபகரிக்க வேண்டுமென்ற பேராசைப் பேயினால் ஆட்டிவைக்கப்படும் இங்கிலாந்து சர்க்காருக்கு இந்த நியாயத்தை யார் எடுத்து ஓத முடியும்? அப்படி ஓதினாலும் அது ஏற்றுக் கொள்ளுமா? தவிர இன்று இங்கிலாந்து உலகத்தில் வல்லமை வாய்ந்த பேரரசுகளில் ஒன்று அல்லவா? இவர்களுடைய நெருங்கிய தோழர் அணுகுண்டு உற்பத்தியாளர்களான அமெரிக்க வல்லரசு அல்லவா? அப்படி இருக்க இவர்கள் செய்வது அநியாயம், அக்கிரமம் என்று சொல்ல யாருக்கு நெஞ்சில் தைரியம் பிறக்க முடியும்? இந்த நிலைமையில் இங்கிலாந்து எது செய்தாலும் அக்கிரமம் ஆகுமோ?

நம்மிடமிருந்து நேரில் பிடுங்கிக் கொண்டு போன தொகைகளைப்பற்றி மேலே சொன்னோம். இவைகளைத் தவிர மறைமுகமாகவும் நமக்குப் பல நஷ்டங்களை இவர்கள் ஏற்படுத்தி யிருக்கிறார்கள். இது வேண்டுமென்று செய்யப் பட்டதா? அல்லது அறியாமையால் செய்யப்பட்டதா? எப்படியானாலும் நம் நாட்டிற்கு ஏற்பட்ட நஷ்டம் நஷ்டம்தானே? இவர்களின் நாணய மாற்று ஏற்பாடுகள் மூலம் 1920–21 வருஷங்களில் $23\frac{1}{2}$ கோடி ரூபாய்வரை இந்தியாவிற்கு நஷ்டமேற்பட்டுள்ளது.

இது சம்பந்தமாக மிஸ்டர் மாக்டோனல்ட் எழுதியுள்ளது கவனிக்கத் தக்கது:

"இந்திய அரசாங்கத்தின் வரவுசெலவு கணக்கு

விஷயமாக இன்னும் ஒரு விஷயம் கவனிக்கத் தக்கது. வழக்கம்போல இதுவும் இந்தியாவுக்குப் பாதகம் விளைவிப்பதே ஆகும். வெகு நாட்கள் வரை ஒரு ரூபாயின் மதிப்பு பவுனின் பத்தில் ஒருபாகம் எனக் கணிக்கப்பட்டு வந்தது. அதாவது ஒரு ரூபாயை மாற்றினல் இரண்டு ஷில்லிங் கிடைத்து வந்தன. 1873-4 வரை நாணய மாற்று இந்த நிலையில் இருந்து வந்தது. அதன் பின்பு சிறுகச் சிறுக ரூபாயின் விலை குறைந்து கொண்டே போயிற்று. ஒருதரம் 2½ பென்ஸ் குறைவுற்றது. அடுத்தடுத்து இன்னும் குறைந்தது. ரூபாயின் விலை குறையக் குறைய இந்தியாவின் கடன் அதிகரித்துக் கொண்டே போயிற்று. கடன்களை எல்லாம் பவுனில் கொடுக்கவேண்டுமென்று தீர்மானித்திருந்தார்கள். ஆகவே ஒரு ரூபாயின் விலையில் ஒரு பென்னி குறைவு பட்டால் இந்தியக் கடன் தொகையில் ஒருகோடி ரூபாய் அதிகம் ஆயிற்று. 1895-ல் ரூபாயின் மதிப்பு 1 ஷில்லிங் 1 பென்னி ஆயிற்று.

" இவ்வமயம் நாணயம் முத்திரையிடும் தங்க சாலைகள் மூடப்பட்டன. அடையாள ரூபாய் (Token Rupee) என்பது தலைகாட்டிற்று. இதன் மதிப்பு 1 ஷில்லிங் 5 பென்ஸ் என்று தீர்மானித்துக் கொள்ளப்பட்டது. தங்கள் தங்கள் வீட்டிற்குப் பணம் அனுப்பவேண்டிய ஆபீஸர்களுக்கு இந்த நாணய மாற்றினல் பல கஷ்டங்கள் உண்டாயின. 1893-ல் ரூபாயின் விலைக் குறைவினல் ஏற்பட்ட நஷ்டத்தை

ஈடுசெய்யத் தனித்தனியான சம்பள உயர்வு கொடுக்கப்பட்டது. அதற்கு நாணய மாற்றத்தை ஈடு செய்யும் 'படி' (Exchange Compensation Allowance) என்று பெயர். 1912-ல் ரூபாயின் மதிப்பு ஸ்திரப் படுத்தப் பட்டது. அபபொழுது ஒவ்வொரு ஐரோப்பிய ஆபீஸர்களின் சம்பளத்துடனும் நாணய மாற்றுக்குத் தேவையான தொகையையும் சேர்த்துக் கொடுத்துவர ஆரம்பித்தார்கள். ஆபீஸர்கள் நஷ்டத்தினுல் கஷ்டப்படக் கூடாதுதான். அவர்களுக்கு நல்ல சம்பளம் கிடைக்கட்டும்; ஆனால் இந்த நாணய மாற்று என்பது இங்கிலாந்து சர்க்காரும், கஜானவும் செய்துவரும் கூத்தல்லவா? அவர்களின் கூத்தின் மூலம் இந்தியா கொடுக்கும் பணத்தின் மதிப்புக் குறைந்துவிட்டால் அதற்குப் பொறுப்பாளி இந்தியாவா? ஆகவே இந்த நாணய மாற்றுக்கான ஈடு தொகை முழுவதும் இங்கிலாந்தின் கஜானவினின்று எடுத்து வழங்க வேண்டும். ஏழை இந்தியப் பொதுஜனங்களை இதற்காக சிரமப் படுத்துவது நியாயமாகாது.

"இந்நாணய மாற்று விஷயம் இத்துடன் நின்று விடவில்லை. வெள்ளி நாணயத்தின் மதிப்புக் குறைந்தது இந்தியாவில் மட்டுமில்லை; வெள்ளி நாணயம் வழங்கும் எல்லா நாடுகளிலேயும் இவ்வாறு தான் ஆகியுள்ளது. ஆங்கிலேயர்களின் இந் நாணய மாற்றுச் சூழ்ச்சிகளின் மூலம் இந்தியாவில் பெரிய கிளர்ச்சியே ஏற்பட்டுவிட்டது. இன்னும்

இந்தியாவின் கடன் சுமை வலுத்துக்கொண்டு போகப் போக கஷ்டங்களும் அதிகரித்துக்கொண்டு போயின.

"இந்த நாணயப் பரிவர்த்தனை விஷயமாகக் கிளம்பியுள்ள விவாதக் கிளர்ச்சிகள் எண்ணிறந்தன. மிகவும் சிக்கலான விஷயம். இவைகளை யாவரும் எளிதில் புரிந்துகொள்ள முடியாது. இவ்வளவுக்கும் காரணம் இந்தியா அல்ல. இங்கிலாந்துதான். ஆகவே நாணயப் பரிவர்த்தனையில் ஏற்படும் நஷ்டத்தொகை முழுவதையும் இந்தியா கொடுத்துவிடவேண்டும் என்று விதிப்பது நியாயமாகாது. இங்கிலாந்து சர்க்காருக்குக் கொடுக்க வேண்டிய தொகைக்கும், இன்னும் இந்தியாவிலுள்ள இங்கிலீஷ் ஆபீஸர்களின் சம்பளத்திற்காகவும் இந்த நஷ்ட ஈடு கேட்பது சற்றும் பொருத்தமான விவகாரமாகாது.* "

இவை போன்ற சில்லறை வசூல்களைக் கணக்கிடுங்கால் இந்தியாவிற்கு சுமார் 100 கோடி ரூபாய் வரவேண்டி இருக்கிறது.

## நம்பிக்கைத் துரோகம் செய்யும் முறை

இந்தியாவின் அரசாங்கத்தையும் சொத்துக்களையும் காப்பாற்றுவது இங்கிலாந்தின் கடமை என்று அவர்களே எண்ணிக் கொள்கிறார்கள். வாரீசு இல்லாமல் போன இந்தியாவின் சொத்துக்

* Government of India. Page 155

களைக் காப்பாற்ற வந்த இவர்கள் அச் சொத்துக் களைக் கொண்டு இந்நாட்டிற்கு ஏதும் நன்மை செய் வதைச் சிந்திக்காது சதா தம் இனத்தாரையே கொழுக்க வைக்கப் பார்க்கிறார்கள். ஐ. ஸி. எஸ், ஐ. பி. எஸ் என்ற கோஷ்டிகள் இங்கிலாந்தின் கையாள்கள். அவர்களினால் இந்தியாவுக்கு ஏற்படும் நன்மையைக் காட்டிலும் இங்கிலாந்துக்குத் தான் அதிக நன்மை. கிளைவ் காலம் முதற்கொண்டு ஆங்கில அரசாங்கத்தினர் இந்தியாவைக் கொள்ளை யிட்டு இங்கிலாந்தில் கொண்டு சேர்த்துக்கொள்ள வேண்டும் என்ற நோக்கமுள்ளவர்கள் என்பதை மேலே விளக்கினோம். கிளைவின் நிர்வாக காலத்தில் கொள்ளையடிப்பதில் உதவியாயிருந்த உத்தியோகஸ் தர்களுக்கு எவ்வளவு ஊதியம் கிடைத்ததோ அதற்கு ஒப்பான சம்பளம் இந்த ஐ. ஸி. எஸ், ஐ. பி. எஸ், உத்தியோகஸ்தர்களுக்கும் கொடுக்கப் பட்டது. இந்தியாவின் நிலைமை என்ன? அரசாங்க வருவாய் என்ன? என்ற விஷயங்களைச் சிந்தித்து இவர்களின் சம்பளம் நிர்ணயிக்கப்படவில்லை. இப் பொழுது தேசிய சர்க்கார் அமைக்கப்பட்டு வரு கிறது. இந்த ஆபீஸர்கள் இச்சர்க்காரின் கீழ் வேலை செய்ய அச்சப்படுகிறார்கள். வெளியேற விரும்பு கிறார்கள். இந்த ஆபீஸர்களின் குழாத்தின் தலைவர் களான ஆங்கிலேயர்கள், இவர்கள் செய்துவந்த திருப்பணிகளை மெச்சி அதற்கான சன்மானமளித்து வீட்டிற்கு அனுப்பவேண்டும் என்று எண்ணுகிறார்

கள். ஆனால் இந்தச் சன்மானத் தொகையை யார் கொடுப்பார்கள் என்பது பிரச்னே. இதுவரையிலும் இதுபோன்ற செலவுகள் யாவற்றையும் இந்தியாவி னின்றே பிடுங்கிக் கொண்டிருந்தார்கள். அதை ஒட்டி இப்பொழுது இச் செலவு தொகையை இந்தியா கொடுத்துவிட வேண்டுமென்று முயற்சித்தும் வருகிறார்கள்.

சமீபத்தில் முடிவுற்ற இரண்டாவது மகா யுத்தத்தில் இந்தியா பங்கெடுத்துக் கொள்ள விரும்ப வில்லே என்பது நாம் யாவரும் அறிந்த விஷயம். இருந்தாலும் லக்ஷக்கணக்கான இந்திய யுவர்களே இழுத்துச் சென்று பட்டாளத்தில் சேர்த்துக் கொண்டார்கள். இவர்கள் இங்கிலாந்தின் கட்சியிலிருந்து கொண்டு போர் புரிந்தனர். யுத்தம் முடிந்து விட்டது. இனிப் பட்டாளம் எதற்காக? ஆகவே அவர்களே வீட்டுக்கு அனுப்புகிறார்கள். இவர்கள் இங்கிலாந்திற்குச் செய்த உதவிக்காகச் சன்மானம் அளிக்க விரும்புகிறார்கள். ஆனால் சன்மானத்திற்கான செலவு யாரைச் சேரவேண்டும்? இங்கிலாந்தையா? இந்தியாவையா? இந்திய அரசாங்கம் இங்கிலாந்தின் கைக்குள் மாட்டிக் கொண்டிருக்கிறதல்லவா? அவர்களின் உத்தரவின் மேல் இச்சிப்பாய்களுக்கு இந்தியாவில் போதுமான நிலம் முதலியன கொடுத்துதவப்படுகிறது. இங்கிலாந்துக்குச் சொந்தமான கனடா, ஆஸ்திரேலியா போன்ற தேசங்களில் தரிசாகக் கிடக்கும் விஸ்தார

மான இடங்களை இச்சிப்பாய்களுக்குக் கொடுத்தால் என்ன? ஜனநெருக்கத்தினால் போதிய நிலம் இல்லாது தவிக்கும் இந்தியாவில் தானா அச்சிப்பாய் களுக்கும் நிலம் கொடுக்கவேண்டும்?

## ஐந்தாவது அத்தியாயம்

# அடகு பிடிக்கும் முறை

### ஸ்டர்லிங் நிலுவைகள்

இங்கிலாந்திற்குப் பணநெருக்கடி நேரும்போ தெல்லாம் அதைத் தீர்த்துக் கொள்ள இந்தியாவின் பொருள்களை எவ்வாறு அபகரித்து வந்தார்கள் என்பதை மேலே கவனித்தோம். இந்தியப்பொதுப் பணத்தைச் சுரண்டுவது என்னும் வழக்கம் ஆதியில் கிளைவினால் துவக்கி வைக்கப்பட்டது. இவரே இங்கி லாந்தை ஒரு சாம்ராஜ்ய நாடாகச் செய்து புகழ் சூடி யவர். இக் கொள்ளையடித்தலை கிளைவ் வெளிப்படை யாகச் செய்து வந்தார். ஆனால் அவருக்குப்பிறகு இத் தொழிலை நடத்திவந்தவர்கள் இக்கொள்ளையை மறை முகமாகச் செய்யக் கற்றுக்கொண்டார்கள். கிழக்கு இந்தியா கம்பெனியின் காலத்தில் அவர்கள் கிளைவைப் போல் பணத்தைக் கப்பலேற்றாமல் அதைக்கொண்டு சாமான்களை வாங்கி அவைகளை இங்கிலாந்தில் விற்பனைக்காக வெளியேற்றி வந்தார் கள். இங்கிலாந்துக்குத் தேவையான ஏதோ சாமான்

களை விலைக்கு வாங்கி எடுத்துப்போகிறார்கள் என்று உலகம் எண்ணிக் கொள்ளவேண்டும் என்பது அவர்களின் நம்பிக்கை. ஆனால் இந்தச் சாமான்களை வாங்கப் பணம் எங்கிருந்து வந்தது? பொதுஜனங்களிடம் வசூலிக்கப்பட்ட வரிப் பணத்தைத்தான் இவ்வாறு உபயோகித்துக் கொண்டார்கள். பிறகு கொள்ளையடிக்கும் முறையை இன்னும் சற்று ஒளி மறைவாக இங்கிலாந்து சர்க்கார் நடத்தி வந்திருக்கிறது. வெளிநாடுகளில் ஏற்பட்ட யுத்தங்கள் பெரும்பாலும் இங்கிலாந்தினால் ஏற்பட்டன. அந்த யுத்தங்களுக்கும் இந்தியாவுக்கும் யாதொரு சம்பந்தமும் கிடையாது. அப்படி இருந்தும் அவைகளுக்காக ஏற்பட்ட செலவுகளை இந்தியாவின் கணக்கில் எழுதி விட்டார்கள். இவர்களுடைய இந்தப் பொய்க் கணக்குச் சாதனைகளை நம்மில் சிலர்தான் கண்டு கொள்ள முடியும். சாதாரண ஜனங்கள் இதைக் கண்டுபிடிக்கவே முடியாது. அவ்வளவு தந்திரமாகச் செலவு கணக்குகள் தயாரித்திருக்கிறார்கள். இதன் பின்பு முதலாவது மகாயுத்தத்தின்போது இன்னும் ஒரு அபூர்வமான முறையைக் கைக்கொண்டார்கள். அதாவது இங்கிலாந்து விஷயமாக இந்தியாவில் ஏற்பட்ட செலவுகளின் பெரும் பாகத்தை 'நன்கொடை' கொடுக்கப்பட்டது என்று எழுதிக் கழித்து விட்டார்கள். யாருக்கும் நன்கொடை கொடுக்க இந்திய அரசாங்கத்திற்கு அதிகாரமோ, சட்டமோ கிடையாது. இருந்தபோதிலும் இங்கி

லாந்து சர்க்காரின் தூண்டுதலின்மேல், அவர்களின் கையாள்களான இந்திய அரசாங்கம் கொடுக்க வேண்டி நேர்ந்தது. இது போன்ற முறைகளில் நம் நாட்டினின்று எடுத்துச் சென்ற தொகைகளை அவர்கள் திருப்பிக் கொடுக்கப் பாத்தியப்பட்டவர் களாகிறார்கள். யார்தான் மேலும் மேலும் கடன் கொடுத்துக்கொண்டே வருவார்கள்? ஆகவே அவைகளைக் கடன் என்று கேட்டு வாங்காமல் கொள்ளையிட்டே கொண்டு போயிருக்கிறார்கள். கொள்ளை என்று வெளியில் தெரியாத முறையில் தந்திரம் எல்லாம் செய்திருக்கிறார்கள். இவைகளால் தங்களின் கௌரவத்தைக் காப்பாற்றிக் கொண்டதாக எண்ணம்.

ஆங்கிலேயர்கள் இந்தியாவைக் கொள்ளை கொள்ளும் தந்திரங்களில் ஏதும் முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறதா என்று தெரிந்துகொள்ள சென்ற உலக யுத்தத்தைப்பற்றிக் கவனிக்க வேண்டும். இந்தச் சமயத்திலும் இங்கிலாந்தினிடம் போதுமான பணம் இருக்கவில்லை. இவர்களின் நெருக்கடியை இந்தியாவே தீர்த்து வைக்கவேண்டி நேர்ந்திருக்கிறது. இந்தியாவினின்று ஏராளமான சாமான்கள் தேவையாக இருந்தன. அவைகளை எல்லாம் எடுத்துக்கொண்டு, அவைகளைப் பெற்றுக் கொண்டதற்கு ஒரு ரசீது எழுதி நம் கையில் கொடுத்துவிட்டுப் போய் விட்டார்கள். இந்த ரசீதினால் நம் நாட்டிற்கு என்ன லாபம்? நமக்கு

வேண்டிய சாமான்களை மற்ற இடங்களினின்று நாம் பெற்றுக்கொள்ள முடியாமல் போய்விட்டது. இது மிகவும் சாமர்த்தியமான சூழ்ச்சிதான். அதிலும் மிகவும் சுலபமானது. ரசீது கொடுத்து நம் சாமான்களைப் பெற்றுக் கொள்ள இவர்களால் எவ்வாறு முடிந்தது என்றால் அதற்குக் காரணம் தான் ரிஸர்வ் பாங்கு. இந்த ரிஸர்வ் பாங்கின் சட்ட திட்டத்தில் ஒரு பெரும்பிழை யுள்ளது.*

தங்கக் கட்டியையும், இங்கிலாந்து எழுதிக் கொடுத்துள்ள ரசீதையும் சமமாக மதிக்க முடியுமா? தங்கமானால் எங்கும் விலை போய் விடும். ஆனால் இந்த ரசீதினால் என்ன பயன்? இவ்வாறு ஆதார மில்லாத ஒரு துண்டு ரசீது கடிதத்தைத் தங்கத்திற்

* ரிஸர்வ் பாங்கு என்பது நம் நாட்டில் பொருள் செலாவணிக்கு நடுநாயமாக ஏற்படுத்தப்பட்டுள்ள ஒரு ஸ்தாபனம். இதினின்று தான் நாணயங்கள், நோட்டுக்கள் வெளிவருகின்றன. இதன் சட்ட திட்டங்களின் 33வது பிரிவின் 2வது உட்பிரிவையே நாம் கவனிக்க வேண்டியது. நம் நாட்டில் நாணயங்களை வெளியிடுவதற்கு ஆதாரமாகத் தங்கம் அப்பாங்கில் இருக்க வேண்டும். பாங்கில் 40 ரூபாய் மதிப்புள்ள தங்கம் கையிருப்பிருந்தால் 100 ரூபாய் நாணயங்களோ, நோட்டுக்களோ வெளியிடலாம். இந்த ஆதாரமான தங்கம் அங்கு இருக்க வேண்டியது அவசியம். காலம் செல்லச் செல்ல தங்கம் என்ற வார்த்தை பல மாறுதல்களை அடைந்து விட்டது. இப்பொழுதுள்ள சட்டப் படி அந்த ஆதாரத் தங்கம் முத்திரைப் பவுனாகவோ, அல்லது தங்கக் கட்டியாகவோ அல்லது ஸ்டர்லிங் நிலுவை நோட்டாகவோ இருக்கலாம் என்று மாற்றி விட்டார்கள். ஸ்டர்லிங் நிலுவை நோட்டு என்பதே அவர்கள் நமக்கு எழுதிக் கொடுத்த ரசீது.

குச் சமமாக பாவித்ததே இந்த ரிஸர்வ் பாங்கின் குற்றமாகும். நேர்மையான பொருளாதார விவகாரத்திற்கு இது உகந்ததல்ல. இச்சட்டத்தை உபயோகித்துக் கொண்டு இந்தியாவில் ஏராளமான நோட்டுக்கள் அச்சடித்துப் பரப்பப்பட்டன. பணப் பெருக்கத்தால் ஏற்பட்ட கஷ்டநஷ்டங்களை இன்னும் அனுபவித்தே வருகிறோம். "ஸ்டர்லிங் ஸெக்யூரிடி" என்ற தடபுடலான பெயர் சூட்டப்பட்ட உபயோகமற்ற ரசீதுகள் பல்லாயிரம் கோடி ரூபாய்களுக்கு ரிஸர்வ் பாங்கில் நிரப்பப்பட்டன. பாங்கும் பல்லாயிரம் கோடி ரூபாய் மதிப்புள்ள காகித நோட்டுக்களை அச்சடித்து விட்டது.

காகித நோட்டுக்கள் எங்கும் சகஜமாகப் புழங்கத் தொடங்கின. ஏராளமாக அச்சிடப்பட்ட நோட்டுக்களை கொண்டு இந்தியாவில் கிடைக்கக் கூடிய பல முக்கியமான சாமான்களை வாங்கி வெளியேற்றினர்கள். ஆகாரப் பொருள்கள், சணல், தேயிலை போன்றவைகள் ஏராளமாக வாங்கப்பட்டன. அதுவும் சர்க்காரால் நிர்ணயிக்கப்பட்ட விலையில். இவ்வாறு சாமான்களை வாங்கி வெளியேற்ற ஏற்படுத்தப்பட்ட ஸ்தாபனமே "யுனைடெட் கிங்டம் கமர்ஷியல் கார்ப்பொரேஷன்" என்பது. இந்த ஸ்தாபனத்தின் உதவியால் எல்லாவிதமான வியாபாரச் சரக்குகளும் இந்திய ஜனங்களின் கைகளினின்று தந்திரமாகப் பறிக்கப்பட்டன. ரூபாய் என்ற பேருக்கு எதையோ கொடுத்தார்கள்.

அந்த ரூபாய்களுக்கு மதிப்பு என்பதே கிடையாது. ஏனெனின் அதற்கு ஆதாரமோ உபயோகமற்ற துண்டு ரசீது. ஏழு மடங்குக்கு அதிகமாகப் பணப் பெருக்கம் ஏற்பட்டது. அதாவது ஒரு ரூபாய் புழங்கிவந்த இடத்தில் ஏழு ரூபாய்கள் புழங்கிவந் தன. நாட்டின் பொருளுற்பத்தி நிலை சற்றும் மாறுபட வில்லை. பணம் பெருக்கப்பட்டது போல் உள்நாட்டு உற்பத்திப் பொருள்கள் அதிகரிக்கப் படவில்லை. வெளிநாடுகளினின்றும் சாமான்கள் நம் நாட்டுக்கு வரவில்லை. இவ்விரண்டு முறை களிலும் நாட்டின் பொருள்நிலை மாறுபடவில்லை. ஆனல் பணப் பழக்கம் மட்டும் அதிகரித்தது. இத னல் சாமான்களின் விலை கண்மூடித்தனமாக உயர்ந்தது. பொது ஜனங்கள் பல ஹிம்ஸைகளுக் குள்ளானர்கள். இங்கிலாந்து சர்க்கார் எழுதிக் கொடுத்து வந்த உபயோகமற்ற ரசீதுகளாகிற ஸ்டர்லிங் ஸெக்யூரிடிகளை இந்தியா சர்க்கார் வாங்கி ரிஸர்வ் பாங்கில் பந்தோபஸ்து செய்து கொண் டார்கள். இதனல் இங்கிலாந்துக்குக் காரியம் சுலப மாக முடிந்து வந்தது. வாங்குகிற சாமான்களுக்கு ரொக்கம் கேட்டால் அல்லவோ அவர்களுக்குக் கஷ்டம் தெரியும். துண்டுக் கடுதாசியை எழுதிக் கொடுத்தால் சாமான் கிடைக்கும் என்று இருந்தால் அது சுலபமான முறையல்லவா? இந்திய சர்க் காரின் புத்தியற்ற இந்த நடவடிக்கையைக் குறித்து காமன்ஸ் சபையில் மிகவும் மெச்சிக்

கொண்டார்களாம். இந்தியாவின் 'உதார குணத்தினல்' இங்கிலாந்தின் பொருள் நெருக்கடி நிவர்த்திக்கப்பட்டது என்ருர்களாம். இந்தியாவின் உதாரகுணமாம்! இங்குள்ள ஏழை, எளியவர்களைப் பசியினல் கொலை செய்து விட்டு அபகரித்துக் கொண்டுபோன இவர்களின் தந்திரத்தை மூடி மறைக்க இந்தியாவின் உதார குணத்தைப் புகழ்கிருர்களாம்!

## யுனைடெட் கிங்டம் கமர்ஸியல் கார்ப்போரேஷன் செய்த கைங்கரியம் :

இந்திய மக்களின் வாயினின்று உணவைப் பிடுங்கி வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்துவந்த இந்தக் கொள்ளை வியாபார ஸ்தாபனத்தின் தலைவரான ஸர் பிரான்ஸிஸ் ஜோஸப் என்பவர் லண்டனில் சொல்லியுள்ளதைக் கவனியுங்கள் :—

" இத்தாபனம் 1940 ஜூனில் இந்தியாவில் வேலையைத் தொடக்கியது........அவ்வமயம் மத்திய கிழக்குப் பிரதேசங்களுக்குப் பலவிதமான சாமான்கள், ஏராளமான அளவில், வெகு துரிதமாக அனுப்ப வேண்டியிருந்தன. ஐக்ய நாடுகளுக்கு வேண்டிய சாமான்களை அனுப்ப இந்தியா ஒரு முக்கிய நாடாகக் கருதப்பட்டது. வெளிநாடுகளுக்கு அவசரமாக வேண்டிய பொருள்கள் யாவற்றையும் இந்திய சர்க்காரின் உதவி கொண்டு இந்த ஸ்தாபனம் வெகு சீக்கிரமாக சேகரித்துவிட்டது. அதிக

கால தாமதமில்லாது இந்தியாவினின்று பர்ஸியா தேசத்திற்குக் கோதுமை அனுப்பப்பட்டது. இக் கோதுமை அங்கு போய்ச் சேர்ந்ததால் 1941-ம் வருஷத்தில் கோடையிலும், வசந்த காலத்திலும் அங்கு ஏற்படவிருந்த பஞ்சம் நிவர்த்திக்கப் பட்டது. இது தவிர பர்ஸியாவுக்கு இன்னும் பல ஆகாரப் பொருள்களும் அனுப்பி வைக்கப்பட்டன. சர்க்கரை, தேயிலை முதலியனவும், துணியும், இன்னும் அவர்களின் தொழிற்சாலைகளுக்குத் தேவையான பல மூலப் பொருள்களும் அனுப்பப்பட்டன. இவை எதுவும் கொஞ்சமாக அனுப்பப்படவில்லை. ஒரே யடியாகப் பல்லாயிரம் டன் கணக்கில் கப்பலேற்றப்பட்டன. சிமெண்ட் முதல் மருந்துகள் வரை பெரிதும் சிறிதுமாக யாவும் வெளியேறின. இன்னும் ஸிரியா, பாலஸ்தினம் போன்ற நாடுகளுக்குத் தேவையான பொருள்களையும் இந்தியாவினின்றே அனுப்பி வைத்தோம். துருக்கி தேசத்திற்கு, இரும்பு எஃகு, நூல், சாக்குப் படுதா, கோணிகள், கயிறு, தோல் என்ற பல சாமான்களும் அனுப்பப்பட்டன....

"இவ்வளவு சாமான்களை வெளியேற்றியும், இதற்கு மேற்கொண்டு ருஷ்ய தேசத்திற்குத் தேவையான பொருள்களில் ஒரு பாகத்தை இந்தியாவே கொடுத்து உதவ முடியும் என்றும் தெரிந்தது. உடனே ஒரு நீண்ட பட்டியல் தயாரிக்கப் பட்டது. அதிலுள்ள ஒவ்வொரு சாமானும் மிகவும் அதிக

மான அளவில் தேவையாக இருந்தது. அத்துடன் வெகு சீக்கிரத்திலேயே வேண்டியிருந்தது. அந்தப் பட்டியலின் ஒரு பாகமாவது கோணிப்பைகள், சணல் கயிறு, கான்வாஸ் துணி, தோல், அரக்கு, தேயிலை, மணிலாக் கொட்டை, புகையிலை, 'கிராபைட்' என்பன. இந்த சாமான்கள் ஒவ்வொன்றும் எவ்வளவு டன்கள் கப்பலேறின என்பதைப்பற்றி இங்கு விவரம் கொடுக்க முடியாது. ஆனால் ஒரே புள்ளி விவரத்தைக் கொண்டு பாக்கி சாமான்கள் இவ்வளவு தான் வெளியேறி இருக்கக் கூடும் என்று நாமே ஊகித்துக் கொள்ளலாம். சமீபத்தில் கிடைத்த ஒரு ஆர்டரில் ஒரு கோடியே பத்துலக்ஷம் சாக்குப் பைகள் கேட்டிருந்தார்கள்."

"கடைத் தேங்காயை எடுத்து வழிப் பிள்ளையாருக்கு உடைத்தல்" என்பது இதுதான். ஊரான் வீட்டுச் சொத்தை எடுத்துத் தெருவில் போகிறவனுக்குத் தானம் பண்ண இவன் யார்? பர்ஸியாவை பஞ்சத்தினின்று காப்பாற்றியாகி விட்டது. ஆனால் இந்தியாவின் கதி என்ன? ஏற்கெனவே இந்திய ஜனங்கள் போதுமான உணவின்றி, உடையின்றி, வீடின்றித் தவிக்கிறார்கள். இப்படிக் கஷ்டப்படும் இந்நாட்டினின்று இதுபோன்ற அத்யாவசியமான பொருள்களைக் கறந்து போய்விட்டார்கள். மேற்படி துண்டுக் காகிதத்தை மதித்து நமக்கு வேண்டிய சாமான்களை வேறு எந்த நாடும் கொடுக்கத் தயாரில்லை. நாட்டின் சாமான்கள்

துரிதமாக வெளியேறி வெளிநாட்டுச் சாமான்கள் போதுமான அளவில் இறக்குமதி யாகாத எந்த நாட்டிலும் விலை வாசிகள் ஏறிவிடுவது சகஜம். அப்படியும் உயர்ந்த விலையில் விற்கமுடியாமல் சாமான்களின் விலையைச் சர்க்கார் கட்டுப்படுத்தி விட்டார்கள். இந்த விலையில் யாருமே சாமான்களை விற்கத் தயாராக மாட்டார்கள். ஆகவே சேமித்து வைப்பதையும் தடுத்துச் சட்டம் இயற்றினார்கள். அக்காலத்தில் இந்தியா இருந்து வந்த நிலையில் இங்கிலாந்து தன்னுடைய பொருள் நெருக்கடியைத் தீர்த்துக் கொள்ள எண்ணியது முற்றிலும் வஞ்சக மாகும்.

இங்கிலாந்துக்குத் தேவையான சாமான்களை வாங்க இவ்வாறு பணப்பெருக்கத்தை விளைவிப்பது சற்றும் நியாயமான முறையாகாது. இதற்கு விரோதமாக இருந்து வந்த சட்டதிட்டங்களை மீற வைஸ்ராயின் பாதுகாப்புச் சட்டங்கள் மிகவும் உத வியாக இருந்தன.

## ஸ்டர்லிங் பத்திரங்களுக்கு மதிப்பு உண்டா ?

" ஸ்டர்லிங் ஸெக்யூரிடி " என்று எவ்வளவு பிரமாதமான பேராகக் கொடுத்தாலும் அது தங்க மாகி விடாது என்பதை முன்பு விளக்கினோம். இவைகள் இந்தியாவினின்று வாங்கிய கடனுக்குப் பதிலாகக் கொடுத்த பிராமிஸரி நோட்டுகள். கடன் வாங்குகிறவனின் யோக்யதையைப் பொறுத்தே

இந்நோட்டுகளுக்கு மதிப்பு ஏற்படுகிறது. கையில் காலணு இல்லாத ஆண்டி ஒருவன் பிராமிஸரி நோட்டு எழுதிக் கொடுத்தால் நாம் கடன் கொடுப் போமா? அதே போல நமக்குக் கடன் பத்திரம் எழுதிக்கொடுத்துள்ள கடன்காரனை இங்கிலாந்தின் இன்றைய நிலைமை என்ன? வருஷம் ஒன்றுக்குச் சராசரி 500 கோடி பவுன் வீதம் இந்த யுத்தத்திற் காகச் செலவு செய்து வருகிறது. இவ்வளவு பண மும் எங்கிருந்து வரும்? ஆகவே இதற்கு முன்பு அவர்கள் சேமித்து வைத்திருந்த அன்னிய நாட்டு அடமானப் பத்திரங்களை எல்லாம் இப்பொழுது கடகடவென்று விற்று வருகிறது. பல்லாயிரங் கோடிகள் பெறுமானமுள்ள அடமானச் சீட்டுகள் கையை விட்டுப் போய்விட்டன. இந்த மாதிரியான தாழ்நிலைமையில் இங்கிலாந்தின் பொருளாதார விஷயமாக அதை நாம் நம்பமுடியுமா? அவர்கள் எழுதிக் கொடுத்துள்ள இந்த நோட்டுகளை நாம் எவ்வாறு மதிக்கமுடியும்? அது ம்ட்டுமல்ல. சில வருஷங்களுக்குப் பிறகு இங்கிலாந்து நல்ல நிலை மையை அடைந்து விடுகிறது என்றே வைத்துக் கொள்வோம். அவ்வமயம் பார்த்து நம் பணத்தை வசூலித்து விடலாம் என்றால்தான் முடியுமா? அது வும் முடியாது. ஏனெனில் இப்பத்திரங்களை இன்ன முறையில்தான் வசூலிக்கலாம் என்றும் விதித்திருக் கிறார்கள். இந்த ஏற்பாடுகளை எல்லாம் கவனிக்கை யில் அவர்களின் கடன் பத்திரங்கள் நமக்கு ஏதும்

பயனளிக்குமென்றே தோன்றவில்லை. போகட்டும். அவர்கள் ரூபாயாக உடனே திருப்பித்தர வேண்டாம். நமக்கு வேண்டிய சாமான்களையாவது நம் இஷ்டப்படி வாங்கிக் கொள்ளத்தான் முடியுமா? அதுவும் முடியாது. இங்கிலாந்தின் சௌகர்யா சௌகர்யங்களைப் பொறுத்து, அது முகம் மலர்ந்து நமக்குக் கொடுக்கும் போதுதான் நாம் கை நீட்டிப் பெற்றுக்கொள்ள வேண்டும். மேலே சொன்ன முறைகளில் இங்கிலாந்து அதன் கஷ்ட நிலைமைகளை நிவர்த்தித்துக்கொள்ள இந்தியாவை எவ்வளவு பிழிந்து எடுக்க முடியுமோ அவ்வளவும் பிழிந்து விட்டார்கள். இந்திய அரசாங்கம் என்ற ஆங்கிலக் கொள்ளைக்காரர்களின் குற்றேவலாளர்கள் இப் பகற் கொள்ளைக்குப் பெரிதும் உதவியாக இருந்து முடித்துக் கொடுத்திருக்கிறார்கள்.

## மாருத மதிப்புள்ள நாணயம்

இந்தியா ஒரு விவசாய நாடு. இந்நாட்டின் நாணயத்திற்கும், மற்ற நாட்டின் நாணயங்களிற்கும் வித்யாசமுண்டு. இந்நாட்டின் நாணயம் கூடிய வரையில் ஒரே மதிப்பைக் குறிக்கக் கூடியதாக இருத்தல் அவசியம். ஆலை முதலாளி அவனுடைய பொருள்களை விற்றுவந்த தொகையை உடனே பாங்கில் கட்டிவிடுகிறான். அதே போல ஒரு ஆலைத் தொழிலாளியும் தனக்குக் கிடைக்கும் சம்பளத்தைக் கொண்டு ஒரு வாரத்திற்குள் தனக்கு

வேண்டிய ஆகாரப் பொருள்கள் முதலியவற்றை வாங்கி உபயோகித்துக்கொள்கிறான். இந்த ஒரு வாரத்திற்குள் அவனுக்குக் கிடைக்கும் நாணயத்தின் மதிப்பு அதாவது அவன் அதைக் கொண்டு வாங்கக் கூடிய சாமான்களின் அளவு அதிகம் வித்யாஸப்படுவதில்லை. ஆனால் விவசாயி ஒருவனை எடுத்துக் கொள்ளுங்கள். இந்த வருஷம் அவன் உற்பத்தி செய்யும் நெல்லை விற்று விடுகிறான் என்று வைத்துக் கொள்ளுங்கள். அறுவடை சமயத்தில் நெல் மலிவாகவே விற்கிறது. இவ்வாறு விற்று வந்த தொகையைக்கொண்டு அவன் வருஷம் பூராவும் அவனுடைய பிற தேவைகளை வாங்கி உபயோகிக்க வேண்டும். அறுவடைக் காலம் தவிர மற்றக் காலங்களில் தானியங்களின் விலை அதிகமாகி விடுகிறது. அதாவது ரூபாயின் சக்தி குறைந்து விடுகிறது. அறுவடையின் பொழுது அதே ரூபாய் அதிக நெல்லை வாங்க முடிந்தது. ஆனால் இப்பொழுதோ? இது போல் ஒவ்வொரு ஆகாரப்பொருளும் விலை கூடிக்கொண்டே போனால் அவன் தன்னைச் சரியாக சம்ரக்ஷித்துக்கொள்ள முடிவதில்லை. அறுவடைக் காலத்தில் நெல்லை விற்பதைக் காட்டிலும் அதைத் தன் வீட்டிலேயே சேமித்து வைப்பது மேல் என்று அவனுக்குப் படுகிறது. குடியானவனின் சேமிப்பு புத்தியானது தன்னைக் காப்பாற்றிக்கொள்ள ஏற்பட்டது. சர்க்காரின் நாணய மதிப்பு ஒரே சீராக இல்லாதிருப்

படுதே இதன் காரணமாகும். ஆலைத் தொழில்களை ஆதாரமாகக் கொண்டுள்ள நாடுகளிலுள்ளது போன்ற நாணய ஏற்பாடு விவசாய நாடாகிய இந்தியாவுக்கும் ஒத்து வரவேண்டும் என்ற அவசியமில்லை. இங்குள்ள நாணயம் நிரந்தரமாக ஒரே மதிப்புடையதாக இருத்தல் அவசியம். பஞ்ச காலத்தில் குடியானவர்கள் நெல்லை அதிகமாகச் சேமித்துக் கொண்டே போகிறார்களே என்று ஓலமிடுவதில் பிரயோஜனமில்லை. அவர்கள் கொடுக்கும் நெல்லுக்குப் பதில் என்றும் மாறாத 'வாங்கும் சக்தி' அவர்களுக்கு அளிக்கப்பட வேண்டும். தற்பொழுதுள்ள ரூபாய் இதற்குப் பிரயோசனமில்லை. இதை அறிந்து கொள்ளாத அரசாங்கம் குடியானவர்களின் மீது குற்றம் சொல்லி வந்தால் அது அரசாங்கத்தின் மூடத்தனத்தையே காண்பிக்கின்றது. குடியானவனின் ஒத்துழைப்பைப் பூர்ணமாகப் பெற வேண்டுமாயின் அவர்களுக்குப் பயன் அளிக்கக் கூடிய முறையில் கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்து ஒழுங்காக நடத்திவர வேண்டியது அவசியம்.

நம் நாட்டில் பணத்திற்கு இரண்டு வேலைகள் உள்ளன: (1) பொருள் மாற்றத்திற்கு இது தேவைப்படுகிறது. (2) வாங்கும் சக்தியை ஒரு வருஷம் வரை சேமித்து வைக்கவும் இப்பணம் உபயோகப்பட வேண்டும். இரண்டாவதாகச் சொல்லப்பட்ட 'வேலைக்கே மிக அதிகமான அளவில் நாம்

உபயோகித்துக் கொள்ளுகிறோம். முதல் சேர்த்து வட்டிக்குவிட்டு ஜீவனம் செய்பவர்கள் குறைவு. விற்று வந்த தொகையைக் கொண்டு அடுத்த வருஷம் வரை சாமான்களை வாங்கி ஜீவிப்பதே நம் குடியானவர்களின் போக்கு. ஆகவே விற்றுவந்த தொகையின் மதிப்பு குறைந்து விடுவதால் அவர்கள் கைமுதலை இழக்க நேரிடுகிறது. இதனால் வேண்டிய அளவு ஆகாரப் பொருள்களைக்கூட வாங்க முடியாமல் ஜனங்கள் கஷ்டப்படுகிறார்கள். ஜெர்மனி ஆலைத்தொழில்கள் நிறையப்பெற்ற நாடு. அங்கு ஒரு சமயம் இதே போல் பணப் பெருக்கம் ஏற்பட்டது. உடனே ஜனங்கள் என்ன செய்ய ஆரம்பித்தார்கள் தெரியுமா? சாமான்களை வாங்கிக் குவித்துக் கொண்டார்கள். பணப் பெருக்கம் என்றால் பணத்தின் மதிப்புக் குறைதல் என்று அர்த்தம். ஆகவே பணத்தை நம்ப முடியவில்லை. சாமான்களை வாங்கிச் சேகரித்துத் தங்கள் தங்களின் 'வாங்கும் சக்தியை' ஓரளவு ஸ்திரப்படுத்திக் கொண்டார்கள். அவ்விடத்திய குடியானவர்கள்கூட பெரிய பெரிய 'மிஷின்களை' வாங்கி வைத்துக் கொண்டார்கள். அந்த 'மிஷின்கள்' எதற்காக உபயோகப்படுபவை, அதை எவ்வாறு இயக்குவது என்பது ஒன்றுமே அவர்களுக்குத் தெரியாது. நாணயத்தின் மதிப்பு அடிக்கடி மாறுவதால் நாட்டில் இதுபோன்ற விபரீதங்கள் நிகழத்தான் செய்யும். நாணயங்களின் இந்த ஒரு முக்கியமான வேலையை உணர்ந்து

அரசாங்கம் ஸ்திரமான மதிப்புள்ள ஒரு நாணயத்தை ஏற்படுத்த வேண்டியது அவசியமாகிறது. இதற்குச் சரியான வழி அச்சிடப்படும் நாணயங்களுக்கோ, நோட்டுக்கோ ஆதாரமான தங்கம் எப்பொழுதும் கைவசமிருக்கவேண்டும். அல்லது நோட்டுக்களுக்குப் பதில் தங்கம் கேட்டபோது கிடைக்கும்படி ஏற்பாடு செய்யவேண்டும். இது போன்ற ஏற்பாடுகள் மூலமே பொதுஜனங்கள் நன்மை பெறமுடியும். தற்பொழுது புழங்கிவரும் 'பிணை' நோட்டுகளால் நமக்கு யாதொரு பயனும் கிடையாது. இந்த பிணை நோட்டுகளை நாளைக்கு யாரும் காலணாவுக்கும் மதிப்பார்களா என்பது சந்தேகாஸ்பதமான பிரச்னையாகும்.

இந்த யுத்தம் காரணமாக இந்தியா பணக்கார நாடாகி விட்டது என்று பேசிக்கொள்கிறார்கள். இந்த யுத்தத்திற்கு முன்பு இந்தியா இங்கிலாந்திற்குக் கடன் திருப்பிக் கொடுக்க வேண்டிய நிலையிலிருந்தது. இன்று இங்கிலாந்தினிடமிருந்து கடன்களைத் திருப்பி வசூலிக்க வேண்டிய நிலையிலிருக்கிறது. ஆகவே பணக்கார நாடாகி விட்டது என்பது அவர்களின் தீர்மானம். இது உண்மையா? நாம் கடன் கொடுத்திருப்பது உண்மை. ஆனால் அக்கடன் நமக்கு எப்பொழுது திரும்பக் கிடைக்கும்? அத்தொகை நமதுகைக்கெட்டிய பிறகல்லவோ நம் நிலைமையைச் சரி பார்த்துக் கொள்ள முடியும்? நிற்க, இங்கிலாந்து கொடுத்துள்ள கடன் ரசீதுகள் தற்சமயம் நமக்கு

யாதொரு பயனையும் அளிப்பதில்லையே. அதைக் கொண்டு நமக்குத் தேவையானவைகளை நாம் வாங்கிக் கொள்ள முடியாதே. அப்படியுள்ள கடன் சீட்டுக்களை வைத்துக்கொண்டுள்ள இந்தியா பணக்கார நாடு என்பது வீண் புரளி. இந்தக் கடனும் நாம் மனமொப்பிக் கொடுத்ததா? நம்மிடமிருந்து கட்டாயப் படுத்திப் பிடுங்கிக் கொள்ளப்பட்டது. அதுவும் நம் நாட்டின் பல்லாயிரக் கணக்கான மக்களைப் பசியினால் துடிதுடித்து மடியவிட்டுத் திருட்டுத் தனமாகக் களவாடிய பொருள்களின் கிரயத்தையே நம் நாட்டுக்குச் சேரவேண்டிய கடன் என்கிறார்கள். அவ்வாறு அக்கிரமமாக, துரோகமான முறையில் கொண்டு போகப்பட்ட இப்பொருள்களுக்குச் சரியான விலைதான் உண்டா? அதுவும் கிடையாது. அவர்கள்கண்மூடித்தனமாக நிர்ணயித்த விலைதான். இந்தவிலை நிர்ணயிக்கும் முறையிலும் நம் தேசத்திற்குப் பெரிய நஷ்டம் விளைத்திருக்கிறார்கள். இப்படி எல்லாம் யோக்யமற்ற முறைகளில் சேர்க்கப்பட்ட இக்கடனைக்கொண்டு நாம் பெருமையடித்துக் கொள்ளமுடியாது. கடன்காரன் இஷ்டம் போல் கொடுக்கலாம் என்றுள்ள ஒரு கடனைக்கொண்டு நாம் பணக்காரன் என்று சொல்லித் தலை நிமிரவும் முடியாது.

சென்ற 7 வருஷங்களில் இந்தியாவின் கணக்கில் 3,700 கோடி ரூபாய் வரவு எழுதப்பட்டுள்ளது. இது நாம் இங்கிலாந்துக்கு வெளியேற்றிய பல்வேறு

சாமான்கள், யுத்த தளவாடங்கள் முதலிய வற்றின் கிரயம் ஆகும். அதில் 400 கோடி ரூபாயை இதற்கு முந்தி நம் நாடு இங்கிலாந்திற்குக் கொடுக்கவேண்டி இருந்தது என்று கழித்துக் கொண்டார்கள். பாக்கி யுள்ளது 3,300 கோடி. இதில் 1,700 கோடி ரூபாய் இந்த யுத்தத்திற்கான செலவில் இந்தியாவின் பங்கு என்று எழுதிக் கழிக்கிறார்கள். நாம் கடைசி வரையில் இந்த யுத்தத்தில் சேரவில்லையே; அப்படி இருக்க இச் செலவுத் தொகை எவ்வாறு நியாய மாகும் என்பது விளக்கத்தக்கது. இதுபோக எஞ்சி யுள்ளது 1,600 கோடி ரூபாய். இது விஷயமாகப் பேச்சு நடத்தத்தான் தூது கோஷ்டி வந்துள்ளது.

## தனி நபர்களின் பணத்தைக் களவாடியது

டாலர் சேமிப்பு: 3,700 கோடி ரூபாய் பெறு மானமுள்ள நம் நாட்டின் பொருள்களை வெளிக் கடத்தி நம் கையில் குப்பைக்காகிதமான 'ஸ்டர்லிங் ஸெக்யூரிடி'களைக் கொடுத்து விட்டுப்போனதுடன் இவர்கள் திருப்தியடையவில்லை. சில தனி நபர் களின் சொத்துக்களிலும் கை வைத்திருக்கிறார்கள். நம் நாட்டில் சிலரிடம் டாலர் கடன் பத்திரங்கள் இருந்துவந்தன. இவை யாவற்றையும் கட்டாயப் படுத்திப் பிடுங்கிக் கொண்டார்கள். ஆகவே அந் தத் தனிநபர்கள் இப்பத்திரங்களைக் கொண்டு பேத்து மாத்து செய்ய முடியவில்லை. அவர்கள் கட்டி இருந்த தொகைகளை எல்லாம் இங்கிலாந்து தனது

நன்மைக்காக உபயோகப் படுத்திக் கொண்டது. இந்த முறையில் இந்தியாவினின்று அபகரிக்கப் பட்ட டாலர் கடன்பத்திரங்கள் எவ்வளவு பெறு மான முள்ளன என்பது இதுவரை வெளியிடப்பட வில்லை.

ஆறுவது அத்தியாயம்

## முடிவுரை

பதினெட்டாவது நூற்றூண்டு முதல் இருபதா வது நூற்றூண்டுவரை நம் நாட்டின் பொருளாதார சரித்திரத்தைப் பற்றி இதுவரை கவனித்து வந் தோம். 18-வது நூற்றூண்டில் ஆங்கிலேய வியாபா ரிகள் கிழக்கு இந்திய கம்பெனி என்ற ஸ்தாபனத் தின் மூலம் நம் நாட்டுடன் தொடர்பு கொண்டார் கள். அவர்களுக்குக் குருவாக விளங்கினர் லார்ட் கிளைவ். இந்தியாவின் திரவியங்களை அபகரித்து இங்கிலாந்து கொண்டு சேர்க்க இவரே வழி காட்டிக் கொடுத்தார். இப்பொழுது இங்கிலாந்தின் பொரு ளாதார நிபுணராக விளங்குபவர் லார்ட் கேயன்ஸ். இவரும் இதே அபகரிக்கும் முறையைத் தொடர்ந்து நடத்தி வந்திருக்கிறூர் என்பதை விவரமாக மேலே எடுத்துச் சொன்னேம். இவர்கள் பொதுப் பணத் தைக் கையாண்டுள்ள முறை வர்ணிக்க இயலாதது. கிளைவ் வெட்ட வெளிச்சமாகக் கொள்ளையிட்டான். ஆனல் இருபதாவது நூற்றூண்டில் நாகரிகமடைக்

துள்ள இந்த கேயன்ஸ் மறைமுகமாகவும், சாதாரண ஜனங்கள் அறிந்து கொள்ளக் கூடாத முறையிலும் கொள்ளையிட்டிருக்கிறான். இதுதான் வித்யாஸம். ஆங்கிலேயர் இந்தியாவில் கால் வைத்த நாள் முதல் இவ்விடத்திய சொத்துக்களை வஞ்சகமாகக் கொண்டு சேர்ப்பதே அவர்களின் தொழிலாக இருந்து வந்திருக்கிறது. இந்தியாவில் ஸ்தாபிக்கப் பட்ட இங்கிலாந்து சாம்ராஜ்யத்தின் அஸ்திவாரம் கபடம், வஞ்சகம், தந்திரம்; திருட்டு சொத்தைக் கொண்டே இந்த சாம்ராஜ்யம் வளர்ந்து, பெருகிக் கொழுத்தது; இன்றும் பொய்யையே ஜீவநாடியாகக் கொண்டு மானமற்று வாழ்ந்து வருகிறது.

1931-ல் கராச்சியில் கூடிய காங்கிரஸ் மகா சபை ஒரு கமிட்டியை ஏற்படுத்தி, ‘இதுவரை இங்கிலாந்து இந்தியாவினின்று அபகரித்துச் சென்றுள்ள தொகை எவ்வளவு? இந்தியாவின் கடன் என்று சொல்லப்பட்டு வந்த கணக்கு விவரம் என்ன? இவைகளில் எது எது நியாயமானவை; எது எது அபாண்டமானவை’ முதலியவைகளைப் பற்றி விசாரணை செய்ய ஏற்பாடு செய்தது. இதற்கிணங்க அதே வருஷத்தில் மேற்படி கமிட்டி ஒரு விவரமான விசாரணை அறிக்கையைத் தயாரித்துச் சமர்ப்பித்துள்ளது.* இது விஷயத்தைப் பற்றி விவரமாக அறிந்து கொள்ள ஆர்வமுள்ள நேயர்கள்

* The Financial obligation between Great Britain and India.

யாவரும் அந்த அறிக்கையைப் படித்துத் தெரிந்து கொள்ள வேண்டுமெனக் கோரப்படுகிறூர்கள். அவ் வறிக்கையின் சில பாகங்களை மட்டும் கீழே சுருக்க மாகக் கொடுப்போம் :—

"கிழக்கு இந்தியக் கம்பெனி என்ற வியாபார ஸ்தாபனம் நம் நாட்டினுள் வேரூன்றிச் சிறுகச் சிறுக அரசியல் விவகாரங்களையும் மேற் கொண்டு தற்பொழுது ஆங்கில சாம்ராஜ்யம் என்று செழித் துத் தழைத்து நம் நாட்டையும் அடிமைப் படுத்திக் கொண்டுள்ளது. இதன் சரித்திரத்தை ஆராயுமி டத்தே ஒவ்வோர் இதழிலும் நாம் காணுவது என்ன என்றூல் பேராசை கொண்டு சுயநலத்திற்காகவும், மற்ற நாட்டினரிடையே பெரிய சாம்ராஜ்யம் என விளங்க வேண்டுமெனவும் இந்தியப் பொருள்களைக் கணக்கு வழக்கில்லாமல் இங்கிலாந்து கொண்டு சேர்த்திருக்கிறூர்கள். இது இவ்வாறிருக்க, இந்தி யாவின் நிலைமை எவ்வாறு சீர்கேடடைந்தது என் பதையும் கவனிக்க வேண்டுமல்லவா? நம் நாட்டின் தொழில்கள் யாவும் மூடப்பட்டன. அவைகளை நடத்த முடியாதபடி பல இன்னல்களை விளைவித் தார்கள். ஏன்? இங்கிலாந்தில் தயாரான சாமான் கள் இங்கு வந்து இறங்கி தாராளமாக இந்நாடு முழு தும் விற்று வரவேண்டும் என்னும் பேரா சையே இதற்குக் காரணம். இந்தியாவின் பணம் இங்கிலாந்து சென்று அடையாமலும், இங்கி லாந்தில் தயாரான சாமான்களை தாராளமாக இந்

தியா வாங்கி உபயோகிக்காமலுமிருந்தால் இன்று இங்கிலாந்தின் சரித்திரம் நாம் படிக்கக் கூடிய நிலைமை யிலிருக்கப் போவதில்லை. இவை மட்டுமல்லாது எண்ணிறந்த பல ஆங்கிலேயர்களுக்கு வேலை கொடுத்துப் போஷிக்கக் கூடிய நாடாக இந்தியா இருந்து வந்திருக்கிறது. இந்த ஆங்கிலேயர்களுக்கு இது வரை கொடுக்கப் பட்டுள்ள சம்பளங்களை ஒன்று சேர்த்துப் பார்த்தாலே நம் தலை கிறுகிறுத்துப் போகும். இந்த நன்மைகள் எல்லாம் தவிர ஆங்கில சாம்ராஜ்யமாகிற கிரீடத்தில் இந்தியாவாகிய கோகினூர் வைரம் பதிக்கப்பட்டிருந்ததே அக் கிரீடத்தின் மதிப்பை எல்லையற்று அதிகப்படுத்தியது. இந்தியாவின் உதவி இல்லாமல் இங்கிலாந்து சாம்ராஜ்ய நாடு ஆகியிருக்கும் என்று கனவு கூடக் காண முடியாது. இங்கிலாந்து இன்று அனுபவித்து வரும் இந்த மகோன்னதமான நிலைமைக்கு இந்தியாதான் வேர் என்ற ஒரே காரணத்திற்காகவாவது அந்நாடு நமக்குப் பலவாறாகக் கடமைப் பட்டுள்ளது. நாம் அதிகமாக ஏதொன்றையும் விரும்பவில்லை. நம் நாட்டின் மீது பொதுக் கடன் என்று சுமத்திய தொகையையாவது இங்கிலாந்து சர்க்கார் ஏற்றுக் கொள்வதுதான் நேர்மையும் உசிதமுமாகும்" *

மேற்கொண்டு,

"இந்தியாவுக்கு சுயராஜ்யம் கிடைக்கப் போகிறது. இந்த நாட்டின் நிலைமையை நாமே சீர்படுத்

* மேலே சொல்லப்பட்ட அறிக்கை. பக்கம், 60-61

திக் கொள்ள வேண்டிய காலம் நெருங்கிவிட்டது அரசாட்சியை ஆரம்பிக்கும் போதே கடன் கணக்குகளைக் கொண்டா ஆரம்பிக்க வேண்டும்? இந்தியாவின் நிலைமை சீரடைய வேண்டுமாயின் அரசாங்கத்திற்கு யாதொரு விதமான பந்தங்களும் இருக்கக் கூடாது. அங்கே கடன், இங்கே கடன் என்று வைத்துக் கொண்டால் தேச முன்னேற்ற வேலையில் மனத்தைச் செலுத்த முடியாது. மேற்கொண்டு வரியை அதிகப்படுத்தலாம் என்பதும் முடியாத காரியம். இந்தக் கட்டுப்பாடுகளுக் கிடையே தேச முன்னேற்றத்திற்கான ஒரே வழி என்ன என்றால் நமது நாட்டின் வரிப்பணம் யாவும் தேச நலனிற்கான திட்டங்களில் செலவு செய்யப்பட வேண்டும். அரசாங்க ஆபீஸ் செலவுகளையும், மிலிடரி செலவுகளையும் எவ்வளவு முடியுமோ அவ்வளவு குறைத்து விட வேண்டும். வெளி நாட்டிற்குக் கொடுக்கப்பட வேண்டிய கடன் சுமை யாவும் நிவர்த்திக்கப்பட வேண்டும். இது போன்ற செலவுகள் குறைக்கப்பட்டால்தான் நாட்டில் கல்வி அதிகரிக்கக் கூடும். தேசத்தின் ஒவ்வொரு பாகமும் சுத்தப் பட்டு, சுருசுருப் பெய்தி, ஒளி பொருந்திய புதிய ஜீவன் பெற்று மிளிரும்.*

மேற்படி கமிட்டியார் தயாரித்துள்ள கணக்கு விவரம் :—கீழே கண்ட செலவு தொகைகள் தவறுதலாக இந்தியாவின் தலையில் சுமத்தப் பட்டுள்ளன.

---

* மேலே சொல்லப்பட்ட அறிக்கை.

| வருஷம் | கணக்கு விவரம் | கோ. | ல. | தொகை கோ. | தொகை ல. |
|---|---|---|---|---|---|
| 1857-க்கு முன் | கம்பெனியின் வெளிநாட்டு யுத்தங்கள் | 35 | 00 | | |
| | கம்பெனியிலிருந்து முதலுக்கு வட்டி | 15 | 12 | 50 | 12 |
| 1857-ல் | சிப்பாய்க் கலகச் செலவு | | | 40 | 00 |
| 1874 | கம்பெனியின் முதலுக்கு வட்டி | 10 | 08 | | |
| | கம்பெனியின் தளவாடச் சாமான்களை வாங்கியதற்காக கம்பெனியே கொடுத்துக் கொண்ட கிரயம் | 12 | 00 | 22 | 08 |
| 1857-1900 | வெளிநாட்டு யுத்தச் செலவு | 37 | 50 | | |
| | யுத்தத்திற்காக இந்தியா கொடுத்த நன்கொடை | 189 | 00 | | |
| 1914-1920 | மகா யுத்தச் செலவு | 170 | 70 | 397 | 20 |
| 1857-1931 | பலவிதமான சில்லரைச் செலவுகள் | 20 | 00 | | |
| | பர்மா யுத்த சம்பந்தமாக | 82 | 00 | 102 | 00 |
| 1916-1921 | நாணயமாற்று ஏற்பாட்டின் மூலம் ஏற்பட்ட நஷ்டம் | | | 35 | 00 |
| | ரயில்வேக் கம்பெனிகளை அரசாங்கம் மேற்கொண்டபோது கொடுக்கப்பட்ட தொகை | | | 50 | 00 |
| 1916-1921 | மிலிடிரிக்கு உபயோகமான சில பிரத்யேக ரயில்பாதைகளுக்காக | | | 33 | 00 |
| | ஆக மொத்தம் | | | 729 | 40 |

729 கோடியே 40 லக்ஷம்.

இந்தியாவில் செய்யப்பட்டு வரும் ராணுவச் செலவுகளில் ஒருபாகம் ஆங்கிலேய சர்க்காரால் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்பது காங்கிரஸ் மகா சபையால் ஏற்படுத்தப்பட்ட விசாரணைக் கமிட்டியின் முடிவு ஆகும். மேலே கொடுக்கப்பட்ட பட்டியில் இது சம்பந்தமான செலவு தொகை ஏதும் சேர்க்கப்படவில்லை. மேற்படி கமிட்டியின் ஒரு அங்கத்தினர் இச் செலவுகளைக் கணக்கிட்டுச் சுமார் 540 கோடியே 13 லக்ஷம் ரூபாய் இங்கிலாந்தின் கணக்கில் செலவு எழுதப்பட வேண்டும் என்கிறார். இத்தொகையானது இந்தியாவின் மொத்த ராணுவச் செலவில் கால் பாகமாகும். இப் புள்ளி விவரம் சரியானது. கால் பங்கு ராணுவச் செலவை இங்கிலாந்து ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பது நியாயமான கோரிக்கை என்றே படுகிறது. இது சம்பந்தமாக ராம்ஸே மாக்டோனல்டின் அபிப்பிராயமாவது: இந்திய ராணுவத்தில் குறைந்தது அரை பாகம் ஆங்கில சாம்ராஜ்யத்திற்காக உள்ளது. ஆகவே அப்படிப்பட்ட ராணுவத்தின் செலவுகள் முழுவதும் இங்கிலாந்தின் பொறுப்பு ஆகவேண்டும் என்கிறார்.

மேற்படி கமிட்டியார் நம் நாட்டிற்கு அல்லாத சில கடன் தொகைகளின் மீது கொடுக்கப்பட்டுள்ள வட்டித் தொகையும் திருப்பி வசூலிக்கப்பட வேண்டும் என்கிறார்கள். இந்தியா இதுவரை கொடுத்துள்ள வட்டித்தொகை 1,050 கோடி ரூபாய் இருக்கும்.

இதில் ஏறக்குறைய பாதிபாகம் நமக்குத் திருப்பிக் கிடைக்க வேண்டும். 536 கோடியே 2 லக்ஷம் ரூபாய் இக்கணக்கில் வரவு ஆகவேண்டும்.

இவை யாவற்றையும் கூட்டிப் பார்க்குமிடத்தே:

| | கோடி | | லக்ஷம் |
|---|---|---|---|
| முன்பக்கப்படி | 729 | – | 40 |
| ராணுவச் செலவின் ¼ பாகமாவது | 540 | – | 13 |
| தவறுதலாகக் கொடுக்கப்பட்ட வட்டி | 536 | – | 02 |
| ஆ | 1805 | – | 55 |

ஆயிரத்து எண்ணூற்று ஐந்தரைக் கோடி எனலாம்.

இவ்வளவு தொகையும் இங்கிலாந்து அரசாங்கத்தாரால் செய்யப்பட்டிருக்க வேண்டிய செலவுகள், விதி வசத்தால் இந்தியா தன் எளிய கஜானாவினின்று எடுத்துக் கொடுக்கும்படி நேர்ந்து விட்டது. இச் செலவு தொகைகளின் பெரும்பாகம் சாம்ராஜ்ய மோகத்தால் ஏற்பட்ட போர்களின் செலவு ஆகும். (இன்னும் விவரமாக இங்கு எடுத்துக் கூறுவதற்குப் பதிலாக வாசகர்கள் காங்கிரஸ் விசாரணைக் கமிட்டியின் அறிக்கையைக் கவனித்துப் படித்துக் கொள்ளவேண்டும்.) இவை போன்ற அநியாயமான செலவுகளை நம் கணக்கில் எழுதியதுடன் இவர்கள் நம்மை விட்டுவிடவில்லை. இவை யாவும்

சேர்ந்து இந்தியாவின் பொதுக் கடன் என்று பெயர் பெற்றன. கடன் என்றால் வட்டி வேண்டாமா? ஆகவே வருஷம் ஒன்றுக்கு 50 கோடிரூபாய் வீதம் வட்டி நம்மிடமிருந்து வசூலித்திருக்கிறார்கள். "தனக்கு வேண்டிய நாற்காலிகளை இங்கிலாந்திடமிருந்து எதிர் பார்த்து இந்தியா தன்னுடைய மேஜைகளை அங்கு அனுப்பி வருகிறது என்று எண்ண வேண்டாம். தன் கடனைத் தீர்த்துக் கொள்ளத்தான் மேஜைகளை அனுப்பி வருகிறது" என்கிறார் மாக்டோனல்ட். இன்னும் ஜான் ஸ்டுவர்ட் மில் என்பரின் அபிப்பிராயத்தையும் கேளுங்கள். "வருஷா வருஷம் வெளிநாட்டுக்குப் பணம் கொடுத்து வரும் ஒருநாடு இரண்டு விதங்களில் நஷ்டமடைகின்றது. முதலாவது நஷ்டம் கொடுத்த தொகை திரும்பி வராமல் போய்விடுகிறது. அதைக் கொண்டு அந்நாட்டுக்கு யாதொரு பயனும் ஏற்படப் போவதில்லை. மற்றொரு நஷ்டமாவது: கடன் கொடுத்துள்ள நாட்டாரின் சட்டதிட்டங்கள் கடன் வாங்கியுள்ள நாட்டாருக்கு அனுகூலமாக இருக்காது. கடன்பட்ட நாட்டாரின் பொருள்களைக் குறைந்த விலைக்கு வாங்குவதும் தம் நாட்டுச் சாமான்களை அதிக விலையில் விற்பதுமே இவர்களின் குறியாக இருக்கும்." கடன் கொடுத்துள்ள நாட்டார் மற்ற நாட்டின் பொருளாதார விவரங்களைக் கைக்குள்ளாக்கிக் கொண்டார்களாயின் பின்பு கடன்பட்ட நாட்டிற்கு ஏற்படும் கஷ்டநஷ்டங்களைச் சொல்லிலடக்க முடியாது.

நாணய மாற்றல், சரக்குகளை இறக்குமதி செய்தல் முதலிய விவகாரங்களில் பல விதமான சூழ்ச்சிகளைச் செய்து, அந்நாட்டைக் கொள்ளையிட்டே வருவார்கள். இந்தியாவின் பொருளாதார விவகாரத்தில் நடந்துள்ள சூதுவாதுகள் யாவும் இந்த ரகத்தை ஒத்தனவே. தான் வெளியிலனுப்பும் பொருள்களுக்குச் சரியான விலையைக் கேட்கக் கூட இந்தியாவுக்குத் தைரியம் வருவதில்லை. இது போன்ற பல்வேறு கட்டுப்பாடுகளை இந்தியாவின் கழுத்தில் மாட்டிவிட்டு, இந்தியாவை இன்னும் பல நூற்றாண்டுகள் வரை அடிமையாக வைத்துக் கொள்ளவேண்டும் என்பது இங்கிலாந்தின் ஆசை. ஒரு சுதந்திரநாடு தான் உலக நாடுகளுடன் நேரடியாகத் தானே சம்பந்தம் வைத்துக் கொள்ளக்கூடும். மற்ற நாடுகளுடன் சமஉரிமை தனக்கும் வேண்டும் என்று இந்தியா நினைக்குமாகில் இதுபோன்ற செயற்கை பந்தங்களை உதறி எறிந்து தன் நாட்டினின்று ஆங்கிலேயர்கள் எடுத்துச் செல்கின்ற சாமான்களுக்குச் சரியான கிரயத்தை வசூலிக்க இந்தியராகிய நமக்குத் தைரியம் பிறக்கவேண்டும்.

இந்தியாவின் கணக்கில் எழுதப்பட்டுள்ள அநாவசியமான ராணுவச் செலவுகளைப் பற்றி மிஸ்டர் ராம்ஸே மாக்டோனல்ட் கொண்டுள்ள அபிப்பிராயம்:—" இச் செலவு தொகை விஷயமாக இந்தியா கண்ணியமாக நடத்தப்படவில்லை என்று உறுதியாகக் கூறலாம். ஆங்கில சாம்

ராஜ்யத்திற்காகச் செய்யப்பட்ட யுத்தங்களின் செலவுகள் யாவும் இந்தியாவினின்று கொடுக்கப் பட்டுள்ளன."* "சாம்ராஜ்யத்தின் மற்ற பாகங் களில் நிறுத்தப்பட்டிருக்கும் பட்டாளத்திற்கான செலவுகளை அந்தந்த நாடுகள் ஏற்றுக் கொள்வ தில்லை. இங்கிலாந்துதான் செலவு செய்கிறது. ஆனால், இந்தியாவிலோ நாம் இச்செலவை இந்தி யாவின் தலையிலேயே சுமத்தி விடுகிறோம். இதற் குக் காரணம் இந்திய சர்க்கார் நம் கைக்குள் அகப் பட்டுக் கொண்டவர்கள். நாம் எவ்வாறு நினைத்தா லும் அவ்வாறு அவர்களை ஆட்டிவைக்க முடிகிறது. கிழக்கு இந்திய கம்பெனியின் காலத்தில் இங்கிலாந் தினின்று துருப்புக்கள் இந்தியாவுக்குக் கொண்டு வரப்பட்டன. இது கம்பெனியின் பாதுகாப்பிற் காக. இருந்தாலும் இதன் செலவுகள் யாவும் இந்தி யாவினின்று வசூலிக்கப்பட்டு வந்தது. பின்பு கிழக்கிந்திய கம்பெனிக்குப் பதிலாக ஆங்கிலேய அரசாங்கம் தொடங்கப்பட்டது. ராணுவத்தை இங்கிலாந்தினின்று இந்தியாவுக்குக் கொண்டுவர ஏற்பட்ட செலவுகள் யாவற்றையும் இந்தியப் பொதுப்பணத்தினின்று கொடுத்து விட்டார்கள். நியாயமான முறையில் இங்கிலாந்து ஏற்க வேண்டிய செலவுகள் யாவும் இந்தியாவின் மேல் சுமத்தப் பட் டன. ஆகவே எவ்வெப்பொழுது இங்கிலாந்து தன் னுடைய ராணுவச் செலவைச் சுருக்க நினைக்கின்

* Govt. of India, by Ramsay MacDonald, Page 154.

றதோ அப்பொழுதெல்லாம் இந்தியாவுக்கு ராணுவம் 'கடன்' கொடுப்பது என்ற சம்பிரதாயத்தைக் கைக்கொண்டது. 1900 வருஷத்திய பொருளாதார கமிஷன் (Financial Commission) இந்த அநியாயம் பற்றிக் குற்றங் கூறியுள்ளது. இதன் பின்னர் ராணுவப் போக்கு வரத்துச் செலவின் பாதி பாகமாகிற 1,30,000 பவுன்களையும் அத்துடன் ஏடனில் ஏற்படுகின்ற ராணுவச் செலவில் பாதியாகிற 1,00,000 பவுன்களையும் வருஷா வருஷம் செலவு செய்ய ஒத்துக் கொண்டிருக்கிறது. இதுதான் தற்பொழுது இங்கிலாந்து செய்துவரும் ராணுவச் செலவு. பாக்கி செலவு முழுவதும் இந்தியா செய்து வருகிறது. ராணுவச் செலவு விஷயத்தில் இந்தியா ஒரு தனி ராஜ்யமாகவே கருதப்படுகிறது. ஆனால் அந்நாட்டின் அரசாங்க அதிகாரமோ நம் கைக்குள்ளிருக்கிறது. அந்நாட்டின் யுத்த விவகாரங்கள் யாவும் நம்மால் கண்காணிக்கப் படுகின்றன. இந்தியப் பாதுகாப்பு என்பது அந்நாட்டை ஆளும் நம்முடைய கடமையாகிறது. அப்படி இருக்க இந்தியாவுக்கு அனுப்பப்படும் துருப்புகளின் செலவுகள் முழுவதும் இங்கிலாந்து சாம்ராஜ்யத்தின் செலவாக வேண்டும். இந்தியாவினின்று இச் செலவு தொகைகள் ஏன் வசூலிக்கப்பட வேண்டும்? இந்தியா சம்பந்தமான இந்த நடவடிக்கை சற்றும் திருப்திகரமானதாகத் தோன்றவில்லை.'' வெளி நாட்டு யுத்தங்களைப்பற்றி அவர் சொல்லுவதையும் கவனியுங்

கள். *“1900 வருஷத்தில் ‘பைனான்ஷியல் கமிஷன்’ என்னும் விசாரணைக் கமிட்டியார் செய்துள்ள கண்டனங்கள் சிறிது பலன் அளித்துள்ளது என்றே எண்ண வேண்டும். இல்லையேல் ஆங்கிலேயர்கள் இந்தியாவில் செய்துவரும் அநியாயங்கள் கட்டு மீறிப் போய்க்கொண்டிருக்கும். எல்லைப்புற யுத்தச் செலவுகள், பர்மாவை சாம்ராஜ்யத்துடன் சேர்த்துக் கொள்வதற்கான யுத்தச் செலவுகள், இன்னும் அபிஸீனியப் படையெடுப்புச் செலவு போன்ற அனாவசியச் செலவுகள் யாவும் இந்தியப் பொதுப்பணத்தினின்று எடுத்துக் கொள்ளப்பட்டது. ஆப்கானிய யுத்தத்தின் மொத்தச் செலவு 210 லக்ஷம் பவுன்கள். ஆனால் இதில் 50 லக்ஷம் பவுன்கள்தான் இங்கிலாந்து அரசாங்கத்தால் செலவு செய்யப்பட்டுள்ளது. இது போன்ற யுத்தங்களுக்கும் இந்தியாவுக்கும் கொஞ்சமும் சம்பந்தம் கிடையாது. ஆகவே இச்செலவுகளில் காலணாவும் இந்தியாவினின்று எடுத்துக் கொள்வது என்பது முழு மோசடியாகும்.”

இங்கிலாந்தின் இது போன்ற அக்கிரமமான நடவடிக்கைகளை ஸ்ரீ கோகலேயும் கண்டித்திருக்கிறார்.—“சீனா, பர்ஸியா, அபிஸீனியா போன்ற தேசங்களில் படையெடுத்துச் செல்ல இந்தியத் துருப்புகள் பலமுறையும் அனுப்பப்பட்டுள்ளன. இப் படை யெடுப்புகள் மூலம் இந்திய ஜனங்களுக்கோ

*Govt. of India by Ramsay MacDonald, Page 155.

அல்லது இந்திய அரசாங்கத்துக்கோ யாதொரு பலனும் கிடையாது. இவை யாவும் முற்றிலும் இங்கிலாந்தின் சாம்ராஜ்யப் பேராசை காரணமாக ஏற்பட்டன. ஒவ்வொரு தடவையும் பட்டாளங்கள் வெளியே அனுப்பப்படுகையில் அதற்கான சாதாரணச் செலவுகள் முழுவதும் இந்தியாவினின்றே வசூலித்து வந்திருக்கின்றார்கள். இப்பட்டாளங்களிற்காக ஏற்பட்ட சிற்சில அசாதாரணமான செலவுகளை மட்டுமே இங்கிலாந்து ஒத்துக்கொண்டிருக்கிறது. இது இவ்வாறிருக்க இந்தியாவும் இங்கிலாந்தினின்று பட்டாளங்களைத் தருவிக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டதும் உண்டு. ஸிந்துப் படையெடுப்பு (1846-ம் வருஷத்தில்,) பஞ்சாப் சண்டை (1849-ல்,) சிப்பாய்க் கலகம் (1857-ல்) முதலிய சந்தர்ப்பங்களில் இங்கிலாந்து பட்டாளம் இங்கு வந்துள்ளது. இவ்வமயங்களில் அதற்காக ஏற்பட்ட சாதாரணச் செலவு, அசாதாரணச் செலவு, முதலிய யாவற்றையும் இந்தியாவினின்றே வசூலித்தார்கள். இத்துடன் மட்டுமின்றி அச்சிப்பாய்களைப் படையில் சேர்க்கும் பொழுது முதல் அது வரை ஏற்பட்டிருந்த செலவுகளையும் சேர்த்து வசூலித்துக் கொண்டார்கள்." விசாரணைக் கமிட்டியார் இவ்வநியாயத்தைச் சரியானபடி கண்டனம் செய்து எழுதியுள்ளார்கள். நம் நாடு சுதந்திரமாக இருந்திருக்குமாயின் இச் செலவுகள் யாவற்றையும் நாம் கொடுக்காது இருந்திருக்கக் கூடும். மேற்கொண்டு இது

போன்ற அக்கிரமங்கள் என்றும் தலைகாட்டாமலும் செய்திருக்கலாம். இங்கிலாந்து சாம்ராஜ்யத்தின் நியாயமான செலவுகளை அவர்களே செய்துகொள்ள வேண்டும் என்றும் கற்பித்திருக்கக் கூடும்.

ஏறக்குறைய 1,800 கோடி ரூபாய்களை இங்கிலாந்து தவறுதலாக இந்தியக் கணக்கில் எழுதியுள்ளது. இதன் விவரங்களை மேலே கவனித்தோம். இது நம் நாட்டின் பொதுக்கடன் என்று பெயரிடப் பட்டு நம்மிடமிருந்து சிறுகச் சிறுக வசூலிக்கப் பட்டும் உள்ளது. இக் 'கடனில்' ஒருபாகம் கொடுபட்டு விட்டது. ஆகவே கொடுபட்ட கணக்கைப் பற்றி நாம் மறந்துவிட வேண்டும், அதைத் திருப்பிக் கேட்கக் கூடாது என்று ஒரு சாரார் வாதிக்கத் தொடங்கி யுள்ளார்கள். இது ஒரு விநோதமான குயுக்தி வாதம். சற்று யோசனை செய்தால் இதன் நியாயம் விளங்கும். ஒரு கடையில் நாம் சாமான் வாங்கிவருகிறோம். நாம் வாங்காத சாமான்களுக்கும் பட்டியல் போட்டு நம் கணக்கில் 1,800 ரூபாய் மோசடியாக எழுதப்பட்டு விடுகிறது. நம்மிடமிருந்து ஒவ்வொரு தரமும் பணம் வசூல் செய்து வரவு வைத்துக் கொள்ளுகிறான். இக்கடன் விஷயமாக நாம் ஏதும் தெரிந்து கொள்ளவில்லை. வியாபாரியை நம்பி, சற்றுப் பெருமிதமாக இருந்து விடுகிறோம். பின்பு ஒருசமயம் நமது கணக்கு விவரங்களைச் சோதனை செய்கையில் சூது வெளியாகிறது. 1,800 ரூபாய் பொய்க்கடனில் 800 ரூபாய் கொடு

பட்டதாகவும் தெரிகிறது. இப்பொய்க் கணக்கு சரிசெய்யப்பட வேண்டும் என்கிறோம். "800 ரூ. கொடுபட்டு விட்டது. ,ஆகவே மீதியுள்ள கடன் தொகை 1,000 தான். அதை வேண்டுமானால் நாம் தீர்த்துக் கொள்வோம். கொடுபட்ட தொகையைப் பற்றித் தாங்கள் கவலை கொள்ளக் கூடாது" என்று வியாபாரி சொன்னால் நாம் ஒத்துக் கொள்வோமா? இந்தியக் கடன் என்ற மோசடிக் கணக்கில் இது வரை ஏதும் கொடுக்கப் பட்டிருந்தால் அது யாருடைய பணம்? ஏழைப் பொது ஜனங்களுடையது. அவர்களுக்கு அதைத் திருப்பிக் கொடுத்துவிட வேண்டும்.

1931-ல் வட்டமேஜை மகாநாட்டின் போது காந்தியடிகள் இப் பொதுக்கடன் சம்பந்தமாகவும் பேசியிருக்கிறார். "இனிமேல் ஏற்படப் போகும் சுதந்திர இந்திய அரசாங்கமானது, இங்கிலாந்தின் இக்கணக்கு வழக்குகளைச் சரியானமுறையில் தணிக்கை செய்து, பக்ஷபாதமற்ற ஒரு விசாரணைக் கமிட்டியாரால் பரிசோதனை செய்வித்த பிறகே இக்கணக்குகளை ஒப்புக்கொள்ளும் என்று காங்கிரஸ் மகாசபை அழுத்தமான அபிப்பிராயம் கொண்டுள்ளது."

இந்த 1,800 கோடியுடன் சென்ற 7 வருஷங்களில் நம் நாட்டினின்று வெளியேற்றப்பட்ட தொகையையும்—3,700 கோடியையும்—சேர்த்தால் மொத்தம் 5,500 கோடி ரூபாய். இவ்வளவு பெரிய தொகையை நாம் திருப்பிப் பெற வேண்டும்.

## இங்கிலாந்து இதைத் திருப்பிக் கொடுக்க முடியுமா?

ஏழை இந்தியா 7 வருஷங்களில் இவ்வளவு அபாரமான ஒரு தொகையை இங்கிலாந்துக்குக் கடனாகக் கொடுக்கக் கூடுமாயின், மிகமிகப் பெரிய பணக்கார தேசமாகிய இங்கிலாந்துக்கு இத்தொகையைத் திருப்பிக் கொடுப்பதில் என்ன கஷ்டமிருக்கக் கூடும்? பணவிஷயத்தில் இந்தியா இங்கிலாந்துக்கு ஈடு சோடு ஆகுமா? இங்கிலாந்தின் வருஷ வருமானம் 900 கோடி பவுன்கள். நம் நாட்டுக்குக் கொடுக்க வேண்டிய கடனோ இவ்வருமானத்தின் ஒருசிறு பாகமே யாகும். ஒரு விஷயத்தை மனத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். இந்த 3,700 கோடி ரூபாய் கடன் எவ்வாறு சேர்க்கப்பட்டது? இங்கிலாந்தின் உண்மையுள்ள ஏஜெண்டுகளான ஆங்கிலேய ஆபீஸர்களினால் தான் சேர்க்கப்பட்டது. அதுவும் அவர்களால் நிர்ணயிக்கப்பட்ட விலையில் சாமான்களை வாங்கினார்கள். அவர்களால் 'கன்ட்ரோல்' செய்யப்பட்ட விலைவாசிகள் அந்த சமயம் மார்க்கெட் விலைகளைவிட பலமடங்கு குறைவாக இருந்தன. இன்னும் பல சந்தர்ப்பங்களில் வைஸ்ராயின் விசேஷ அதிகாரம் காரணமாக பல சரக்குகளை ஆக்கிரமித்துக் கொண்டார்கள். இந்தியாவின் தளவாட சாமான்களைக் கண்மூடித் தனமாக உபயோகித்து மிருக்கிறார்கள். இதனால் தளவாட சாமான்களுக்கு ஏற்பட்டிருக்கும் நஷ்டத்தை

ஈடு செய்யக் கூடிய அளவு ஒரு தொகையை இக் கடன் கணக்கில் சேர்த்துக் கொள்ளவு மில்லை. உதாரணமாக ரயில்வேக்களை ராணுவத்திற்காக எவ்வாறு உபயோகித்தார்கள்? இதனால் சேதம் ஏற்பட்டிருக்கிறதா? அவைகளைப் புதுப்பிக்கவோ, ரிப்பேர் செய்யவோ ஒரு தொகை இந்தியாவுக்குக் கொடுக்கப்பட வேண்டியது நியாயமல்லவா? விசேஷ அதிகாரம் கையிலிருந்தது என்ற இறுமாப் புக்கொண்டு எல்லாவிதமான சரக்குகளையும் வாங்கி ராணுவ உபயோகத்திற்காகச் சேர்த்துக் கொண் டார்கள். குடிபடைகளுக்குப் போதுமான சாமான் களை நாட்டில் விட்டுவைத்தார்களா? 1943 வருஷத் தில் நடந்த கோரமான வங்காளப்பட்டினிச் சாவே இதற்குச் சாட்சி. எவ்வளவு லக்ஷம் ஊமை ஜனங் கள் உயிர் துறந்தனர்? ஏழே வருஷங்களுக்குள், சர்க்கார் இஷ்டப்பட்ட விலைவாசியில் சாமான்களை விற்கும்படி நிர்ப்பந்திக்கப் பட்டு நமது தரித்திர இந்தியா 3,700 கோடி ரூபாய் இங்கிலாந்திற்குக் கடன் கொடுத்திருக்கிறது. 900 கோடி பவுன்கள் வருஷ வருமானமுள்ள குபேர ராஜ்யமான இங்கி லாந்து இக்கடனைத் திருப்பிக் கொடுக்க ஏன் நீண்ட காலத் தவணை கேட்க வேண்டும்? இங்கிலாந்தின் இக்கோரிக்கையை ப்ரொபஸர் ஜி. டி. எச். கோல் ஏளனம் செய்கிறார்.

"இங்கிலாந்து பணம் படைத்த நாடு; முன் னேற்ற மடைந்தது. இந்தியாவோ தரித்திரத்தில்

மூழ்கிக் கிடப்பது. இந்தியாவினின்று பெற்றுக் கொண்ட கடன்களைத் திருப்பிக் கொடுக்க இங்கிலாந்து ஏன் இவ்வாறு மீனமேஷம் பார்க்க வேண்டும்? கடன் தொகையைக் குறைத்துக் கொள் என்றும், பல தவணைகளில் வாங்கிக் கொள் என்றும் ஏன் இவ்வாறு சாக்குப் போக்குச் சொல்ல வேண்டும்? இதற்குக் காரணமே கண்டுகொள்ள முடியாது. இது ஒரு விநோத உலகம் அல்லவா?"

## விசாரணை செய்யப்பட வேண்டும்

மேலே சொல்லப்பட்ட அத்தியாயங்களில் இங்கிலாந்து இந்தியாவின் பொருளாதார விஷயத்தில் செய்துள்ள அட்டூழியங்களைப்பற்றிக் கவனித்தோம். நம் நாட்டுடன் கணக்குத் தீர்த்துக்கொள்ள வேண்டியதாக அவர்கள் தீர்மானித்துள்ள தொகை 1,600 கோடி ரூபாய் மட்டுமே. ஆனால் நம் கணக்குப்படி வரவேண்டிய தொகையோ 5,500 கோடிக்கும் மேற்பட்டது. இது விஷயம் யாராலும் விசாரித்து நிச்சயிக்கப்படவில்லை. 1,600 கோடி ரூபாய் கணக்குப் பார்த்து பாக்கி கட்டப்பட்ட தொகையும் அல்ல. நடைமுறையில் இருந்துவரும் கணக்கில் வரவினின்று செலவைக் கழித்துக் காட்டுகிறார்கள். அவர்களுடைய வரவு செலவுக் கணக்கே சரியா, தவறா என்பது யாருக்கும் தெரியாது. அதை வெளியிலெடுத்து யாருக்கும் காட்டவே கூசுகிறார்

கள். இப்படி சூட்சுமமாக வைக்கப்பட்டுள்ள கணக்கினின்று அவர்கள் சொல்லுவதையே நம்பி விடுவது புத்திசாலித்தனமாகாது. 1,600 கோடி என்று சொல்லுவதை நாமும் ஒத்துக்கொள்ள முடியாது. இரண்டு நாட்டிற்கும் பொதுவான பக்ஷபாதமற்ற ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டு அக்கமிட்டியார் இக்கணக்கு யாவற்றையும் முறைப்படி பரீக்ஷை செய்து முடிவு கட்டின பிறகே இங்கிலாந்துடன் நாம் கணக்கைத் தீர்த்துக் கொள்ளக் கூடும். கிளைவின் காலம் முதற்கொண்டு இக் கணக்கு நடைமுறைக் கணக்காகக் கருதப்பட்டு, அது முதற்கொண்டு செய்யப்பட்டுள்ள வரவு செலவு யாவும் பரிசோதனை செய்யப்படுதல் அவசியம். தேசீய சர்க்கார் அமைக்கப்படப்போகிறது. இந்தியா சுதந்திரமடையப் போகிறது. நம் கணக்கு வழக்குகள் யாவும் ஒழுங்கு செய்யப்பட வேண்டும். அதற்குப் பூர்வ பீடிகையாக இங்கிலாந்து நமக்குக் கொடுக்கவேண்டிய தொகை சரியானபடி நிச்சயிக்கப்படவேண்டும். பக்ஷபாதமற்ற விசாரணை சபையார் அமைக்கப்பட வேண்டியது அத்தியாவசியமான தேவையாகும். மேற்கொண்டு இங்கிலாந்தின் ஆபீஸர்கள் முதலானோர்களின் உதவி நமக்குத் தேவையாக இருக்குமாயின் அதற்குள்ள ஏற்பாடுகளையும் சட்டதிட்டங்களையும் இக்கமிட்டியார் முன்கூட்டியே தீர்மானித்து விட வேண்டும். இது போன்ற கமிட்டி ஏற்படுத்தப் படவேண்டும் என்று 1931-லேயே எடுத்துச் சொல்

லப்பட்டிருக்கிறது. காங்கிரஸ் மகாசபையின் விசாரணைக் கமிட்டி அறிக்கையைக் கவனிக்க.

இதுபோன்ற கமிட்டியாரால் தீர்மானிக்கப்படும் தொகையை நாம் பல விதங்களிலும் பெற்றுக் கொள்ளக் கூடும். சென்ற 20 வருஷங்களாக இந்தியாவினின்று எடுத்துச் செல்லப்பட்டுள்ள தங்கம் முழுதையுமோ அல்லது ஒரு பாகத்தையோ இங்கிலாந்து திருப்பிக் கொடுத்து இக்கடனைத் தீர்த்துக் கொள்ளலாம். இன்னும் இந்தியாவிலுள்ள ஆங்கிலேய தளவாட சாமான்கள் யாவற்றையும் இந்தியாவிற்கே விற்றுவிடலாம். நம் நாட்டில் சுமார் 450 கோடி ரூபாய் செலவில் பல்வேறு நீர்ப்பாசனத்திற்கான பெரிய பெரிய திட்டங்களை அமைக்கவேண்டி இருக்கின்றன. இவைகளுக்காகப் பெரிய அளவில் இயந்திரங்கள், மற்ற உபசாதனங்கள் நமக்குத் தேவையாக இருக்கும். அவை யாவற்றையும் கொடுத்து இக்கடன் சுமையைத் தீர்த்துக் கொள்ளவும் கூடும். அப்படி வாங்கப்படும் கடன் தொகை முழுவதும் இந்தியாவின் எண்ணற்ற கிராம மக்களின் பொது நலத்திற்கான முறையில் உபயோகமுள்ளதாக இருத்தல் அவசியம். இது விஷயத்தை நாம் யாவரும் நன்கு மனத்தில் பதித்துக்கொள்ள வேண்டும்.

நமக்குத் தேவையாக இருக்கிற பல தளவாட சாமான்களைக் கொடுத்து விட்டால் இங்கிலாந்தின் உற்பத்தி குன்றிவிடும் என்றும் இங்கிலாந்தின்

வெளிநாட்டு வியாபாரம் படுத்துவிடும் என்றும் சிலர் அஞ்சுகிறார்கள். உபயோகத்தில் இருந்து வருகிற தளவாட சாமான்களைக் கொடுத்து விட்டால்தான் இது போன்ற கஷ்டங்கள் ஏற்படக்கூடும். இவற்றைத்தவிர நமக்குக்கொடுக்கக்கூடிய தளவாட சாமான்கள் இங்கிலாந்தினிடம் இல்லையா? இந்தியா வில் கொள்ளையிட்டு அமெரிக்கா பாங்கில் குவித் திருக்கும் தங்கத்தை எல்லாம் திருப்பிக் கொடுத்தால் என்ன? அது அனாவசியமாகத்தானே சேமிக்கப் பட்டுக் கிடக்கிறது? அது தவிர ரயில்வேக் கம் பெனிகளின் விசேஷ 'பங்குகள்' (Share) எவ்வளவு இங்கிலாந்திலிருக்கிறது? இவை யாவற்றையும் இந் திய சர்க்கார் கணக்கிற்கு மாற்றினால் என்ன? இங் கிலாந்திற்கு எவ்வளவு வியாபாரக் கப்பல்களிருக் கின்றன? இவை இந்தியாவுக்கு உபயோகமானது தானே. இந்தியக் கப்பல் தொழில் முன்னேற என்ன பாடுபடுகிறது? அதற்கு உதவியாக இருக் குமே. தன் மேலுள்ள கடனைக் கொடுத்துக் கழிக்க வேண்டும் என்று இங்கிலாந்து மனத்தில் தீர்மானித் துக்கொண்டால் கொடுக்கப் பல்வேறு வழிகளிருக் கின்றன. தனக்குத் தேவை இருந்தபோது பிறரி டமிருந்து தாராளமாகக் கடன் வாங்கிவிட்டுப் பின்பு திருப்பிக் கொடுக்கிற சமயத்தில் சால்சாப்பு சொல் லுவதும் உறுமுவதும் நல்லவர்களின் அடையாள மாகாது.

இக்கடன் தொகைகள் திரும்பக் கிடைத்ததும்

இங்கிலாந்தின் "ஸ்டர்லிங் ஸெக்யூரிடி" என்ற கடன் பத்திரங்கள் யாவும் திருப்பிக் கொடுக்கப்படும். நமக்குக் கிடைத்த மெஷின்களையோ அல்லது பணத்தையோ இந்திய தேசீய சர்க்காரே பலனளிக்கும் முதலாக வைத்துக்கொள்ளலாம். அல்லது தக்க இந்தியர்களுக்குக் கொடுத்து உதவலாம். எவ்வாறாயினும் அத்தொகைகளைக் கொண்டு பட்டினங்களில் ஆலைகளை நிறுவி வேலை இல்லாத் திண்டாட்டத்தை அதிகரிக்கவிடக்கூடாது. நம் நாட்டு ஜனத்தொகையின் பெரும்பாலர்களாகிய குடியானவர்வர்களுக்குப் பயனளிக்கக்கூடிய முறையில் இத்தொகை யாவும் செலவு செய்யப்படுதல் அவசியம். உதாரணமாக நீர்ப்பாசனத்திற்கான திட்டங்கள்; ஒவ்வோர் கிராமத்திலும் ஏராளமான அளவு குடி தண்ணீர் கிடைக்கக்கூடிய வசதிகள்; வாய்க்கால்கள் வெட்டுவது; போக்குவரத்து வசதிகளை அதிகரிக்கக் கால்வாய்கள் அமைப்பது போன்ற செலவுகளுக்காக உபயோகிக்கலாம், இவைகளைப் பற்றிய சர்ச்சைகளைத் தீர்த்து வைக்கும் பொறுப்பை மேற்படி விசாரணைக் கமிட்டியாரிடமே ஒப்படைத்தும் விடலாம்.

—வந்தே மாதரம்—

ஜே. ஸி. குமரப்பா அவர்களால் எழுதப்பட்டு, தமிழில் மொழி பெயர்க்கப்பட்டுள்ள நூல்களும் கட்டுரைத் தொகுதிகளும் :

| நூலின் பெயர் | மொழிபெயர்த்தவர் | கிடைக்குமிடம் |
|---|---|---|
| கிராம இயக்கம் | குமுதினி | சக்தி காரியாலயம் மதராஸ், 14 |
| ஏசுநாதர் போதனை | " | " |
| நிரந்தரப் பொருளமைப்பு | " | " |
| ஜெயில் வாழ்க்கை | " | அச்சில் |
| கிராமியத் திட்டம் | மு. அருணாசலம் | " |

கட்டுரைத் தொகுதிகள்

| | | |
|---|---|---|
| ஸ்டர்லிங் நிலுவை | மீ. விநாயகம் | கதம்பம் |
| இந்திய ரயில்வேக்கள் | " | " |
| கொள்ளை முறை | " | " |
| பொறுப்பற்ற அரசாங்கம் | " | " |
| காந்தீயப் பொருளாதாரம் | " | ஸ்வதந்திர பாரதம் |